# ஏன் என்று அறிவோமா?




International Tamil University USA
உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமெரிக்கா

Recognized by the American Association of Adult and Continuing Education
and
Member, Association of American Educators

The Honorable Chancellor, President, and the Academic Associates
are hereby pleased to Present the

The Enlightenment Award

கமலினி கதிர்

ஏன் என்று அறிவோமா?

Dr. Richard L. Fuller B.D., Ed.D.
Chancellor

Dr. Selvin Kumar M.A., Ph.D.
Founder/President

## கமலினி கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் என்று அறிவோமா?

(தமிழ்ப் பூங்கா வெளியீடு)

ஆசிரியர்

## கமலினி கதிர்

**மணிமேகலைப் பிரசுரம்**

எண் 7, தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை–600 017,

தொலைபேசி 044–24342926 ; 24346082

email : manimekalaiprasuram@gmail.com

Web Site : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | **ஏன் என்று அறிவோமா?** |
| ஆசிரியர் | **கமலினி கதிர்** |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2018 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 13.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 12 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 176 |
| நூலின் இந்திய விலை | **ரூ. 100.00** |
| அட்டைப்பட ஓவியம் | விதுர்ஷன் ஸ்ரீரங்கன் |
| லேசர் வடிவமைப்பு | லஷ்மி கிராஃபிக்ஸ் சென்னை - 600 072. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழவேண்டுமென்று எமக்கு வாழ்ந்து காட்டி என்றும் என் நினைவில் தங்கள் இனிய நினைவுத்துளிகளை நீந்தவிட்டுக்கொண்டிருக்கும் என் இனிய அன்புப் பெற்றோருக்கு இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



"வாழ்க்கையை ஒரு அர்த்தமானதாக அமைத்துக்கொள்ள வேண்டும். சாப்பிடுவதும், எங்களுக்கான பொருட்களை வாங்குவதும், வெட்டிப்பேச்சுப் பேசுறதும், எங்களுக்காகவே வாழுறதும் அல்ல வாழ்க்கை. மற்றவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து அவர்கள் வாழ வழிகாட்டுறதும்தான் உண்மையான – நிறைவான – வாழ்க்கை." இது இந்நூலாசிரியர் தனது நூலின் இறுதியிற் கூறிய வரிகள். அதையே எனது வாழ்த்துரையின் தொடக்கமாகக் கொள்வது பொருத்தமானது என்பது எனது கருத்து.

எப்படியும் வாழலாம் என்று வாழ்வோர் நடுவே இப்படித்தான் வாழவேண்டுமென்று வரையறை செய்து வாழ்பவர்களே வாழ்க்கையில் தமக்குப்பின் எதையேனும் விட்டுச் செல்கிறார்கள். இவ்வாறு அவர்களால் விட்டுச் செல்லப்படுபவை சமுதாயத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பைப் பெறும்போது நீண்டு நிலைத்து வாழும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வதும் இயல்பாகிவிடுகிறது.

இப்படித்தான் உலகிற்தோன்றி வாழும் ஆக்க இலக்கிய முயற்சிகள் எல்லாம் உருவாகியிருக்க வேண்டும். காலம் ஏற்றுக்கொண்ட படைப்புகள் யார் தடுத்தாலும் கேட்காது நிலைத்து வரலாறாகி விடுகின்றன. ஆம்! தற்துணிவோடு தான் பார்த்ததற்கும், தான் பட்டறிந்ததற்கும் சுவையேற்றிக், கலைமெருகூட்டி இலக்கிய வடிமாக்கி நமக்குத் தருபவரையே படைப்பாளி என்று முத்திரை குத்திச் சமுதாயம் வரவேற்கிறது.

காலமாற்றமும், நாகரிக வளர்ச்சியும், கல்வி வாய்ப்புகளும் பெரும்பாலான பெண்களையும் இத்துறைக்கு இழுத்து வந்துள்ளன. இதன்காரணமாகப் பெண்களின் பார்வை, எதிர்பார்ப்பு, அபிப்பிராயம் என்பவற்றையும் அனைவரும் உள்வாங்கும் நிலை உருவாகியது.

இத்தகை படைப்பாளிகள் குடும்பம், வீடுவாசல், பிள்ளைகுட்டி என்று வட்டம்கீறி வாழும் சராசரிப் பெண்கள்போலல்லாது தனக்குப்பட்டதை எழுதிப் பதிய நினைப்பதைக் காண்கிறோம். கமலினி அவர்களது முயற்சியும் இப்படித்தான் அமைந்துள்ளது. தான் அறிந்தவற்றையும், தனக்குத் தெரிந்தவற்றையும் அடுத்தவரிடம் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்ற அவரது ஆதங்கம் இங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 'ஏன் என்று அறிவோமா?' என்ற தலைப்பிற்கேற்றவாறே நூலிற் தகவல்கள், செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. அறிவியல், ஆன்மீகம், குடும்பஉறவு, ஊரபிமானம், பொதுஅறிவு என்று பல பரப்புகளை ஆசிரியர் தொட்டுச் செல்கிறார். ஆசிரியர் தனது மொழிப்பற்றையும் சமயம் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையும் சந்தர்ப்பம் கிட்டும்போது நேர்த்தியாகப் பகிர்ந்துள்ளார் என்பதே என்து அபிப்பிராயம்.

புலம்பெயர்ந்து வந்த பலரது மன உளைச்சல்களின் வெளிப்படுத்தலாகவும் ஏக்கங்களின் வடிகாலாவும் இவரது எழுத்து அமைந்துள்ளது. வினா விடை அமைப்பிலே வாசிப்பவர் எளிதாக உள்வாங்கும் வண்ணம் உள்ளடக்கத்தை உரைத்துச் செல்லும் அழகு பாராட்டப்படவேண்டியதே. சந்ததி இடைவெளிபற்றிக் கவலைப்படும் ஒரு தாயாகத் தன்னை ஆக்கி அதற்கான தீர்வைத் தன்னூடாக வழங்க முயன்றமையும் பாராடுக்குரியவையே.

வாசகரின் மனநிலை அறிந்து அதற்கேற்றவகையில் தனது ஆக்கத்தை வாசகர்கள்முன் வைத்திருக்கும் கமலினி கதிர் அவர்கள் முயற்சி மேன்மேலும் வளரவேண்டுமென்ற எனது ஆவலை வாழ்த்தாக வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மேலும், ஆற்றலுள்ள அனைத்துப் பெண்களும் துணிந்து தமது ஆக்கங்களை வெளியிடக் கமலினி அவர்களது முயற்சி ஊக்கமாக அமையுமென்றும் நம்புகிறேன். நன்றி. வணக்கம்.

**சபா. அருள்சுப்பிரமணியம். M.A.**
தமிழ்ப்பூங்கா தமிழ்ப்பள்ளி நிறுவனர் - ஆலோசகர்,
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



தமிழச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் மட்டுமே நூலாசிரியர் கமலினி கதிர் அவர்களின் நூலுக்கு அணிந்துரை எழுத முனைகின்றேன்.

ஒரு எழுத்தாளராக அவரது “ஏன் என்று அறிவோமா?” என்ற நூலை வாசித்தபொழுது எழுதவேண்டுமென பேனா பிடிக்கும் அவர் விரல்கள் எத்தனை விந்தைகளை வெள்ளைத்தாளில் விதைத்து விட்டிருக்கின்றன என்று முதலில் அதிசயித்தேன். அதிசயமான விடயங்களையும் அறியவேண்டிய விடயங்களையும் அளவுகோல் கொண்டு வடிவமைத்திருக்கிறார் நூலாசிரியர் கமலினி கதிர் அவர்கள்.

உலகம் சிறியது, மனித அறிவு அதனை நாளும் பொழுதும் பகுத்தாய்கிறது. சிந்தையில் எண்ணற்ற தேடல்கள், அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாகவே வினாக்களும் விடைகளும் வருகின்றன.ஒவ்வொரு மனிதரும் எதை நோக்கி சிந்திக்கின்றனரோ அதை நோக்கித் தேட முயல்கின்றனர்.இத்தேடல்கள் விடாமுயற்சியை முதலில் கற்றுக் கொடுத்துவிடுகிறது. அதுவே நாளடைவில் தோல்விகளை ஏற்கும் மனநிலையையும் வெற்றியைக் கண்டு திமிராக இல்லாமல் அடக்கத்தையும் பரிசளித்து சமூகத்தில் இறந்த பின்பும் வாழும் வரத்தைக் கையளிக்கிறது எனலாம்.

நூலாசிரியர் கமலினி கதிர் அவர்களும் தேடல்களைத் தெளிந்த விளக்கத்தோடு மட்டுமின்றி சிறிய சிறிய படங்கள் மூலமாகவும் புத்திக்கு மட்டுமன்றி கண்ணுக்கும் சேர்ந்து விருந்தளித்துள்ளார்.

ஒரு உறவுப்பாலம் மனிதவாழ்வில் அவசியமென உணர்த்தும் நூலாசிரியர் அதன் ஊடாகவே எண்ணற்ற கேள்விகளுக்கான ஆழமான அறிவுபூர்வமான விளக்கங்களை உரையாடல் வடிவில் சுவாரசியமாக எழுதியுள்ளார். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற கோட்பாட்டில் நாம் கற்றதோடு அறிவு முழுமை பெறவில்லை.நாளும் கற்பதின் ஊடாக அறிவு விரிவடைகிறது என்பதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் ஆசிரியர் உலகமே வியக்கும் சுத்தத்துக்குப் பெயர்போன சுவிற்சர்லாந்தில் தனது பேனாவை அழுத்தியவர் உலகின் சந்து பொந்தெல்லாம் நுழைந்து தரமான இன்றைய தலைமுறைக்கும் தேவையான அறிவுபூர்வமான செய்திகளை சோர்வற்ற சொற்கோவையாக சொல்லியிருக்கிறார்.

காலச்சூழலில் தமிழன் மறந்தவை எவையெனவும் மறக்கக்கூடாதவை எவையெனவும் எழுதிச்செல்லும் ஆசிரியர் இன்றைய இளந்தலைமுறையினருக்குத் தகுந்த முறையிலே எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய கலாச்சார கோட்பாடுகளுக்கு விளக்கம் அளிக்கையில் "தமிழன் என்று சொல்லடா" என்பதில் பெருமை கொள்வர் என்கிறார்.

'ஏன் என்று அறிவோமா?' ஒரு கையடக்க அகராதிபோல் எனக்குள் ஓர் உணர்வு ஆக்கிரமித்தது. ஓராயிரம் விடயங்களை ஒரு நூலுக்குள் அடக்கிய ஆசிரியரின் அறிவாற்றல் வியக்க வைக்கிறது. இந்நூலை வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் உலகத்தைச் சுற்றிவந்த உணர்வை சிந்தையில் பதிவாக்கும் என்பது உண்மை.

அணிந்துரையில் ஆசிரியரின் நூலை ஆழம் பார்த்ததில் அடியேனின் அறிவுக்குள் சிக்கியதை தொட்டுக்காட்டியுள்ளேன். மாறாக ஏன் என்று அறிவோமா?என்ற நுலை விரிவாக்கம் செய்து நூலாசிரியரின் எழுத்துகளை மீண்டும் அணிந்துரையில் பதிவிடுவது தவறெனக் கற்றதன் விளைவாக இத்துடன் என் பேனாவை நிறுத்திக் கொள்கின்றேன். வாசகராகிய நீங்கள் வாசிப்பதற்கான வளமான வரலாற்றோடு கூடிய வரும் தலைமுறைக்குப் பயன்படக்கூடிய கருத்துகள் செறிந்த நற்றமிழ் நுலே 'ஏன் என்று அறிவோமா?'

வாசிப்பதன் ஊடாக ஏன் என்று அறிவோமே.

**மதிவதனி பத்மநாதன்**

எழுத்தாளர்

சூரிச், சுவிற்சர்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



மனிதனின் எல்லாவிதமான முன்னேற்ற முயற்சிகளுக்கும் அடிப்படையானது மக்களின் அறிவு வளர்ச்சியே ஆகும். வாழ்க்கை என்பது ஒரு வரம். அது வலியாக இல்லாமல் வரமாக இருக்க வேண்டுமென்றால் அறிவு சார்ந்த வளர்ச்சி இன்றியமையாதது. மனித நேயம் சார்ந்த அறிவு சிறு வயதிலேயே ஒருவனுக்குக் கிடைத்துவிடுமாயின் அதனைப்போல ஒரு வரம் வேறு எதுவுமில்லை. மாணவர்களுக்கான இயற்கை சம்பந்தமான அறிவியல் விளக்கங்கள், வாழ்வியலுடன் தொடர்புடைய சில விளக்கங்கள் எனக்குத் தெரிந்த அளவில் இதில் கொண்டுவந்துள்ளேன். கதை வடிவத்தில் அறிவியல் உண்மைகளையும், சரித்திர நிகழ்வுகளையும் அமைத்துள்ளேன்.

எங்கள் நாட்டின் அசாதாரணச் சூழல் காரணமாய் இப்போது பெற்றோராயிருக்கும் பலர் அறிவியல் சிந்தனைகளின்றிப் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் சொல்லத் தெரியாமல் வெறும் பணம் செய்யும் இயந்திரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துவிட்டார்கள். அடுத்த தலைமுறை அவ்வாறில்லாமல் அறிவோடும் மனிதநேயத்தோடும் வாழவேண்டும் என்பதே எனது நோக்கமாகும். அதன் அடிப்படையிலேயே இச்சிறு புத்தகம் எழுதப்பட்டது.

மாணவர்கள்தான் நாளைய சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தப்போகிறவர்கள். அவர்களுடைய அறிவுக்கண்ணைத் திறக்கச் செய்யும் சிறு முயற்சியில் 'ஏன் என்று அறிவோமா?' என்ற இச்சிறு பனுவல் உங்கள் கைகளில் தவழ இருக்கிறது.

இப்புத்தகத்தில் உடற்கூற்றுச் செய்திகள் எழுதுவதில் உதவிபுரிந்த எனது மகள் போன்ற (மருத்துவத்தாதி, கலிபோர்ணியா) வித்யாசீலிக்கும் பொருத்தமான படங்களைத் தெரிந்துபோடுவதிலும் அட்டைப்படம் செய்வதிலும் உதவிய எனது மாணவன் விதுர்ஷன் சிறீரங்கனுக்கும் நளாயினி பகீரதனுக்கும் அணிந்துரை எழுதிய எழுத்தாளர் மதிவதனி பத்மநாதனுக்கும் வாழ்த்துரை எழுதிய கனடா தமிழ்ப்பூங்கா தமிழ்ப்பள்ளி நிறுவனரும் ஆலோசகருமான திரு.சபாஅருள் சுப்பிரமணியம் M.A அவர்களுக்கும் இந்தப் புத்தகத்தை அழகுற அமைத்துத்தந்த மணிமேகலைப் பிரசுரத்துக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)

ஆசிரியர்

**கமலினி கதிர்**

சூரிச், சுவிற்சர்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இப்புத்தக விற்பனையில் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதி இலங்கையில் வாழ்வாதாரம் இழந்து நிற்பவர்களுக்குச் செல்ல இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் என்று அறிவோமா?

1

சுவிற்சர்லாந்தின் அழகான ஒரு கோடை காலம். திரும்பின பக்கமெல்லாம் பூமித்தாய் பச்சைப்பசேலென்று பச்சை ஆடை போர்த்தியிருந்தாள். வண்ண வண்ணப் பூக்கள் எங்கும் மலர்ந்திருந்தன. எல்லா இடங்களிலும் திடீர் திடீரென பூஞ்செடிகள் தோன்றி மலர்களுடன் சிரித்தன. பூக்களில் இல்லாத நிறங்களே இல்லையெனலாம். திவ்யாவின் மனதில் சிறுவயதில் பாடசாலையில் தான் பூக்கள் வரையச் சொன்னபோது பச்சைநிறத்தில் பூ வரைந்ததுக்கு ஆசிரியர் உங்கடை வீட்டிலை பச்சைப்பூ பூக்குதோ என்று கேலி பண்ணியதும் மற்ற




மாணவர்கள் தன்னைக் கன காலம் பச்சைப்பூ என்று கேலி செய்ததும் ஞாபகத்துக்கு வந்தது. இங்கு வண்ண நிறங்கள் மட்டுமா இருக்கிறது. பூக்களின் நடுவே புள்ளிகளும் விதம்விதமான கோலங்களும் மனதை மயக்குகின்றன. எத்தனை விதமான டிசைன்கள் பார்ப்பவர் மனங்களைக் கொள்ளையடித்தன. ஆனால் இவ்வளவு பூக்கள் இருக்குமிடம் எவ்வளவு வாசனையை அள்ளித் தந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகழகாய் பூத்திருக்கும் மலர்களிலே வாசனை மட்டும் மறைந்திருந்தது. வெப்பம் குறைவாய் இருப்பதால்தான் மணம் மறைந்திட்டுதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பாடசாலை கிளம்ப முதலே அம்மா திவ்யா, அப்பா சுந்தரேஸ், பிள்ளைகள் ஜீவன், சிந்துஜா, யுகி, ஆதித்யா எல்லோரும் சூரியநமஸ்காரம் செய்துவிடுவார்கள். சூரியன் தெரிகிற கோடைகாலமாகட்டும் தெரியாத பனி காலமாகட்டும் பன்னிரண்டு அப்பியாசங்களும் செய்தே தீரவேண்டும். ஏழு நிமிடத்தில் செய்து முடிக்கும் ஒரு நல்ல விடயத்தைத் தட்டிக்கழிக்க யாரும் முயல்வதில்லை. அவர்களுக்கும் அப்பயிற்சியால் தாங்கள் சுறுசுறுப்பாக இருப்பது தெரிகிறது. பெற்றோரும் சேர்ந்து செய்வதால் சாட்டுச் சொல்லித் தட்டிக் கழிக்க முடியாது. சுந்தரேஸ் நேரத்துடனே பிரணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சி செய்துவிடுவார். யுகியும், ஆதியும் மூச்சுப்பயிற்சி செய்வதற்குத் தங்களுக்கு மூச்சை அடக்கவே முடியாது திணறுகிறது என்று கதைகள் சொல்லிக் கடத்திக்கொண்டே வந்தார்கள். அப்பாவும் அப்பப்பாவும் அதன் முக்கியத்தை அடிக்கடி சொல்லிக் கொண்டே வருவார்கள்.




பள்ளியால் வந்து ஆடை மாற்றுமுன்பாகவே அம்மாவிடம் கேள்வி கேட்கத் தொடங்கினான் ஜீவன். "இலங்கையின் ஆதிக் குடிகள் யாரம்மா?" "ஏன் அதில் என்ன சந்தேகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள்தான். ஆதிகாலத்தில் நாகர், இயக்கர் என்று இரு இனத்தவர்கள் வாழ்ந்தார்கள். நாகர்கள்தான் தமிழர்கள். அவர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். தெற்கில் வாழ்ந்த இயக்கர் வங்காள தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு வந்த விஜயனுடனும் அவனுடைய உறவுகளுடனும் சேர்ந்து சிங்களவர் ஆயினர். நாடற்ற விஜயன் இயக்க அரசியை மணந்து அதனால் அரசனாக வந்ததை விரும்பாத இயக்கர் பலர் விஜயனின் ஆட்களுடன் சண்டையிட்டு இறந்தனர். எஞ்சியவர்கள் சிங்களவர் ஆனார்கள். இதுதான் சரித்திரம். ஆனால் காலத்தின் கோலத்தால் உண்மைகள் மறைக்கப்பட்டு நாம் நாடற்றவர்களாக சித்திரிக்கப்படுகிறோம். திவ்யா புரிய வைத்தாள். "ஓஹோ அப்படியா. எங்கடை தலைமுறைக்கு இதுகள் தெரியவில்லையே" என்றான் ஜீவன். "இது கவலைப்பட வேண்டிய பெரிய விடயம். அதை எங்களைப் போன்ற பெற்றோர் அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். அது எங்கள் கடமை. இந்தக் கேள்விக்காகத்தான் நான் இவ்வளவுநாளும் காத்திருந்தேன். எப்போது இந்தத் தேடுதல் உங்களுக்கு வரப்போகிறதோ அன்று இது பற்றி சொல்ல வேண்டும் என்றிருந்தன். சந்தோஷமாயிருக்கு ஜீவன். நாங்க யார் என்ற தேடுதல் கட்டாயம் வரவேண்டும். எங்கடை மூதாதையர்



யார்? அவர்களின் வரலாறு இன்னும் நிறைய நீங்க தேடி அறிய வேண்டும்" திவ்யா கூறினாள். ஜீவனுடன் சேர்ந்து யுகி, சிந்துவும் ஆர்வமாகக் கேட்டறிந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதோடு எங்கள் பழைய ஏடுகளில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்களை இன்று நாங்க படித்து பயன்படச் செய்தவர்களைப்பற்றி நீங்க நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்" என்றாள் திவ்யா. "யார்? யாரம்மா?" கேட்டாள் சிந்து. "இந்தியாவில் உ.வே. சாமிநாதய்யர் என்பவரும் இலங்கையில் சி.வை.தாமோதரம்பிள்ளை என்பவரும் இல்லையென்றால் எங்கள் பழந்தமிழ் நூல்கள் எங்கள் கைகளுக்கு கிடைக்காமலே போயிருக்கும். தங்கள் வாழ்க்கையையே இத்தேடலில் செலவிட்டு தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றியிருக்கிறார்கள். சாமிநாதய்யர் 3000க்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து அச்சில் ஏற்றியிருக்கிறார். அவரில்லையென்றால் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற ஐம்பெருங்காப்பியங்கள் எங்களுக்குத் தெரியாமலே போயிருக்கும். தாமோதரம்பிள்ளைதான் தொல்காப்பியம் என்ற எங்கள் இலக்கணநூலைத் தேடி அச்சிட்டு எங்களுக்குத் தந்தவர்.இவர்கள் இரண்டு பேரும் வீடுவீடாகப் போய் ஏட்டுச்சுவடிகளை எடுத்து செல்லரித்துப்போனவற்றைத் திருத்தி அச்சிலேற்றி அவர்கள் தொண்டு நினைக்கவே மனம் சிலிர்க்கிறது."திவ்யா அவர்கள் தியாகத்தை தன் சொற்களால் பிள்ளைகளின் மனதில் ஏற்றிவைத்தாள். அப்போது அங்கு வந்த RejNu] ;"ஆகா நல்ல விடயங்கள் சொல்றீர். கட்டாயம் இவர்கள் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் தமிழர் மீதுதான் பயணப்பட்டுச் செல்லவேண்டும். வேறொருவர் முதுகில் நாம் பயணப்பட முடியாது" என்றார். "விளங்குகிறது அப்பா. இனித் தமிழை எடுத்துச் செல்லவேண்டியவர்கள் நாங்கள்தான்" என்று சொன்னான் ஜீவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"தமிழ் படித்து வேலை கிடைக்கவா போகிறது என்று என்னுடன் படிக்கும் ஒரு நண்பன் சொல்றான் அப்பா" என்றான் ஜீவன். "வெறும் உழைப்புக்காக தாய்மொழியை விற்கிறதா? உழைப்பு வேறு மூச்சு வேறு. தமிழ் எங்களுக்கு சுவாசம் போன்றது. தமிழ் வழியில் படிப்பதையே கேவலமாகச் சொல்ற ஆட்களும் எம்மிடையே இருக்கத்தான் செய்யினம். என்ன செய்கிறது. அவர்களும் உணரவேண்டும்" என்ற அப்பா தொடர்ந்தார். 170 வருடங்களுக்கு முன்பே எங்கடை ஊர் மானிப்பாயில் தமிழில் மருத்துவப் படிப்பே இருந்தது. 1847இல் கிறீன் ஹொஸ்பிற்றலைத் திறந்து 1848 இலேயே மருத்துவக் கல்வியையும் ஆரம்பித்தார். இலங்கையிலேயே முதல்மருத்துவக்கல்லூரி இதுதான். அதற்கு வேண்டிய நூல்கள் கூட இருந்தன. "ஆ அப்படியா. நாங்க நினைத்தம் தமிழில் வைத்தியப்படிப்பு படிக்க ஏலாது என்று" சிந்து கூறினாள். "இதனை ஆரம்பித்து வைத்தவர் டாக்டர் சாமுவேல் பிஸ் கிறீன் என்ற அமெரிக்க டாக்டர். இவர்தான் முதல் "உடல்கூறு" என்ற மருத்துவ நூலை தமிழில் எழுதியவர்.' ஏழெட்டு நூல்கள் தமிழில் எழுதினார். அவரைத் தொடர்ந்து பலர் எழுதினார்கள்." "ஏனப்பா எப்படி அவருக்கு தமிழ் தெரியும்?" ஆதி கேட்கவும், "அவர் கிறிஸ்தவ திருச்சபை மூலம் யாழ்ப்பாணம் சென்று மானிப்பாயில் 23 வருடங்கள் மருத்துவராய் பணியாற்றியிருக்கிறார். யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவுடனேயே மக்களுடன் பேசவேண்டும் என்ற ஆவலில் தமிழ் படித்தார். தமிழின்மீது வந்த காதலால் தன்னுடைய பெயரையே பச்சையப்பன் என்று மாற்றி வைத்தாரென்றால் பாருங்களேன்" என்றார் அப்பா. "ஓ கிறீன் என்ற பெயரைத்தான் பச்சையப்பன் என்று மாற்றினாரோ?" என்று யுகி கேட்டான். "ஓமோம், அது மட்டுமல்லாமல் உலகிலுள்ள சிறந்த மொழிகளில் தமிழ் முதன்மையானது என்றும் சொல்லியிருக்கிறார். இப்பவும் இருக்கிறது அவர் தொடக்கிய கிறீன் ஹொஸ்பிற்றல்." "அந்த ஹொஸ்பிற்றலைத் தெரியுமப்பா. பெரியப்பா காட்டினவர். ஆனால் இந்தக் கதைகள் தெரியாது." ஜீவன் சொல்லவும், அப்பா, "அவரது பிறந்த இடமான மாச்சூசெட்ஸ் என்ற இடத்தில் அவரின் கல்லறையில் "தமிழ் மருத்துவநூல் தந்தை" என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. அது அவருக்கும் பெருமை, தமிழருக்கும் பெருமைதானே" என்றார். இப்ப



கனபேர் தமிழில் பெயர் வைக்காமல் அர்த்தமேயில்லாமல் வெவ்வேறு மொழிகளில் பெயர் வைக்கும்போது எத்தனையோ வருடங்களுக்கு முன்பு ஒரு ஆங்கிலேயர் தமிழில் தன் பெயரை மாற்றி வைத்திருக்கிறார் என்றால் எங்களுக்கு எவ்வளவு பெருமை" திவ்யா கூறினார். "ஏன் எங்கடை ஒற்றைக்கொம்பு இரட்டைக்கொம்பு கண்டுபிடித்த இத்தாலியரான கொன்ஸ்ரன்ரைன் என்பவர் தன் பெயரை வீரமாமுனிவர் என்று தமிழில் மாற்றவில்லையா? அதுவும் பெரிய விஷயம்தானே" என்றார் அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகி தனக்கு வந்த வாழ்த்து அட்டைகளையும், பரிசுப் பொருட்களையும் மிகவும் கவனமாக வைத்திருப்பான். சிலவற்றை உபயோகிக்காமல் பத்திரமாக வைத்திருந்து அவ்வப்போது பார்த்து மகிழ்வான். அவன் அப்படி மகிழ்ந்து இருக்கும் தருணத்தில் பக்கத்தில் வந்த திவ்யா "யுகி பரிசுப் பொருட்களைப் பார்ப்பதில் எவ்வளவு சந்தோஷம் என்ன? நீங்க இப்படிக் கவனமாக வைத்திருப்பதைப் பார்த்து திரும்பவும் விலை கூடிய பரிசு கொடுக்க ஆசை வருகிறதில்லையா?" கேட்கவும் "நீங்க எனக்கு ஒரு பரிசு தரப்போறீங்களா? " என்று ஆவலுடன் கேட்டான். "ஓம். நான் தேவைப்படும்போது தருவன். கடவுள் எங்களுக்கு இந்த உடம்பு என்ற விலைமதிக்க முடியாத பரிசுப்பொருளைத் தந்திருக்கிறார்தானே. அதை நாங்க மூச்சுப்பயிற்சி செய்து ஆரோக்கியமாய் வைத்திருந்தால் அவரும் சந்தோஷப்பட்டு இன்னும் எங்களுக்குப் பரிசு தருவார்தானே" சொல்லி முடிக்கவும் "ஓமென்ன? நான் அதை நினைக்கவேயில்லை. நான் இனிச் செய்வனம்மா. இப்ப விளங்குது. வின்ரறுக்கு சளி பிடிக்காதென்ன? அண்ணாவும், அக்காவும் அதுதானே ஹெசுன்டாய் (சுகமாய்) இருக்கினம். நான் செய்ய ஆதியும் பார்த்திட்டுச் செய்வா. நான் செய்யாமல் விடுறதாலைதான் அவவும் செய்யாமல் நெடுக சளி, இருமல் என்று கஷ்டப்படுகிறா". "கெட்டிக்காரன். விளங்கீற்றீங்க. இதுபோதும்." அன்புடன் உச்சிமுகர்ந்தாள்.

❖❖❖

## 2




இந்தக் கோடைவிடுமுறை வந்தாலே வீட்டில் பிள்ளைகள் நிற்பதற்கே விரும்பாயினம். தாயகம் சென்று அப்படியே இந்தியா என்று போய் வந்துவிட்டார்கள். தாயக நினைவுகள் மனதைவிட்டு நீங்க மறுத்தன. பூக்களின் மணமும் வேப்பங்காற்றும் வயல்வெளிகளும் கோயிலடியில் உட்கார்ந்திருக்கும் போது கிடைக்கும் மனவமைதியும் அந்த மண்ணின் மணமும் மனதைவிட்டு அகல மறுத்தன. மரக்கறிகளின் சுவை அதுவும் கீரை, மரவள்ளிக்கிழங்கின் சுவை நாக்கில் இன்னமும் ஒட்டியிருப்பது போன்ற பிரமை.




புலினிகளினதும், கிளிகளினதும் ஒலி எங்குமே அனுபவிக்க முடியாத ஒன்று. சேவல் கூவும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் போலவே இருக்கிறது. ஒற்றைக்குயிலின் கூ கூ ஓசை மனதுக்கு எவ்வளவு சுகமாக மனதை வருடுவதுபோல். இதை எங்கள் மண்ணில் மட்டுமே கேட்க முடியும் போலை. இந்தச் சுகமே ஒரு தனிதான். இதை அனுபவித்தவர்களால் மட்டுமே உணரமுடியும். அம்மியில் சம்பல் அரைத்துச் சாப்பிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், ஆட்டுக்கல்லில் தோசைக்கு அரைத்து உரலில் இடித்த சம்பலுடன் சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டது நிறைவேறவே இல்லை. அங்கு ஆட்டுக்கல்லையும் காணவில்லை. அம்மியையும் காணவில்லை. பின் மனதைத் தேற்றினாள். நாங்கள் மட்டும் வசதிகளுடன் வாழவேண்டும், அவர்கள் அப்படியே நாங்க விட்டிட்டு வந்த மாதிரியே இருக்க வேண்டும் என்று நினைத்தது எவ்வளவு அபத்தம். அவர்களும் வசதிகளை அனுபவிக்கத்தானே வேண்டும்.





ஆனாலும் அங்கு உறவுகள், நண்பர்கள் விலகி நிற்பது மனதை வருத்தியது. அவர்கள் எங்களை வேற்று நாட்டவர்கள் போல் விலக்கி தள்ளியே நின்றார்கள். எம்மைப் பணம் காய்ச்சும் மரங்களாகவும் தாங்கள் கேட்கும் போதெல்லாம் கொடுப்பதற்கு வெளிநாட்டு உறவுகள் தயாராயிருக்க வேண்டுமென்று நினைப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. ஏன் இந்த உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது? இங்கு உள்ளவர்கள் காசுக்கு மேல் இருப்பதுபோல் நினைக்கத் தலைப்பட்டதற்கு வெளிநாட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போபவர்களதான் காரணமாய் இருந்திருக்க வேண்டும். அங்கு உள்ள உறவுகளுக்குத் தம்மை பணக்காரர்கள்போல் காட்ட சிலர் போடும் ஆடம்பர வேஷம்தான் முக்கிய காரணமாயிருக்க வேண்டும். நாணய மாற்று விகிதத்தால் வெளிநாட்டுப் பணம் தாயகத்தில் கூடிய மதிப்பு பெறுவதால் மட்டுமே இங்குள்ளவர்களால் தாரளமாக அனுப்பவும் அங்கு போய் செலவழிக்கவும் முடிகிறது. ஆனால் இங்கு நாம் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கிறோம் என்பதோ எமது எவ்வளவு செலவுகளை ஒறுத்துச் செய்கிறோம் என்பதோ அவர்களுக்கு விளங்க நியாயமில்லை. நோய் வருகிறதோ இல்லையோ இங்கு மாதாமாதம் மருத்துவக் காப்பீட்டுத் தொகையாக ஒரு குறித்த தொகை கட்டவேண்டியது இன்றியமையாதது. உறைகின்ற பனியில் விடிகாலையிலே வேலைக்குச் செல்லும் ஆண்கள் பெண்கள் எல்லோருமே விரைவில் எத்தனையோ உடல் உபாதைகளுக்கு ஆளாவது அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? எண்பது சதவீதமானோர் முதுகுவலியாலும் கால் சம்பந்தமான நோய்களாலும் பாதிக்கப்பட்டு மாத்திரைகளுடன் வாழ்வது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. கணவன் மனைவி பிள்ளைகள் சேர்ந்து உணவருந்துவது எத்தனை வீடுகளில் நடக்கிறது. பிள்ளைகளுக்காக கணவன் ஒருநேரமும் மனைவி மற்றநேரமும் வேலைக்குச் செல்வதுதான் பெரும்பாலான வீடுகளில் நடக்கிறது? தங்களின் எத்தனை சின்னச்சின்ன ஆசைகளைத் தியாகம் செய்து உறவுகளுக்கு பணம் அனுப்புகிறார்கள். அதை கொஞ்சம் அவர்கள் உணர்ந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். அங்கு சகோதரங்களுக்கு இந்தப் பணம் அனுப்புகிறது, கோயில்களுக்கு அனுப்புவதெல்லாம் எங்களோடை சரி. அடுத்த தலைமுறை இதைச் செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதில்லை. தாயக நினைவுகள் சுயிங்கம் போல் ஒட்டிக் கொண்டு நீங்க மறுத்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு போனதால் தேவையில்லாததுகளை நினைத்து மனதைப் போட்டுக் குழப்புவதாகக் கணவர் குறை கூறினாலும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இலங்கை சென்றுவந்தபிறகு பிள்ளைகளுக்கு நிறையச் சந்தேகங்கள். பெரியப்பா வீட்டில் தங்கியிருந்தபோது அங்கு பார்த்த, கேட்ட பல விஷயங்கள் பற்றிக் கேட்டவண்ணமே இருக்கிறார்கள். இரவில் கூட்டக் கூடாதென்று பெரியம்மா சொன்னாவாம். ஏனென்று கேட்டதற்கு லக்ஷ்மி போய்விடுவா என்று சொன்னது. இவர்களுக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. திவ்யா புரியவைத்தாள். "பழைய காலத்தில் மின்சாரவசதி கிடையாது. சிறிய விளக்கு வெளிச்சத்தில் கீழே ஏதும் பெறுமதியான பொருள் விழுந்திருந்தால் அதைக் கூட்டியெறிய வாய்ப்புண்டு.அதனாலேயே இரவில் கூட்டக் கூடாது என்று சொல்லிவைத்தார்கள்.அந்தக் காலத்துக்கு அது பொருந்தும். தற்போது அது தேவையில்லை" யென்று கூற "ஒரு சிறிய விஷயம் எப்படியெல்லாம் மிகையாக்கப்பட்டிருக்கிறது" என்று வியந்தான் ஜீவன்.

பெரியம்மா இவர்களையும் கோயிலுக்குக் கூட்டிச்சென்ற நாட்களில் அவர் பாம்புச் சிலைக்கு பால் ஊற்றிக் கும்பிட்டாவாம். இவர்களையும் ஊற்றச் சொன்னாவாம். அதற்கு ஜெகன் மறுத்திட்டானாம், ஏனென்று தெரியாமல் தான் செய்ய முடியாதென்று. தோஷமெல்லாம் தீருமென்று சொன்ன காரணம் அவனுக்கு விளங்கவில்லை. அம்மாவைக் கேட்க திவ்யா "முந்தின காலத்தில் ஊர்களில் பாம்புகளின் தொந்தரவு நிறைய இருந்தது. அவற்றைக் கொலை செய்ய விரும்பாத மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் இனவிருத்தியைக் குறைப்பதற்காக பாம்புகளுக்கு பால் வைத்தார்கள். பால் பாம்புகளின் முட்டைகளை வளரவிடாமல் அழிக்கக்கூடியது" என்பதை விளக்கினாள். "அத்தோடு பாம்பு தங்களை ஒன்றும் செய்யாமல் காக்க வேண்டுமென்றே பாம்புச்சிலைகள் செய்து வணங்கினார்கள். அது அந்தக் காலத்துக்கு ஏற்றதாக இருந்திருக்கலாம். இங்கு அது தேவையில்லை. இங்கு பாம்புகள் இல்லை" என்பதையும் புரியவைத்தாள். ஏன் எதற்கு என்று கேட்காமல் எதற்குச் செய்கிறார்கள் என்பது இவர்களுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

சிந்து "இந்துக்கடவுள்களின் சிலைகளில் மயில், பாம்பு, சேவல், எலி, சிங்கம், மாடு, புலி என்று மிருகங்களை வைத்தது அவற்றை எல்லோரும் நேசிக்க வேண்டும் என்பதற்காக என்று நீங்க சொன்னீங்கதானே அம்மா. கடவுள் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறார் என்றதற்காகத்தான் அப்பிடி வைச்சிருக்கு என்று நான் சொல்ல, பெரியம்மா அப்பிடி யில்லையென்கிறா. கடவுளைப் பற்றி அப்படிச் சொல்லக் கூடாதென்றா" என்றாள். "அவர்கள் நிறைய யோசிக்கிறதில்லை. அங்கு இருக்கிறவர்கள் என்று இல்லை. இங்கும் எவ்வளவோ பேர் அப்படித்தான் இருக்கினம். நாங்க எங்களுக்கு தெரிந்ததைச் செய்வம். எங்களுக்கு இது சரி. அவர்களுக்கு அது சரி. அபிப்பிராயங்கள் மாறுபடலாந்தானே" என்றாள். எதையும் இதுதான் சரி என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஒவ்வொருவரும் பார்க்கும் கோணம் ஒவ்வொருமாதிரி இருக்கலாம். அவ்வளவுதான்.

பெரியப்பா கடவுள் சிலைகளுக்கு கொடுத்த விளக்கம் எல்லோருக்குமே மெத்தவும் பிடித்திருந்தது. கருங்கல்லில் சிலை செய்வது ஏனென்பதற்கு அறிவுபூர்வமாக விளக்கினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கல்லில் நெருப்பு உள்ளது. அது நல்லதிர்வுகளை தன்னகத்தே அடக்கிவைத்திருக்கும். கோயிலுக்குச் செல்பவர்களுக்கும் அது கடத்தப்படும். அதற்காகத்தான் மேலாடை அணியாமல் கோயில் செல்வதென்றும் காலணி அணியாமல் கோயிலைச் சார்ந்த இடங்களில் நடக்கும்போது நல்லதிர்வுகள் எமக்கும் கடத்தப்படும் என்றும் கூறினாராம். தீபாராதனை ஏன் மூன்றுதரம் காட்டுவது என்பது பற்றி ஜீவன் கேட்டதற்கு நல்ல காரணம் சொல்லியிருக்கிறார். ஒளி மூலம் இறைவனை உணரலாமென்றும் முதல்தரம் காட்டுவது உலக நன்மைக்காகவும் இரண்டாவது தரம் காட்டுவது நாட்டு நன்மைக்காகவும் மூன்றாவது முறை காட்டுவது எல்லா உயிரினங்களின் நன்மைக்காகவும் என்பதை விளக்கியிருக்கிறார். "கடவுளுக்கு சாமரை ஏன் வீசுவது கடவுளுக்கு வியர்க்குமா?" என்று ஆதி கேட்டதற்கு "மந்திரங்களின் ஒலியலைகள் பக்தர்களுக்கு பரவும் வண்ணம்" என்று கூறியிருக்கிறார். அதோடு மயில் இறகிற்கு ஒலிகளைக் கடத்தும் சக்தி உண்டு என்பது பிள்ளைகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதைத் தமிழர்கள் கண்டுபிடித்தார்களே அது எவ்வளவு கெட்டித்தனம் என்று ஆச்சரியப்பட்டார்கள். ஓ அதுதான் காவடியிலும் மயிலிறகு வைத்திருக்கிறதா என்று யுகி தன் கண்டுபிடிப்பைத் தெளிவாக்கினான். சிந்துவுக்கு நன்றாகவே பிடித்த விளக்கம் இலிங்கத்துக்கும் வேலுக்கும் கொடுத்த விளக்கமே. அது தனக்குத் தெரியாதென்று கோயில் ஐயரிடம் கேட்டு இவர்களுக்குச் சொன்னாராம். உருவமற்ற கடவுளை அறியவும் முடியாது. பிரிக்கவும் முடியாது. கடவுளுக்கு உருவம் இல்லையென்பதை விளக்குவதே இலிங்க வழிபாடு. சிவனும் சக்தியும் சேர்ந்ததுதான் இலிங்கம். மேலே இருக்கும் இலிங்கம் சிவனையும் கீழ் பீடம் சக்தியையும் குறிக்கிறது. வேலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பைக் கூறும்போது கூர்மை அகலம், ஆழம் ஞானம். கூரிய அறிவு அகலமாகவும் ஞானம் ஆழ்ந்ததாகவும் இருக்கவேண்டும் எனக் கூறினார்.அந்த ஐயருக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது என்று வியந்தார்கள்.

❖❖❖

## 3

பாடசாலைக்கு திவ்யா மூவரையும் கூட்டிச்செல்வது வழக்கம். ஜீவன் மட்டும் நண்பர்களுடன் தனித்தே போய்விடுவான். யுகியும் தானும் தனியப் போகப்போவதாக சொல்லிக்கொண்டிருப்பான். திவ்யா அனுமதிப்பதில்லை. அடுத்த வருடத்திலிருந்து எல்லோரும் தனித்தே செல்வதாக முடிவெடுத்து இருந்தார்கள். சுவிசில் தனித்துச் செல்வது பயமேயில்லாத விஷயம். திரும்பும்போது மூவருமாக வந்துவிடுவார்கள். சிலநேரங்களில் அப்பப்பா நடக்கப் போய்விட்டு வரும்போது அவர்களுடன் வருவார்.பிள்ளைகளுக்கு கதை கேட்க மிச்சம் பிடிக்கும். அப்பப்பாவும், திவ்யாவும் நிறையவே கதைகள் சொல்வார்கள். திவ்யா பிள்ளைகள் பள்ளியால் வரும்போது வீட்டில் நிற்பாள். பள்ளியால் வந்தவுடன் ஆதி "அம்மா எனக்கு ஸ்கூலில் ஒரே கொட்டாவி கொட்டாவியாய் வந்துகொண்டிருந்தது. வெட்கமாய் இருந்திச்சம்மா. ஏன் இப்படிக் கொட்டாவி வாறது?" என்று கேட்டாள். "லுங்ஙேயில் (சுவாசப்பை) காபன்டைஒக்சைட் கூடினாலும் பசி, சோம்பல், நித்திரையுணர்வு இவைகளாலையும் வரும். மூளைக்குப் போதியளவு குளுக்கோஸ் போகாட்டாலும், மூளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்வதாலையும் கொட்டாவி வரும். இதை நிற்பாட்டுறதென்றால் ஆழ்ந்த மூச்சு விடுவதும், குளிர்நீர் குடித்தலும்தான் ஒரே மருந்து. இது நோயில்லை. சுவாசப்பைக்கு ஒக்ஸிஜின் தேவைப்படுது.அவ்வளவுதான்" என்றாள் திவ்யா. "எனக்கு கொட்டாவி வர, பக்கத்திலை இருந்த லுசியும் விட்டா. ஏனம்மா அப்பிடி?" "அது ஏனென்று தெரியேல்லை. அப்பிடி வாறது" என்றாள் திவ்யா.


இலங்கையுடன் இந்தியாவும் சென்று வந்ததிலிருந்து கடவுள் பற்றிய நிறையக் கேள்விகள் பிள்ளைகளின் மனதைக் குடைந்தன. "நீங்க தியானத்தில் இருப்பீங்களே அப்பப்பா அப்போது என்ன தெரியும்? கடவுள் தெரிவாரா?கடவுள் உங்களோடை பேசுவாரா?" சிந்து கேட்டாள். "நீங்க இப்ப சின்னப்பிள்ளைகள்.தியானம் பற்றி விளங்காது. இப்ப நீங்க செய்வீங்களே மூச்சுப்பயிற்சி அதுபோதும். ஆனால் அதை விடாமல் செய்துகொண்டு வாருங்கோ. அது தேவையான நேரத்திலை தேவையானதை உங்களுக்குக் காட்டும். மூச்சுப்பயிற்சியினால் உடல் நலம் மட்டுமின்றி மனநலமும் மேன்மையடையும். எமது தீராத பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும். இலங்கையில் இருக்கிற பெரியப்பா பிரணாயாமம் பற்றி சொன்னாக் கேட்க மாட்டார். இப்ப பாருங்கோ எவ்வளவு கஷ்டப்படுகிறார். உங்கடை அப்பா எல்லாம் கேட்டுச் செய்து இப்ப உடலாலும் மனதாலும் எவ்வளவு நல்லாயிருக்கிறார்" அப்பப்பா சொல்லவே "ஏன் அப்பப்பா பெரியப்பாக்கு நல்ல அறிவு. எங்களுக்கு எவ்வளவு விஷயங்கள் சொல்லித் தந்தார்." ஜீவன் சொன்னான். "ஓம் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லில் வல்லர் செயலில் அல்லர்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். அப்படியென்றால் எல்லோரும் கேட்கவே "அவருக்கு எல்லாம் தெரியும். எல்லாருக்கும் சொல்லுவார். தான் பிறகு செய்வம் என்று அந்தந்த நேரத்தில் செய்யவேண்டியதைச் செய்கிறது இல்லை. ஒரு உதாரணம் சொல்றன் கேளுங்கோ. ஒரு பென்சில் இருக்கு. அதற்குள் எழுதக்கூடிய ஆற்றல் வாய்ந்த பொருள் இருக்கு. ஆனால் அதைச் சீவினால்தானே எழுதமுடியும். அப்படியே வைத்திருந்தால் என்ன பயன்? சொல்லுங்கோ பார்க்கலாம்" என்று விளங்கப்படுத்தினார். ஜீவன் கேட்டான், "ஏன் அப்பப்பா பிரணாயாமம் செய்தால் கஷ்டமே வராதா?" "அப்படியென்று இல்லை. ஆனால் எல்லாவற்றையும் சமாளிக்கும் திறன் வருமென்று நினைக்கிறேன்" என்றார். "நான் கேட்டதுக்கு நீங்க ஒன்றும் சொல்லேலையே அப்பப்பா. கடவுள் உங்களோடை பேசுவாரா? அவரைப் பார்ப்பீங்களா?" சிந்து விடாமல் கேட்டாள். "தியானத்திலை இருக்கும்போது கிடைக்கும் ஆனந்தம் இருக்கே அதுதான் கடவுள். அது ஒரு உணர்வு. மனம் அமைதியாக இருந்தால் கடவுள் பேசுறது கேட்கும். கடவுளை நாங்க நேசிக்க வேணும். அவ்வளவுதான்." "அவ்வளவுதானா. நாங்க நினைத்தம் கடவுளைப் பார்க்கிறது கஷ்டமென்று." சிந்து கேட்டாள், "ஆனந்தம் என்று சொல்றீங்களே அப்பப்பா ஆனந்தம் என்ற சொல் தமிழ்ச்சொல் இல்லையென்று தமிழ் ஸ்கூலிலை படித்தம். அப்படியா?" "அது தெரியாது. எனக்குத் தெரிந்தது வெளியில் உள்ள செயல்களால் ஏற்படுவது மகிழ்ச்சி. உள்ளுக்குள் ஏற்படுவது ஆனந்தம். அதை வெளியில் காணமுடியாது. அது இறையுணர்ச்சியால் மட்டுமே ஏற்படுவது. அதை மட்டும்தான் ஆனந்தம் என்று சொல்வது." "ஓ அப்படியோ?" என்று சிந்து ஆர்வமுடன் கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், வள்ளலார் எல்லோரும் கடவுளைப் பார்த்தார்கள். நாங்க முயற்சி செய்வம். கடவுளிட்டை அது வேணும் இது வேணுமென்று கேட்காமல் நேசிப்பம்" என்றார். "அப்பிடிக் கேட்டாத் தப்பா அப்பப்பா?" "தப்பென்றில்லை. அவருக்குத் தெரியாதா? எங்களுக்கு எது



தரவேண்டும் என்று. சிலவேளை கனக்க தர நினைச்சிருப்பார். கேட்டவுடன் நாங்க கேட்டதையே கொஞ்சமாகத் தந்திடுவார் என்ன அப்பப்பா" என்றான் யுகி. "ஓ அப்படியும் இருக்கும். அதோடு கேட்டுக் கும்பிடுறது பக்தியில்லை. வியாபாரம். நீங்க இதைச் செய்தால் நான் காணிக்கை தருவன் என்பதோ பிரதட்டை செய்வன் என்பதோ தப்பென்று நான் நினைக்கிறன்.



மற்றவர்கள் அப்படி நினைக்காததால் நான் சொல்றது சரியென்று சொல்ல மாட்டன். இதுகளெல்லாம் அவரவர் விருப்பம்" என்றார்.

"கோயிலில் கடவுள் சிலைகளுக்கு முன்னால் சிலபேர் காசு போடுவினமே, அது ஏனம்மா?" கேட்ட ஜீவனுக்கு "அது மிகவும் நல்ல பழக்கம் இல்லை. கடவுளை அவமதிக்கும் செயலாகும். கடவுள்தான் எங்களுக்கு எல்லாமே தருகிறார். அவருக்குப்போய் அதுவும் சில்லறைக் காசுகளை வைக்கிறது மிச்சம் பிழை இல்லையா மாமா" என்றாள் திவ்யா. "ஓமோம். அது சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை. பிச்சைக்காரருக்குப் போடுவதுபோல் எனக்கும் பார்க்கும்போது மனதுக்கு கஷ்டமாக இருக்கும். என்ன செய்கிறது. நாங்க சொன்னால் யாரும் கேட்கப்போகிறார்களா என்ன?" "ஏன் மாமா நீங்க பெரியவர் அப்படிப் பார்த்தால் சொல்லலாம் தானே." "இல்லையம்மா. கிறீஸ்தவர்களுக் கென்றால் எல்லாம் இப்படி இப்படித்தான் செய்ய வேண்டுமென்று அவர்கள் சேர்ச் சொல்றபடி செய்வார்கள். இந்துசமயம் சுதந்திரமானது. அவரவர்கள் விருப்பப்படி செய்யலாம்.தாங்கள் செய்வது சரியா பிழையா என்பதை அவர்கள்தான் ஆராய்ந்தறிந்து செய்யவேண்டும். அதுதான் வள்ளுவர் சொன்னாரே' எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று. மற்றவர்களைத் திருத்துவதற்கு நாங்க பிறக்கேல்லை. எங்களை உயர்த்துவதுதான் எங்கடை இலட்சியமாயிருக்க வேண்டும்" விளக்கினார் அப்பப்பா.

"ஒருவருக்குமே தெரியாதிருந்த எங்கடை சமயத்தைப் பற்றி முதன்முதலில் உலகத்துக்குச் சொன்னவர் சுவாமி விவேகானந்தர்தான். அவர் அமெரிக்காவில் ஹிந்து என்றதற்கு சொன்ன விளக்கத்தைக் கேளுங்கோ.

| | | | |
|---|---|---|---|
| H | Humility | Bescheidenheit | பணிவு |
| I | Individuality | Individualitat | தனித்தன்மை |
| N | Nationalism | Nationalismus | நாட்டுப்பற்று |
| D | Divinity | Göttlichkeit | தெய்வீகம் |
| U | Unity | Einigkeit | ஒற்றுமை |

"இதைவிட ஒருத்தரால் இவ்வளவு அழகாகச் சொல்ல முடியாது.நாங்கள் தமிழர் என்றதற்கும் இந்துக்கள் என்றதற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பெருமைப்பட வேண்டும். யாரையும் கட்டுப்படுத்தாத சமயம் இந்துசமயம்." "நல்ல அழகான விளக்கம் அப்பப்பா. யாராவது இந்துசமயத்தைப் பற்றிக் கேட்டால் வடிவாய்ச் சொல்லலாம். டங்கே அப்பப்பா" ஜீவன் நன்றி தெரிவித்தான். "விவேகானந்தர் கூட இந்தியாவில் எது சொன்னாலும் ஏறாது என்றுதான் இந்து சமயத்தைப் பற்றி அமெரிக்காவில் போய்ச் சொன்னார். அமெரிக்கன் இந்துசமயத்தைத் தேடத் தொடங்கினபிறகுதான் நாங்க முழிச்சம். இப்பகூட யோகா, ஆயர்வேத, மஸாஜிங் எல்லாமே அமெரிக்கன் செய்யத் தொடங்கின பிறகுதானே இது எங்கடை என்று சொல்லிக்கொண்டு நாங்க செய்யத் தொடங்கினம். எல்லாம் வெள்ளைக்காரன் சொன்னால்தான் எங்கடை மக்களுக்கு ஏறும்" என்றார். "அப்பப்பா. விவேகானந்தர் தமிழரா?" கேட்ட யுகிக்கு "இல்லை. அவர் வங்காளி" என்றார்.

சிந்து அப்பப்பாவைக் கேட்டாள், "அம்மா முந்தி ஒருக்கா சொன்னா. ஹிந்து என்ற சொல் நாங்க வைக்கேல்லை. இந்தியாவுக்கு முந்தின காலத்தில் வியாபாரம் செய்யவந்த பாரசீகர்தான் வைத்ததென்று. அப்படியா அப்பப்பா"? "ஓமோம், பழையகாலத்தில் பாரசீக நாகரிகம்தான் புகழ்பெற்றதாக இருந்தது. பாரசீகத்துக்கு வியாபாரம் செய்யவந்த ஐரோப்பியர் சிலர் ஆன்மீக விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டு பாரசீகர்களிடம் கேட்க அவர்கள் சிந்து சமவெளியில் முனிவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மெஞ்ஞானத்தில் சிறந்து விளங்குகிறார்கள் என்று அவர்களைப்பற்றி உயர்வாகப் பேசி அங்கு செல்ல வழிகாட்டினார்கள். பாரசீக மொழியில் "ஸ" என்ற எழுத்து இல்லை. அதற்குப் பதிலாக "ஹ" என்ற எழுத்தையே உபயோகித்தார்கள். எனவே ஸிந்து ஹிந்து வாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டவர் சிந்துவெளியில் சித்தர்களைச் சந்தித்துத் திரும்பி தங்கள் நாட்டில் ஹிந்துக்களின் தத்துவம் உயர்ந்தது என்று புகழ அதுவே ஹிந்து சமயமாயிற்று" என்று விளக்கினார்.



"எங்களுடைய கலைகளுக்கும் ஏன் திறமைகளுக்கும் கூட வெளி நாட்டவரிடம் சான்றிதழ் எதிர்பார்க்கின்றோம். எங்களுடைய வைத்திய முறைகளில் ஒன்றான எண்ணெய் பூசி மசாஜ் பண்ணுவது அழியும் நிலையிலிருக்கும்போது இப்போது கேரளாவில் பிரபலமாகி வருவது யாரால்? வெள்ளைக்காரன் தேடிவந்து செய்யத் தொடங்கியபிறகு இப்ப எல்லோரும் செய்கிறார்கள். எங்களுடைய யோகாவை அவன் படித்து செய்யத்தொடங்க நாங்க அதற்குப் பின்னால் ஓடுகின்றோம். எங்களைத் திருத்த முடியாது. மேல்நாட்டு மோகம் எல்லோரிடமும் பரவிவிட்டது. முன்பு முதியவர்களை வீட்டில் வைத்துப் பராமரித்தார்கள். அவர்கள் குடும்பத்தில் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவைத்தார்கள். இப்போது அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பிவிட்டு கவுன்சிலிங் என்ற பெயரில் அதே வேலையைச் செய்கிறவர்களைத் தேடி அலைகிறார்கள். நிறையப் பணத்தைக் கொட்டுகிறார்கள். நீங்கள் குழந்தைகள். இதெல்லாம் உங்களுக்கு விளங்காது. என்னத்தைச் சொல்கிறது" என்று அலுத்துக் கொண்டார்.

"ஐஃவெல் ரவரைக் கட்டியவர் யாரண்ணா?" கேட்டான் யுகி. "என்னுடைய ஃப்ரன்ட் சொல்றான் அவர் என்ஜினியரிங் படிச்சு முடிக்கவேயில்லையாம். படிக்க முடியாமல் பாதியில் விட்டிட்டாராம்". "இருக்கலாம். எனக்குத் தெரியேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஸ்டாவே ஐஃபெல் தான் கட்டினவர். 5 லட்சம் ஆணிகள் பயன்படுத்தி 18000 உருக்குத் துண்டுகள் பொருத்தி இதைக்



கட்டினார்களாம். ஒவ்வொரு வருடமும் 55 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பார்வையிட வருகிறார்களாம். இந்தக் கோபுரம் பரிஸ் நகரின் ஒரு குறியீடாகவே அறியப்படுகிறது. பிரஞ்சு புரட்சியின் 100ஆவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம் 1889இல் நடந்தபோது உலகக் கண்காட்சி விழாவுக்கு நுழைவாயில் வளைவாகக் கட்டப்பட்டது. 1929 வரை உலகத்தின் அதி உயர்ந்த கட்டடமாக இருந்தது. 324 மீற்றர் உயரம். 81 தளங்கள் அதில் உண்டு. நாங்க போனவருடம் பார்த்தம்தானே"? "ஏனண்ணா இப்ப அது உயரமில்லையா"? "இல்லை. இப்போது அதைவிட உயரமான கட்டடங்கள் நிறைய வந்துவிட்டது. அதனால் இது உலகின் உயரமான கட்டடம் என்ற தகுதியை இழந்துவிட்டது." ஜீவன் கூறினான்.

"ஓகே என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா?" ஜீவன் கேட்டுவிட்டுத் தானே பதிலும் கூறினான். "இரண்டாம் உலகப்போர் நடந்தபோது நெப்போலியன் கில் என்ற சொல்லுக்குப் பதிலாய் கே என்றும் யாரும் கொல்லப்படவில்லை என்றால் ஓகே என்றும் குறிப்பிட்டார்களாம். போர் நடக்கும் இடத்தில் நீண்ட வசனங்களைப் பாவிப்பது கஷ்டம். ஆகவே சுருக்கமாக ஓகே என்றார்கள். அந்தச் சொல்லே பின்னாளில் திருப்தியும் ஆறுதலும் அடையும் சந்தர்ப்பங்களில் ஓகேயாக மாறியது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினான். திவ்யா "ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தேவைக்கேற்ப உண்டாகித்தான் பல சொற்கள் உருவாகியிருக்கும்" என்றாள். "வைஃப் என்ற சொல்லுக்கு புதிதாக ஒரு அர்த்தத்தைக் கண்டுபிடித்த என் நண்பி சொல்லுவா.

| | | |
|---|---|---|
| W | Washing | (தோய்த்தல்) |
| I | Ironing | (இஸ்திரி போடல்) |
| F | Food preparing | (உணவு தயாரித்தல்) |
| E | Entertain | (சந்தோஷப்படுத்துதல்) |

இதை அவ கணவருக்குச் சொல்லவே அவர் ஹஸ்பண்டுக்கு இப்படி அர்த்தம் சொன்னாராம்". "எப்படி? எல்லோரும் ஆவலாகக் கேட்டார்கள்.

| | | |
|---|---|---|
| H | Housing | (வீட்டு வசதி செய்தல்) |
| U | Understanding | (புரிந்துகொள்ளல்) |
| S | Sharing | (பகிர்ந்துகொள்ளல்) |
| B | Buying | (வாங்கிக்கொடுத்தல்) |
| A | And | (உம்) |
| N | Never | (ஒருபோதும்) |
| D | Demanding | (அதிகாரம் செய்யக்கூடாது) |

"நல்லாயிருக்கு" என்று எல்லோருமே சொன்னார்கள். "Good Bye என்றதற்கும் God Be With You - கடவுள் உன்னோடிருக்கட்டும் இப்படி பெரியப்பா சொன்னார்" என்றான் யுகி. "இதுவும் நல்லாயிருக்கென்ன. ஓம் அடுத்த முறை சந்திக்குமட்டும் கடவுள் உங்களோடு இருப்பார். இது மிச்சம் நல்லாயிருக்கு. எனக்கு இவ்வளவு நாளும் தெரியாது" கூறினாள் திவ்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

கோடைகாலம் மறைந்து கொண்டுவர அடுத்து வரும் இலையுதிர்காலம் எட்டிப் பார்க்க மெல்லிய குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. குளிரைக் கண்டதுமே மரங்களெல்லாம் நிறங்களை மாற்றிக்கொண்டு தத்தம் இலைகளை மண்மாதாவுக்கு காணிக்கையாக்கக் காத்திருந்தன. அடிக்கடி மெல்லிய மழை தூமித்து தன் இருப்பை பறைசாற்றிக் கொண்டிருந்தது. பச்சை வண்ணமெல்லாம் எங்கோ ஓடிப்போய் ஒளிய மஞ்சள் நிறம் மட்டும் மரங்களைக் குத்தகைக்கு எடுத்தது. காற்று மெல்லெனத் தழுவும்போது ஒவ்வொன்று ஒவ்வொன்றாகத் தம் இலைகள் அத்தனையையும் பறிகொடுத்துவிட்டு மரங்கள் மௌனித்தன. சலசலவென்று சலசலத்த இலைகள் எல்லாம் தாங்க முடியாத



சோகச்சுமைகளைத் தாங்கிய வண்ணம் தமக்குள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு கைகோர்த்தபடி மண்ணை முத்தமிட்டுப் பேச்சற்றிருந்தன. தம் இயலாமையைக் காற்றோடு பகிர்ந்தபடியே உயிரை விட்டன. பிள்ளைகளைப் பறிகொடுத்த ஈழத் தாய்மார்போல் ஒவ்வொரு



மரங்களும் சோகம் காத்தன. பசுமை இழந்த அத்தனை மரங்களும் குளிரில் குளித்தபடி மோனத்தவத்துடன் குளிர்காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனை வரவேற்கின்றன. அந்த சோகமான அழகும் மனதை எங்கேயோ கொண்டு சென்றது. பறவைகளெல்லாம் குளிர்க்காற்றைச் சுவாசித்தபடி வேறுநாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கின. சிறு குருவிகளெல்லாம் குளிருக்கு பயந்து செடிகளடர்ந்த பகுதிக்குள் முடங்கத் தொடங்கின. நீர்நிலைகளில் நீந்தும் அன்னங்கள் மட்டும் குளிரால் எங்களை என்ன செய்துவிட முடியும் என்ற அகங்காரத்துடன் நீரில் பவனி வருகின்றன.

சிந்து கேட்டாள், "ஏனம்மா இலங்கையில் ஒருத்தரும் நன்றி சொல்றது இல்லை"? "எனக்கும் அது கஷ்டமாய்த்தானிருக்கு. ஆனால் எங்கடை ஊரிலை நாங்க முந்தி எல்லாம் சொல்றனாங்கள். ஸ்கூலிலை தாங்ஸ், சொறி எல்லாம் சொல்றனாங்க. இப்ப பார்த்தால் அந்தப் பழக்கத்தைக் காணவில்லை. போர் எல்லோரையும் புரட்டிப் போட்டுவிட்டதா? அல்லது போரால் பட்ட துன்பங்கள் அவர்களை மாற்றிவிட்டதா? எனக்குத் தெரியேல்லை." "ஒருநாள் பக்கத்துவீட்டுப் பிள்ளை என்னுடைய உடுப்புக்கு மேல் தண்ணீரை ஊற்றினாதானே. ஒரு சொறி கூடச் சொல்லேலை. அதுதான் பரவாயில்லை. சரி சரி அது காய்ந்துவிடும் என்கிறா." சிந்து சொல்ல "இப்ப உள்ள பிள்ளைகள் அப்படி வளர்கிறார்களோ? தெரியேல்லை" திவ்யா கூறினாள். "ஒரு ஹொஃவ்லிக்கைற் (மரியாதைக்காக) கூடயில்லை. பெரியப்பாக்கு சொல்ல ஏன் நீங்க எதிர்பார்க்கிறீங்க? என்று கேட்கிறார். தெரியாட்டாலும் பார்த்து பழகலாந்தானே அம்மா" என்று யுகி கூறினான். "மன்னிப்பு மட்டுமில்லை, நன்றியுணர்வும் மறைந்துகொண்டு வருகிறது. எல்லாரும் செய்வதற்கு கடமைப்பட்டவர்களென்று நினைக்கிறார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழரின் பண்பாடு மறைந்துகொண்டு வருகிறதோ என்று பயமாயிருக்கு. நன்றியோ, மன்னிப்போ மனதிலிருந்து வரவேணும். வெறும் வாய் வார்த்தைக்காய் சொல்லக் கூடாது." அம்மா சொல்லிக் கொடுத்தாள்.

"சும்மா வாய் வார்த்தையாய் சொறி என்று சொல்றது இந்த நாடுகளில் ஒரு ஹொஃப்லிக்கைற். ஆனால் மன்னிப்பு என்றது பெரிய வார்த்தை. எந்த விஷயமென்றாலும் மன்னித்துப் பழகவேண்டும். மன்னிக்கிறதாலை மட்டும்தான் நாங்க சந்தோஷமாக இருக்க முடியும். மன்னிக்காட்டி நாங்க அந்த விஷயத்தை மனதிலை போட்டுக் குமைந்துகொண்டு எங்களுக்குத்தான் கூடாது. மகிழ்ச்சி பறந்திடும். நோய்கள் வந்திடும்.மற்றவர்கள் செய்கிற கூடாததுகளை மன்னிக்கவும் மறக்கவும் பழகிக் கொள்ளுங்கோ. நாங்க குப்பைகளை வீட்டிலேயே சேர்த்துவைத்தால் என்னாகும். அதேபோல்தான் மற்றவர்களின் துரோகங்களையும் தீமைகளையும் நாங்க மனதிலே சுமந்துகொண்டிருந்தால் நாங்க நல்ல மனிதனாக முடியாது.மனதையும் அப்பப்ப சுத்தமாக்க வேண்டும். மன்னிப்பவன்தான் மனிதன்" என்றாள். "நன்றியுணர்ச்சியும் மன்னிப்பும்தான் மனிதனை உயர்த்தும்". "எங்களுக்கு விளங்கேலையம்மா" என்றாள் சிந்து. நாங்க வாழுவதற்கு எத்தனைபேர் உதவுகிறார்கள்.யோசித்துப் பாருங்கோ. உண்ணும் உணவிலிருந்து படுக்கும் மெத்தை, கட்டில், பல் துலக்கும் பிரஷ், பேஸ்ற் இதெல்லாம் எங்களுக்காக யாரோ செய்ய நாங்க பயன்படுத்துகிறோம். ஆனால் அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்ல நாங்க யோசிக்கிறேல்லை. ஒவ்வொரு பொருளையும் பாவிக்கமுதல் மனதால் கண்ணுக்குத்தெரியாத அவர்கள் நன்றாக வாழவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துவது நல்லதல்லவா?" என்றாள். "நாங்க அதற்கு பணம் கொடுத்துத்தானே வாங்குகிறோம்" என்றான் யுகி. பணத்தால் அவர்கள் உழைப்பை நாங்க குறைவாக மதிக்கக்கூடாது. நாங்க அப்படி வாழ்த்தும்போது நல்லதிர்வுகள் எமைச்சுற்றிப் பரவும். அது எங்களுக்கும், நல்லது அவர்களுக்கும் நல்லது" என்று விளக்கினாள்.


சிந்து கேட்ட கேள்வி திவ்யாவை சிந்திக்க வைத்தது. "இங்கெல்லாம் டங்கே சொன்னால் பிற்றே சொல்றம்தானே. இங்கிலீஷில்கூட வெல்கம் என்பார்கள். ஆனால் தமிழில் நன்றி சொன்னால் திரும்ப ஒன்றும் சொல்றேல்லையே. சும்மா சிரிச்சிட்டு இருந்திடுவார்கள்.ஏனம்மா"? "ஓம் என்ன நாங்க ஒன்று கண்டுபிடிப்பமா" என்று கேட்டு எல்லோரும் கூடி யோசித்தார்கள். கடைசியில் யுகி சொன்ன "நன்று" என்று சொல்வது எல்லோருக்கும் சரியானதாகத் தோன்றியது. நன்றி சொன்னால் தாங்கள் இனிமேல் நன்று சொல்வதென்று எல்லோரும் முடிவெடுத்தார்கள். எங்களைப் பார்த்து இனி எல்லோரும் சொல்வார்களென்று மகிழ்ந்தார்கள்.



மழை விட்டு விட்டு பெய்தபடியிருந்தது. வானத்தேவன் இடையிடையே மழையை தன்னிடத்தே ஒளித்து வைத்து வேடிக்கை காட்டினான். மழையும் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடியது. யன்னலுடாக மழையைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதி "அண்ணா மழை எப்பிடி வருமண்ணா?" கேட்கவும் ஜீவன் சொல்லத் தொடங்கினான். "கடலிலை இருந்து தண்ணீர் ஆவியாகி வானத்திலை அலைந்துகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியும் மேகத்துக்குள் புகுந்து துளித்துளியாய் ஒன்றுசேர்ந்து முகிலிலிருந்து கீழே விழும். முகில்கள் கன நாட்களுக்கு மழைத்துளிகளைச் சேர்த்துவைக்கும். இதுதான் மழையின் கதை. மின்னல், இடி பற்றியும் சொல்லட்டா" என்றான். "சொல்லுங்க அண்ணா" என்று யுகியும், ஆதியும் சொல்ல ''எனக்குத் தெரியுமே" என்று சிந்து சொன்னாள். ''உங்களுக்கு வேண்டாட்டிப் போங்கோ. நாங்க கேட்கப் போகிறோம்" என்று சொன்னார்கள். அப்போது அம்மா அழைக்கவே ஜீவன் போய்விட்டான்.




யன்னலின் வழியாய் மழைத்துமியைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதி திடீரென்று வானவில்லைப் பார்த்த சந்தோஷத்தில் "அக்கா, அண்ணா ஓடிவாங்கோ. வானவில் தெரியுது" என்று சத்தமாகக் கூப்பிட்டாள். எல்லோரும் ஓடிவந்தார்கள். ஏழு வர்ணத்தில் வானவில் வெகு அழகாக இருந்தது. ''எப்படி அண்ணா வானத்திலை இவ்வளவு நிறம் வரும்?" ஆதி கேட்க, யுகியும் சிந்துவும் "எங்களுக்குத் தெரியும். அண்ணா ஆதிக்கு சொல்லுங்கோ" என்றார்கள். ஜீவன் சொன்னான், "ஒரு பெரிய மஜிக்கும் இல்லை. மழைத்துளிகளின் ஊடாக சூரிய ஒளிக்கதிர்கள் செல்லும்போது ஒளி பிரிந்து சூரியனின் ஏழு நிறங்கள் வானத்தில் தெரியும். சிவப்பு, ஒரேன்ஜ், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா. சூரியன்ரை பக்கம் தெரியாது. எதிர்த் திசையில் தெரியும்." அங்கு வந்த அப்பப்பா ''இதிலை இன்னொரு விஷயமும் இருக்கு. என்ன தெரியுமா? எங்கடை உடம்புக்குள் இதே வரிசையில்தான் ஒவ்வொரு ஷக்கராவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நிறங்கள் இருக்கும்" என்றார். "அதென்ன ஷக்கரா?" நால்வருமே கேட்டார்கள். "மூலாதாரம்-சிவப்பு, ஸ்வாதிஷ்டானம்-ஒரேன்ஜ், மணிப்பூரகம்-மஞ்சள், அநாகதம்-பச்சை, விசுக்தி-நீலம், ஆக்ஜா-கருநீலம், சகஸ்ராரா-ஊதா. நீங்க வளர்ந்த பிறகு இதுகள் பற்றி அறியலாம். இப்போதைக்கு இவ்வளவும் போதும். ஆனால் நீங்க இப்ப இந்த நிறங்களை உங்கடை உடலுக்குள் தேடிக்கொண்டிருக்காதேங்கோ. இப்ப உங்களுக்குத் தெரியாது" என்றார். "ஆனால் ஒவ்வொரு நிறங்களுக்கும் ஒவ்வொரு குணம் இருக்கு." "அதென்ன மனிதருக்கு இருக்கிற குணம் போலவா?" யுகி கேட்டான். "சிவப்பு ஆபத்தையும் கோபத்தையும் வெள்ளை தூய்மையையும் நீலம் சக்தியைத் தூண்டவும், மண்நிறம் மனஇறுக்கத்தைப் போக்கவும் எரிச்சல் உணர்வை ஏற்படுத்தாது எனவும், பச்சை ஆற்றலைக் கொடுக்கவும் மனநோயைக் குணப்படுத்தும் என்று ஆல்ஸபேர்ட் ஹவார்டு என்ற மருத்துவ நிபுணர் கூறுகின்றார். கறுப்பு துக்கத்தின் அடையாளமாகவும் இருக்குமென்று ஆராய்ச்சிகள் மூலம் கண்டுள்ளார்கள். ஒரேஞ் பசியைத் துண்டிவிடும். அதோடு நித்திரையைத் தோற்றுவிக்கும் என்கிறார்கள். படுக்கை அறைகளுக்கு இந்த வர்ணம் அடிப்பது நிம்மதியான உறக்கத்தைத் தருமென்று கூறுகிறார்கள். சிவப்பு, மஞ்சள் நிறம் அடிக்கப்பட்ட அறைகளில் நித்திரை கொள்ளும் குழந்தைகள் அடிக்கடி அழும் என்று கண்டறிந்துள்ளார்கள். ஆனால் மஞ்சள் வெப்பத்தைத் தக்கவைத்திருக்குமாம். குளிர்காலத்தில் மஞ்சள் ஆடை அணிவது நல்லது. பார்த்தீர்களா வெறும் நிறங்களுக்கு இருக்கும் குணங்களை" என்றார். "நிறங்களுக்கு இருக்கும் குணங்கள் போலத்தான் இந்த ஒலிக்கும் இருக்கிறது. மெல்லிய இசைக்கருவிகள் எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்களுக்கு மருந்தாகும். அத்துடன் பெருஞ்சத்தம் தரக்கூடிய வாத்தியங்களின் ஓசை உயர் இரத்தழுத்தம், இதயத்தை வேகமாக துடிக்கச் செய்தல் போன்ற எதிர்மறையான விளைவுகளைத் தரும். அதுவும் குழந்தை வயிற்றில் இருக்கும்போது அதீத சப்தமான ஒலிகளைக் கேட்கும் குழந்தைகள் வளரும்போது அமைதியீனம், பேசும்போது ஒரு படபடப்பு, ஓரிடத்தில் இருக்க முடியாத தன்மை என்றிருப்பார்களாம்."



பாதியில் போயிருந்த ஜீவன் முதல் சொல்லாமல் விட்ட மின்னல் பற்றிய விஷயத்தைச் சொன்னான். "மின்னல் மழை காலங்களில் மேகங்களின் இடையே ஏற்படும் மிகப் பெரிய தீப்பொறி. கண்ணைக் கூசச்செய்கிற வெளிச்சத்தோடை கோடுகோடுகளாய் வானத்தில் தோன்றும். தோன்றின ஒரு நொடியிலை மறைந்தும் விடும். காற்றுக்குள்ளாலை மின்னூட்டம் பாயும். அதுதான் மின்னல். இந்த மின்னல் சிலநேரங்களில் பார்வையைக்கூட பறிச்சிடும். சொல்லவும் "ஆ பயமாய் இருக்கு. நான் இனி "மின்னலைப் பார்க்கவே மாட்டன்" என்றாள் ஆதித்யா. மின்னலோடையேதான் இடியும் வரும். ஆனால் ஒளியின் வேகம் 300000 கிலோமீற்றர். ஒலியின் வேகம் ஆக 330 மீற்றர் மட்டுந்தான். அதுதான் முதல் மின்னல் தெரிந்த பிறகு இடிச் சத்தம் கேட்கும். வானமண்டலத்திலுள்ள காற்றோட்டத்தால் மேகங்கள் ஒன்றையொன்று நெருக்கும். அந்த மோதல் சத்தந்தான் இடி" கூறி முடித்தான் ஜீவன். "ஏனண்ணா மழைத்துளி எல்லாம் ஒரேயளவிலை இருக்கிறேல்லை. சிலது பெரிய துளி சிலது கம்பி போலை குட்டி குட்டியாயிருக்கிறது?" யுகி கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பல இலட்சம் நீர்த்துளிகள் சேர்ந்தால்தான் மழைத்துளி கிடைக்கும். மழைத்துளிகள் எவ்வளவுகாலம் மேகத்துக்கு உள்ளேயே இருக்கின்றனவோ அதைப் பொறுத்துத்தான் மழைத்துளியின் அளவு இருக்கும்" என்றான். "ஓஹோ. அதுதான் சிறுதுளி பெருவெள்ளம் என்கிறதோ" ஆதி கேட்டாள். "அது வெள்ளத்துக்கு. ஒவ்வொரு துளியும் சேர்ந்துதான் வெள்ளம் வாறது" என்றாலும் ''கெட்டிக்காரிதான் ஆதி" என்று பாராட்டினான்.




யுகி அப்பாவைக் கேட்டான், ''எப்பிடியப்பா பக்ரீறியா எங்கடை உடம்புக்குள்ளை போகும்? எங்களுக்கு அதைக் கண்ணால் பார்க்க முடியாதே." ''பக்ரீறியா என்றவுடன் எல்லாமே கெட்ட பக்ரீறியா இல்லை. நல்ல பக்ரீறியாதான் தோசைமாவைப் புளிக்க வைக்கும். பாலைப் புளிப்பாக்கி தயிராக்கும். சில கெட்ட பக்ரீறியாதான் எங்கள் தோல் மூலம் உடம்புக்குள்ளை போய் நோயை உண்டாக்குகிறது. வினிகர் செய்வதற்கு பக்ரீறியா தேவைப்படுகிறது. நெருப்புக்காய்ச்சல், டிப்தீரியா, கொலரா, காசநோய், உணவு நஞ்சாதல் என்பன பக்ரீயாக்களால் உண்டாகும் நோய்கள். எந்த மருந்தாலையும் பக்ரீறியாக்களை முழுசாக அழிக்க முடியாது. அதுதான் நாங்க நன்றாகக் கைகால் கழுவுறது. கொதிக்கவைத்து தண்ணீர் குடிக்கிறது. சுத்தமாய் இருக்கிறதாலை பக்ரீறியா எங்களின் உடலுக்குள் புகாமல் கொஞ்சம் பாதுகாக்கலாம்" விளங்கப்படுத்தினார்.


❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5



வீட்டுச் சுத்தத்தில் ஈடுபட்டிருந்த அப்பாக்கு உதவி செய்துகொண்டிருந்த யுகி அப்பாவைக் கேட்டான், "புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தவர் நியூட்டன் தானே. ஆனால் அண்ணா சொல்றார் அது பிழையாம். அப்பப்பா சொன்னவராம். நியூட்டனுக்கு 500 ஆண்டுகளுக்கு முதலே இந்தியாவைச் சேர்ந்த பாஸ்கராச்சாரியார் என்பவர் கண்டுபிடித்து விட்டாராம். உண்மையா அப்பா"? "ஓம். வானவியல் ஆய்வை உஜ்ஜயினியில் படித்து இந்த புவியீர்ப்புச்சக்தியைக் கண்டுபிடித்து விட்டார். அவர் எழுதிய சித்தானந்த சிரோன்மணி என்ற புத்தகத்தை ஹென்றி தொமஸ்கோல்புருக் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதன்பிறகே நியூட்டன் அதைச் சொல்ல அவர் என்று பதிவு செய்துவிட்டார்கள். அக்பர் காலத்தில் பாரசீக மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இப்படி நிறைய விஷயங்கள் இந்தியர் கண்டுபிடித்தாலும் ஆங்கிலேயர் பெயரில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.



ஏன் வானொலியே போஸ் என்ற ஒரு இந்தியரால்தான் கண்டுபிடிக்கப்பட்டதாம். அவருடைய உதவியாளராக இருந்த மார்க்கோனி தன்னுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் பதிவு செய்தாராம். இதற்கான ஆதாரம் போஸ் அவரது நண்பரான ரவீந்திரநாத் தாகூருக்கு எழுதிய கடிதம் இப்போதும் சாந்திநிகேதனத்தில் இருக்காம். அப்பாதான் எனக்கும் சொன்னவர்." "இருக்கலாம். வரலாறுகளில் இப்படி எத்தனையோ குளறுபடிகள் நடந்திருக்கலாம்" அப்பா கூறினார். "எங்கள் புராணக்கதைகளில் வரும் விஸ்வகர்மாவின் மகன் மயன் என்பவரைத்தான் தென்அமெரிக்கரின் மாயன் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இவற்றில் நிறைய தேடி உண்மைகளை அறிய வேண்டும். மயன்தான் விமான சாஸ்திரம் என்ற புத்தகத்தை எழுதியது. அதைப் பார்த்துத்தான் ரைட் சகோதரர் விமானத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். கடைசியில் அமெரிக்கன்தான் கண்டுபிடித்தது என்று உலகமே கொண்டாடுது." அப்பா கூறிமுடித்தார்.

"ஏன் எவரெஸ்ற் சிகரத்தைத் தொட்டவர்கள் என்று சொல்வதில்கூட குளறுபடி இருக்குதுதானே" திவ்யா சொல்லவும் "குளறுபடியென்றில்லை. முதலில் எட்மண்ட் ஹிலாரி என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இங்கிலாந்தைச் சேர்ந்த முலாரி தொட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தன. 75ஆண்டுகளுக்குப் பின் எவரெஸ்ற் சிகரத்தின் பக்கத்தில் அவரது உடம்பு பனியில் உறைந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே முலாரி என்று பிறகு அறிவித்தார்கள்." அப்பா புரியவைத்தார்.

பத்திரிகை படித்துக்கொண்டிருந்த சிந்து "சொன்னன் ஃபின்ஸ்ரேர்னிஸ் (சூரியகிரகணம்) என்றால் என்னப்பா? அமெரிக்காவில் தெரியுமென்று போட்டிருக்கு" என்று கேட்டாள். "சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போகும்போது பூமியிலிருந்து பார்த்தால் தெரிவதுதான் சூரிய கிரகணம். இதை வெறுங்கண்ணால் பார்க்கக்கூடாது என்று முந்திச் சொல்லுவினம். ஒரு கண்ணாடி ஊடாகப் பார்த்தால் கண்ணுக்குப் பாதிப்பில்லையென்று. இது எவ்வளவு தூரம் சரி என்று எனக்குத் தெரியாது. நேற்று கிரகணம் வந்தது. அதுதான் ஒரே இருட்டாயிருந்தது. கவனிச்சீங்களா? நான் இதைப்பற்றி விளங்கப்படுத்த வேணுமென்றிருந்தன். வேலைக்கஷ்டத்தில் மறந்திட்டன். நீங்க இப்ப கேட்டது நல்லதாய் போயிட்டுது. சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் பூமி வந்து மறைப்பது சந்திர கிரகணம். இந்தக் கிரகண நேரத்தில் ஒளி குறைவாக இருப்பதால் செரிமானம் குறையும். ஆனபடியால் அந்த நேரங்களில் சாப்பிடுறது நல்லதில்லை என்று எங்கடை மெஞ்ஞானம் சொல்லுது. சூரிய கிரகணம் சந்திர கிரகணம் பற்றி 12000 வருடங்களுக்கு முதலே மகாபாரதத்தில் எழுதியிருக்கே. மாலையில் சூரியன் மறையும்போது சிவப்பாய்த்தானே தெரியும். ஆனால் அண்டாடிக்காவில் சூரியன் பச்சையாகத் தெரியுமாம்." அப்பா கூறவும் "ஐ அதுவும் ஒரு வடிவு என்ன" என்றான் யுகி.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

முதலில் சந்திரனில் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ரொங் என்றுதானே நாங்க நினைத்துக் கொண்டிருக்கிறம். ஆனால்





எங்கடை மாஸ்ரர் சொல்றார் அது பொய் யென்று. ஒருத்தருமே சந்திரனுக்குப் போகேல்லை. ஸ்ரான்லி குப்ரிக் இயக்கிய ஸ்பேஸ் ஒடிசி என்ற திரைப்படத்தில் விண்வெளிக் காட்சியைப் பார்த்த நாசா அவரின் உதவியுடன் சந்திரனில் காலடி வைத்ததுபோல ஒரு எபிசோட்டை ஒரு பிரமாண்டமான ஹோட்டேல் அறைக்குள் படம் எடுத்து அமெரிக்கா உலகத்தை ஏமாற்றிவிட்டது என்று. அப்படியா அப்பா" ஜீவன் கேட்டான்.

"முன்பு நாங்க எல்லாம் நம்பினம். இப்ப பார்த்தால் உங்கடை மாஸ்ரர் சொல்றதும் சரியாயிருக்கலாம்."



''அவர்கள் காட்டின படங்களில் அமெரிக்கன் தேசியக்கொடி அசைகிறதாம். அங்கு காற்றே இல்லாதபோது எப்படி கொடி அசையும்? என்கிறார். சரிதானே அப்பா." "ஓம் நானும் வாசித்தனான். ஒட்டுமொத்தமாய் எல்லாரையும் ஏமாற்றி விட்டார்களோ தெரியாது. சந்திரனின் மேற்பரப்பில் தூசி படர்ந்திருக்குமாம். மனிதன் கால் வைத்தபோது தூசி கிளம்பியிருக்க வேண்டும். ஆனால் வீடியோவில் அப்படித் தெரியேல்லை. அதுவும் ஆம்ஸ்ரொங் நிலவில் கால் பதித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பற்றி வாயே திறக்க மாட்டன் என்றிட்டார். அதோடு பேட்டி கொடுக்கவோ ஆட்டோகிராவ் எழுதவோ மறுத்திட்டது மட்டுமல்லாமல் அமெரிக்காவை விட்டு லெபனானில் போய் தனிய இருந்து இறந்தும் விட்டார். ஆனபடியால் நம்ப முடியாமல்தான் இருக்கிறது. **1959**இல் முதல் விண்கலத்தை சந்திரனில் இறக்கியது ரஷ்யா. ஆனால் கால்பதித்தது தாங்கள் என்றுதானே அமெரிக்கா சொல்கிறது. எப்ப ஆம்ஸ்ரொாங் போனவர்?" யுகி கேட்டான். "**1968** என்று நினைக்கிறன். அப்பலோ **11** என்ற விண்கலம்." "ஓ அந்தப் பெயரைத்தான் இந்தியா இலங்கையில் வைத்தியசாலைக்கு வைத்தார்களோ?" "ஓமோம்." என்றாள் திவ்யா. முதன்முதல் விண்வெளிக்குச் சென்றவர் யாரென்று சொல்லுங்கோ." "எனக்குத் தெரியாது" என்று ஆதி கேட்க "யூரிககாரின் என்ற ரஷ்யா நாட்டவர். ஒரு பெண் கூடப் போயிருக்கிறா. உங்களுக்குத் தெரியுமா?" திவ்யா கேட்டாள். "எனக்குத் தெரியுமே. வலன்ரீனா தெரஸ்கோவா என்ற ரஷ்யப் பெண்தானே. ஆ எவ்வளவு பெருமை! இரண்டு பேருமே ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள்." சிந்து ஆச்சரியப்பட்டாள்.



"அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கிறிஸ்தோபர் கொலம்பஸ்தானே அண்ணா" கேட்டான் யுகி. "ஓம் அதிலை என்ன சந்தேகம்?" சிந்து கேட்கவும், ஆதி கேட்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் ஒளிச்சு வைச்சது?" "ஏன் ஒளிக்கவேணும்"? "யார் சொன்னது ஒளிச்சதென்று" சிந்து கேட்க, "அப்ப கண்டுபிடிச்சதென்று சொன்னீங்க. ஒளிச்சால் அல்லது துலைச்சால்தானே கண்டுபிடிக்கிறது" ஆதி வெகுளித்தனமாகக் கேட்டாள். அப்போது அங்கு வந்த அம்மா "சரிதானே ஆதி சொல்றது". "கொலம்பஸ் இந்தியாவைத் தேடிப் புறப்பட்டுப் போய்த்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அதுதான் மேற்கிந்திய தீவுகள் என்று அமெரிக்காவைச் சேர்ந்த தீவுகளுக்கு பெயர் வந்தது." ஜீவன் சொல்லவும், "எந்த வருஷமண்ணா"? "1492தான் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்கு ஸ்பானிய அரசி இசபெல் மட்டும் பொருளாதார உதவி செய்திராவிட்டால் அவர் கனவு கனவாகவே போயிருக்கும். அமெரிக்கா அங்கேயேதான் இருந்தது. ஆனால் யாருக்கும் தெரியாத நாடாக பூர்வீக குடிகளுடன் இருந்தது. அதைக் கண்டுபிடித்து உலகத்தின் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர்தான் கொலம்பஸ்." "அவர் தனது குழுவுடன் மேற்கிந்தியத் தீவுக்குள் போனபோது அத்தீவைச் சேர்ந்த ஆதிவாசிகள் இவர்களைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் கையில் ஈட்டி அம்பு போன்ற ஆயுதங்கள் இருந்தன. கொலம்பஸ் நிலைமையைப் புரிந்துகொண்டு புத்திசாலித்தனமாக ஒரு வேலை செய்தார். சூரியன் மறைகிற அந்த நேரத்தில் முழு நிலவு தெரிந்தது. அன்று சந்திரகிரகணம் இருந்தமையை நினைவில் கொண்டு அந்த ஆதிவாசிகளுக்கு தான் நிலவையே மறைக்க முடிந்த மந்திரவாதி என்பதை கை அசைவுகளின் மூலம் உணர்த்தினார். மந்திரசக்தியை உருவாக்குவதுபோல் நிலவை நோக்கி முணுமுணுத்தார். நிலவை இருள் மறைத்தது. அவர்கள் பயத்துடன் பார்த்தார்கள். அவர்களை சமாதானப்படுத்துவது போல கொலம்பஸ் மீண்டும் சிறிதுநேரம் வானத்தைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முணுமுணுக்க சந்திரனைச் சூழ்ந்த இருள் விலக அவர்கள் கொலம்பசை மந்திரவாதியாகப் பார்த்து அவரை மதித்து தீவுக்குள் அழைத்துச் சென்றார்கள். எப்படி ஒரு சிறிய புத்திசாலித்தனத்தால் வெல்ல முடிந்தது. "இதை திவ்யா கூறவும் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

"அமெரிக்கா என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா?" ஜீவனே கேட்டு பதிலையும் தானே சொன்னான். "ஜேர்மனியைச் சேர்ந்த மார்டீன் வல்ட்லீ முல்லர் தான் இந்தப் பெயரை வைத்தார். ஏஜியா என்ற கிரெக்கச் சொல் ஆசியா ஆனது. ஒஸ்ரேலியா என்றால் தெரியாத பகுதி-லற்றீன் சொல்". "அப்ப ஐரோப்பா என்ற பெயர் எப்படி வந்தது"? "கிரேக்க புராணங்களில் ஜீயுஸ் என்பவர் மனிதர்களின் தந்தையாக வர்ணிக்கப்பட்டார். அவரின் காதலிதான் யூரோப்பா. இப்ப விளங்குதா"? "அண்ணா இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" சிந்து கேட்க, ஜீவன் கொலரைத் தூக்கி, "அதுதான் ஜீவன்" என்று தன்னைத்தானே பெருமைப்பட்டுக் கொண்டான்.


"அண்ணா யார் உலகப் படத்தைக் கீறியது?" கேட்டாள் ஆதி. "மெர்கேடர் என்ற ஐரோப்பிய மேதைதான் 1534ஆம் ஆண்டில் வரைந்தார். அவர் தன் வாழ்நாள் முழுவதும் இதைத் தயாரிப்பதிலேயே செலவிட்டார். அவர் இறந்த அடுத்த வருடந்தான் அவை பிரசுரமாயின. அப்புத்தகங்களின் மேலட்டையில் அற்லஸ் உலகைத் தாங்கி நிற்பதுபோன்ற படம் வரைந்திருந்தார்." ஜீவன் கூறவும், "ஓ! அதுதான் அதை நாங்க அற்லஸ் என்றதோ" என்றாள் ஆதி. "ஓம். அற்லஸ் என்பது லிபியாவிலுள்ள ஒரு மலைதானே" என்றாள் சிந்து. "ஓமோம்" என்றான் ஜீவன்.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

கண்ணை மூடி கையை நாடிக்குக் கொடுத்தபடி யோசித்தபடி இருந்தாள் சிந்து. அருகே வந்த அப்பா "என்னம்மா யோசனை. இப்படி ஒருநாளும் நாடிக்கும் தலைக்கும் கைவைத்துக்கொண்டிருக்கக் கூடாது" என்றார். "ஏனப்பா?" என்றாள் சிந்து. "நாடியும் கையும் இப்படிச் சேரும்போது நெகரிவ் எனேர்ஜி உண்டாகும். உங்களுக்கு எதிர்மறை எண்ணங்களே வந்து உங்களை வீக்காக்கும்." "ஓ எனக்குத் தெரியாதே. இனி அப்படி இருக்க மாட்டன்'' என்று சொல்லிவிட்டு "அப்பப்பா சொன்னார் கைகட்டிக் கொண்டு நிற்கக்கூடாதென்று. முந்தின காலத்தில் வேலைக்காரர்களை ஏதும் குறை கண்டு பேசினால் அந்த எதிர்மறைப் பேச்சு அவர்களைப் பாதிக்காமல் இருப்பதற்காக அப்படி கைகட்டி நிற்பார்கள். அப்படி கைகள் குறுக்காக வைக்கும்போது அவர்களது பேச்சு பாதிக்காது. அவை அப்படியே கீழே போய்விடும். அப்படியிருக்கும்போது நாங்க நெடுக அப்படிக் கையை வைத்தால் நல்ல விடயங்களும் எங்களுக்கு கிட்டாமல் போயிடும். இப்ப விளங்கிச்சா"? "அப்படியா அப்பா. இப்ப நல்லாய் விளங்கீற்றுது. இன்னொரு சந்தேகம் எனக்கு. அப்பா ஒரு விதை எப்படியப்பா செடியாகிறது? பயறு வீட்டிலை இருக்கும்போதும் அதற்குள் உயிர் இருக்குமா"? "ஓம், விதைக்குள் உயிர் ஆற்றல் உறங்கிக் கொண்டிருக்கும். தண்ணீரும் பூமியின் வெப்பமும் அதனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும்போதுதான் அதற்கு சக்தி கிடைத்து முளை வரும். அதன் பிறகுதான் செடியாகும். ஆனாலும் சில பயறுகள் முளை விடாமலும் போவதுண்டு." "ஓ எவ்வளவு அதிசயம் என்ன?" "உயிர் உண்டாவது எல்லாம் பெரிய அதிசயம்தான். விதைக்குள்ளை குட்டிச் செடி வாறதை விட வயிற்றுக்குள்ளை ஒரு சிறுதுளி ஒரு குழந்தையாகிறது பெரிய அதிசயம். அதுவும் அந்தக் குட்டி உருவத்தில் குட்டிக்கால், கண், குட்டிக்கை எல்லாமே உண்டாகிறது. எர்ஸ்ரவுன்லிஹ் (வியப்படையச் செய்தல்) அமேசிங் என்ன" என்று சிந்து ஆச்சரியப்பட்டாள். "இன்னுமொரு ஆச்சரியம் தெரியுமா? தாயின் வயிற்றுக்குள் அதாவது கருவறையில் இருக்கும்போது குழந்தை சுவாசிப்பதேயில்லை. வெளியில் வந்தபிறகுதான் மூச்சுவிடத் தொடங்கும்." "ஓ அம்மாவின் உணவைப் பங்கு போடுவதுபோல் காற்றைப் பங்கிடாமல் ஆ. எவ்வளவு புதுமை என்ன?" சிந்துவின் ஆச்சரியத்துக்கு அளவேயில்லை.

சிந்து சொன்னா, "நாளைக்கு ரீச்சேர்ஸ்டே. ரீச்சருக்கு காட் செய்யப்போறன். யுகி, ஆதி நீங்க இரண்டுபேரும் அக்காக்கு ஹெல்ப் பண்றீங்களா? உங்களுக்கும் அண்ணாக்கும் வாழ்த்துமடல் செய்து தாறன். நாலுபேரும் ரீச்சருக்கு குடுப்பம்" என்று கூறியபடியே வாழ்த்துமடல் செய்யத் தொடங்கினாள். ஆதி கேட்டாள், "ஏனக்கா ரீச்சேர்ஸ்டே கொண்டாடுறது? உலகமெல்லாம் ஒரேநாளிலா கொண்டாடுவினம்"? "மதேர்ஸ்டே பாதேர்ஸ்டே மாதிரித்தான் இதுவும். வருஷத்திலை ஒருநாள் அவர்களுக்கு மதிப்பு குடுக்கிறது. மாதா பிதா குரு தெய்வம் என்று சொல்றதெல்லோ. எப்பிடி அப்பா அம்மா எங்கடை வளர்ச்சியிலை கவனம் எடுக்கிறார்களோ அப்பிடித்தான் குருவும். அதுதான் ஆசிரியருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுறது. சரிதானே அம்மா"? "ஓமோம். ஒவ்வொரு நாட்டிலேயும் ஒவ்வொருநாள் அதைக் கொண்டாடுவினம். அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து, இலங்கை எல்லாம் ஒக்டோபர் 5ஆம்நாள்தான் கொண்டாடுறது. அதுவும் 1994இல்தான் இன்ரர்நஷனல் லெவலிலை கொண்டாடத் தொடங்கினது. இந்தியாவில் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த திகதியான செப்டம்பர் 5ஆம்நாள் கொண்டாடுவினம். அவர் ஒரு தத்துவ ஆசிரியர். இந்தியாவின் ஜனாதிபதியாயும் இருந்தவர். அவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாட எல்லோரும் விரும்பிக் கேட்டபோது அவர் சொன்னாராம். 'எனக்குப் பிறந்தநாள் கொண்டாட விருப்பமில்லை. வேண்டுமென்றால் அன்றைக்கு ஆசிரியர் தினமாக்கிக் கொண்டாடுங்கோ' என்றாராம்" என்றாள் அம்மா.

திவ்யா சொன்னாள், "மதேர்ஸ்டே தொடக்கிவைத்த வேர்ஜீனியாவைச் சேர்ந்த அன்னா ஜார்விஸ் பிறகு இதை ஏன் நான் தொடங்கினன் என்று வருத்தப்பட்டு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடி அதனால் கைதும் செய்யப்பட்டாவாம்." "ஐயய்யோ. ஏன்?" மூவருமே கேட்டார்கள். "ஏனென்றால் அவர் தொடங்கியதன் நோக்கம் மதேர்ஸ்டே அன்று அம்மாவுக்கு ஓய்வு கொடுத்து நாள்முழுவதும் தங்கள் தங்கள் அம்மாவுடன் நேரத்தைச் செலவிட வேண்டுமென்று. தொலைவில் இருந்தாலும் அம்மாவைத் தேடி வரவேண்டும். இப்படி முடியவில்லையென்றால் தங்கள் கைகளால் கடிதங்கள் எழுதி தாங்களே கார்ட் செய்து அதன்மூலம் தங்கள் அன்பைக் காட்டவேண்டுமென்று நினைத்தாவாம். ஆனால் என்ன நடந்தது? அதிகளவில் கார்டுகளும், பூக்களும் விற்கப்பட்டு வணிகமயமாகிவிட்டது. பலர் கடைகளில் வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைகளை வாங்கி அனுப்புவதும் மலர்க்கொத்துகளுக்கு கடைகளில் பணம் கட்ட கடைக்காரர்களே அனுப்பி வைப்பதும்தான் நடந்துவருகிறது. தங்களது வேலைகளை ஒதுக்கிவிட்டு அந்த ஒருநாள் என்றாலும் அம்மாவுடன் தங்கள் நேரத்தைச் செலவழிக்க எத்தனைபேர் முன்வருகிறார்கள். எதற்காகத் தொடங்கினாரோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படேல்லையே"? "ஓமென்ன? நல்லது நினைச்சு அவர் தொடங்கி யாரோ பணம் சம்பாதிக்கினம். அம்மாவையளுக்கு ஒரு சந்தோஷமும் இல்லை. அவர் கவலைப்பட்டது நியாயம்தானேம்மா" என்றாள் சிந்து.

யுகி கேட்டான், "ஃபாதேர்ஸ்டே எப்ப கொண்டாடுறது? போனவருஷம் நாங்க அப்பாவோடை கொண்டாடினந்தானே. மறந்திட்டன் எப்பவென்று"? "யூன் 2ஆவது ஞாயிறுதான் கிட்டத்தட்ட 52 நாடுகளில் கொண்டாடினம். ஆனா மதேர்ஸ்டே தொடங்கி எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகுதான் அப்பாக்களுக்கு கொண்டாட்டம் வந்தது. எனக்குத் தெரியாது யார் தொடக்கினதென்று. உங்களுக்குத் தெரியுந்தானே அம்மா?" கேட்ட சிந்துவுக்கு, "சோனோரா டோட் என்று நினைக்கிறன். ஆனாலும் எங்கையோ வாசித்த ஞாபகமாயிருக்கு. அவரின் தாய் இறந்துவிட தங்களைத் தாயாக வளர்த்த தங்கள் தகப்பனின் பிறந்தநாளை ஃபாதேர்ஸ்டேயாக்க வருடக்கணக்காக தான் முதுமை அடைந்து இறக்கும் வரை எழுதி எழுதிவிட்டுச் சென்ற ஒரு பெண்ணின் தகப்பனின் பிறந்தநாள்தான் நாங்க இப்ப கொண்டாடுற ஃபாதேர்ஸ்டே. அந்தப் பெண் இறந்த அடுத்த வருடந்தான் அதைக் கொண்டாடப் பிரகடனப்படுத்தினார்களாம். 40, 45 வருடங்களாய் எழுதிக்களைத்த பெண் வாழுங்காலத்தில் அதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பா. அது சோனோராதானோ தெரியேல்லை" என்றாள் திவ்யா. ''என்றாலும் பரவாயில்லையம்மா. அவ நினைச்சதை சாதிச்சிட்டா. அதுதானே முக்கியம்" சிந்து கூறினாள்.

ஆதி கேட்டாள், "தமிழர் நாங்க இறந்த அப்பா அம்மாக்கு ஏதோ செய்கிறதெல்லோ? அப்பா குடுப்பார் அப்பம்மாக்கு." திவ்யா வியப்புடன் ''ஆதிக்குட்டி இதெல்லாம் ஞாபகம் வைச்சிருக்கிறா. ஆடிமாத அமாவாசையில் தகப்பனையும் சித்திரை பௌர்ணமியில் தாயையும் நினைவுகூர்ந்து எள்ளும் தண்ணீரும் குடுக்கிறது. அந்த நாட்களில் பூமியின் ஈர்ப்பு சக்தி அதிகரிக்குமாம். எங்கடை தினங்களெல்லாம் சந்திரனை அடிப்படையாக் கொண்டது. ஆங்கிலத் திகதி பார்க்கிறேல்லை. நாங்க திதி என்றதுதான் பார்க்கிறது" கூறினாள். "அதென்னம்மா திதி?'' யுகி கேட்க, ''அமாவாசை சதுர்த்தி என்றெல்லாம் வருமெல்லோ அதுதான். அதை பஞ்சாங்கத்தில் பார்க்க வேணும். சும்மா கலண்டரிலை பார்க்க ஏலாது". "ஓஹோ அதுதான் நீங்க நெடுக பஞ்சாங்கம் வாங்குறனீங்க என்ன?"என்று சிந்து சொன்னாள்.

யுகி ''எனக்கு விளங்கேல்லையம்மா. மாதா பிதா குரு தெய்வம் என்று சொல்லும்போது தெய்வத்தை விட அம்மாதான் முதலா?" கேட்டான். "அம்மாதானே பத்துமாதம் வயிற்றிலை பிள்ளைகளை சுமந்து கஷ்டப்பட்டு பெற்று வளர்த்து நித்திரை முழித்து நோய் வராமல் பாதுகாத்து நோய் வந்தாலும் அவர்களை நோயிலிருந்து மீட்டு பக்குவமாய் பராமரிக்கிறது. அம்மாதானே இவர்தான் அப்பா என்று அடையாளம் காட்டுறது. இதுக்கெல்லாம் சேர்த்து நன்றி காட்டத்தான் மாதா என்று முதல் சொல்றது. அம்மா இல்லை என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையில்லை. மாதா பிதா குருவை வணங்கினால் அதுதான் தெய்வம்" விளக்கினாள் அம்மா. "அப்ப இனிஷியலாய் மட்டும் ஏன் அப்பாவோட பெயரைப் போடுறது?" கேட்ட யுகிக்கு "அப்பாதான் உயிர் கொடுத்தது. சரி. தமிழில் அப்பா அம்மா என்ற சொல் கூட சும்மா ஒரு சொல்லாக வைக்கவில்லை. மிகவும் ஆராய்ந்து உயிரெழுத்து மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்து மூன்றையும் சேர்த்து ஒரு சொல்லாக ஆக்கி இருக்கிறார்கள். அதோடை குழந்தை முதல் வாயைக் குவித்து ம்மா அல்லது ப்பா என்றுதான் சொல்லும். அதோடை இன்னொன்று தெரியுமா? அம்மா உயிரெழுத்தோடை ம் என்ற மெல்லினம் மட்டும் சேருது. அம்மா மென்மையானவள். அப்பா உயிரெழுத்தோடை ப் என்ற வல்லினம். ஏனென்றால் அப்பா வலிமையானவர்." அம்மா கூறவும் "ஆ எவ்வளவு சிறப்பாயிருக்கு. சூ தமிழ் கிறேற்தான்" மூவருமே சொன்னார்கள். "இன்னொன்று தெரியுமா தமிழ் த-வல்லினம் மி-மெல்லினம் ழ்-இடையினம். இது எப்படி?" திவ்யா சொல்ல, "வாவ் அம்மா, தமிழிலை இவ்வளவு சிறப்பு இருக்கா?" சிந்து ஆச்சரியப்பட "இதை ஞாபகம் வைச்சிருங்கோ. கல்வி - இதில் ஒரு மெய்யெழுத்து. பணம் இதில் ஒரு மெய்யெழுத்து. ஒழுக்கம்-இதில் இரண்டு மெய்யெழுத்து. இதிலையிருந்து என்ன விளங்குது?" கேட்ட அம்மாக்கு "ஒழுக்கம் கரெக்கர்தான் முக்கியம் என்று விளங்குது" என்றனர் சிந்துவும் யுகியும். "ஒழுக்கம் என்றால் என்ன?" கேட்ட ஆதிக்கு, "இன்னும் கொஞ்சம் வளருங்கோ. உங்களுக்கு விளங்கும். நல்ல குணங்கள் நல்ல பழக்கங்கள்தான் ஒழுக்கம். அதோடு நமக்கு யாரும் எதைச் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ அதை மற்றவர்களுக்கு நாங்க செய்யக்கூடாது. அதுதான் ஒழுக்கம்" விளக்கினாள் அம்மா. "இப்ப நல்லாய் விளங்கீற்றிதம்மா" என்றாள் ஆதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

ஒழுக்கத்தை ஆங்கில DISCIPLINE என்ற வார்த்தையை வைத்து இந்தியாவில் ஒருநீதியரசர் எம். கற்பகவிநாயகம் ஆராயும் விதம் அற்புதமானது. சொல்லுங்கம்மா என்றார்கள் எல்லோருமே.

| | | |
|---|---|---|
| "D | 4ஆவது எழுத்து | ஆகவே 4 |
| I | 9ஆவது எழுத்து | ஆகவே 9 |
| S | 19ஆவது எழுத்து | ஆகவே 19 |
| C | 3ஆவது எழுத்து | ஆகவே 3 |
| I | 9ஆவது எழுத்து | ஆகவே 9 |
| P | 16ஆவது எழுத்து | ஆகவே 16 |
| L | 12ஆவது எழுத்து | ஆகவே 12 |
| I | 9ஆவது எழுத்து | ஆகவே 9 |
| N | 14ஆவது எழுத்து | ஆகவே 14 |
| E | 5ஆவது எழுத்து | ஆகவே 5 |

மொத்தம் கூட்டினால் 100. ஆகவே பாடங்களில் 100 எடுத்தால் போதாது. ஒழுக்கத்தில் 100 எடுக்கவேண்டும்." "நல்லாயிருக்கம்மா. நாங்க இதை மறக்கவே மாட்டம்" என்றார்கள் ஒன்றாக நால்வருமே.


ஜீவன் அம்மாவைக் கேட்டான், "ஏனம்மா கலாச்சாரத்துக்கும் பண்பாட்டுக்கும் என்ன வித்தியாசம். இரண்டும் ஒன்றுதானே." "இல்லை, இரண்டுக்கும் ஒரு சின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை இருக்கிறது. கலாச்சாரம் உடைகள், உணவுகள் சம்பந்தப்பட்டது. ஆனால் பண்பாடு என்பது பழக்கவழக்கம் சம்பந்தப்பட்டது. சேலை எமது கலாச்சாரம். ஆனால் எப்படி ஆபாசமில்லாமல் உடுத்துவது என்பது பண்பாடு. இப்ப புரியுதா. மற்றவர்கள் மனம் புண் படாமல் பேசுவது பண்பாடு." தாய் கூறவும், "இப்ப விளங்கிச்சம்மா" என்றான் ஜீவன்.

"தமிழ்தான் உலகின் முதல்மொழியென்று இப்போது உலகநாடுகள் ஏற்றுக்கொண்டுவிட்டன. என்ன அம்மா" கேட்டாள் சிந்து. "ஓம். இப்ப அமெரிக்க ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஒரு இடம் வந்திட்டுதே."

"அங்கு ஜொனத்தன் என்ற புரபஸர் தனக்கு எப்படி தமிழில் ஆசை வந்தது. தான் எப்படிப் படித்ததென்று சொன்னதை அன்றைக்குப் போட்டுக் காட்டினன்தானே" என்றாள். "ஜப்பானிய மொழியில் 3000 தமிழ்ச்சொற்கள் இருப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரிகிறது. கொரிய மொழியில் 5000சொற்கள் இருக்கிறதாம். இப்படிப் பல மொழிகளில் தமிழ் கலந்திருக்கு.




கொரியன் சொற்களில் அம்மா அப்பா ஒம்மா-ஒப்பா. புல்-புல்தான். வணக்கம்-வணக்காம்தா. குத்து-குத்தா, நாள்-நாள், கொஞ்சம்-கொஞ்சு" அம்மா சொல்ல ஆச்சரியத்துடன் சிந்து "நீங்க கொரியன் மொழி படிச்சீங்களா அம்மா"? "இல்லை, மொழி ஆராய்ச்சி செய்யும் நித்தி கனகரத்தினம் தொலைக்காட்சியில் ஒருநாள் சொன்னதைக் கேட்டேன்" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனப்பா நீங்க எல்லோரும் சொன்னீங்கதானே தமிழிலிருந்துதான் சமஸ்கிருதம் வந்ததென்று. ஆனால் கனபேர் சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ்வந்ததென்று சொல்லுகினம்" என்று அப்பாவை ஜீவன் கேட்டான். "கனபேர் சொல்றதால் அது சரியாகிவிடாது. எங்கடை அம்மா சமஸ்கிருதம் படித்தவ. அவ எங்களுக்கு ஆதாரத்தோடு விளங்கப்படுத்தினவ. தமிழ் எழுத்துகளை எப்படி மாற்றி சமஸ்கிருதம் ஆக்கியிருக்கினமென்று. நான் உங்களுக்கு எழுதிக்காட்டுகிறேன். அப்ப உங்களுக்கு நன்றாக விளங்குமென்று புரியும்படி விளங்கப்படுத்தினார். தமிழ் எழுத்து அ வின் பாதிதான் வடமொழி அ. தமிழ் க வின் பாதிதான் வடமொழி க. தமிழ் ச ப த ம ய ர ற ல வ எல்லாமே சின்ன மாற்றத்துடன் வடமொழி எழுத்தாயிருக்கு. தமிழ்தான் வடமொழியைவிட பழையமொழி. இனியும் யாரோ சொல்றதை நம்பாதீங்கோ" என்றார் அப்பா.

சிந்து அம்மாவைக் கேட்டாள், "என்னோடை படிக்கிற லின்டாவும் மிரன்டாவும் ருவின்ஸ். ஒரேமாதிரித்தான் இருப்பினம். ஆனா மிரன்டாவைவிட லின்டா கெட்டிக்காரி. ஒரே நேரத்திலை பிறந்தால் ஒரேமாதிரியெல்லோ படிக்கவேணும். அதேனம்மா? மிரன்டாக்கு எல்லாத்துக்கும் பயம். லின்டா பயப்பட மாட்டா. லின்டா ஸ்போட்ஸிலை கெட்டிக்காரி. மிரன்டா விளையாட மாட்டா. மிரன்டா லவ்விங் கரெக்ரர். லின்டா கொஞ்சம் றூடாயிருப்பா." அம்மா, "ஒரே மரத்திலை ஒரே கிளையிலை காய்ச்சுப் பழுத்த பழமெல்லாம் ஒரே ருசியாகவா இருக்கிறது? இல்லையே. வித்தியாசமான சுவை தருமே. ஏனென்றால் ஒரே கிளையென்றாலும் சூரிய வெளிச்சம், காற்று ஒரேமாதிரிப் பட்டிருக்காது. அதனால் அதன் சுவை வித்தியாசப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோலத்தான் குழந்தைகளும். வயிற்றுக்குள்ளை இரத்தோட்டம் ஒரே மாதிரி இருக்காது. அவை இருந்த பொசிஷன் வித்தியாசமாய் இருக்கும். அதோடை ஒரே நேரத்திலை பிறந்திருக்க மாட்டினம். ஒரு பிள்ளை பிறந்த பிறகுதான் மற்றக் குழந்தை பிறக்கும். அப்ப அவர்களுடைய ஜாதகமும் வேறுபடும். குணங்கள் திறமைகள் எல்லாம் வேறுபடும். சரியா?" என்று புரியவைத்தாள். "ஓ அதுதான் விஷயமா? இப்ப விளங்கீற்றுது" என்றாள் சிந்து.

சிந்து கேட்டாள், "அம்மா ஸ்கூலிலை இரண்டு கேர்ள்ஸ் கேட்டினம் தமிழர் ஏன் பொட்டு வைக்கிறதென்று. நான் சொன்னன் அதுக்கு ஒரு சையன்ரிவிக் றீசன் இருக்கென்று. நீங்க முந்தி சொல்லித் தந்தீங்கதானே. பெண்களுக்கு கெதியிலை எனர்ஜி போயிடுமென்று. அதுதான் எனேர்ஜியை கெதியிலை திரும்பப் பெறவும் மனம் ஒருநிலைப்படச் செய்யவும் நல்லது என்று. நெற்றியிலை இருக்கிற ஆக்ஞ்ஞா சக்கரத்தை அழுத்துவதால் அந்த இடம் அக்ரிவேற் ஆகி முகத்திலை இரத்தோட்டம் அதிகரிக்கும் என்று சொன்னன். சரிதானே அம்மா." "கெட்டிக்காரி அம்மா சொல்லவும்", "அப்ப அவை கேட்கினம் 'எங்களுக்கு எல்லாம் இரத்தோட்டம் அதிகரிக்கிறேல்லையா? எங்களுக்கு கொன்சன்ரேஷன் பவர் இல்லையா' என்று. நான் சொன்னன் பொட்டு கூட ஹெல்ப் பண்ணும். அவ்வளவுதான். உங்களை யாரும் வைக்கச் சொல்லேலையே என்றன். பேசாமல் போயிட்டினம்" என்றாள். "அப்பிடித்தான் எங்களை யாரும் குறைவாய் எடை போடவிடக் கூடாது." என்று திவ்யா சொன்னாள். "அதோடு மஞ்சள் சேர்ந்த குங்குமம் போடுவதால் தோல் சம்பந்தமான நோய்கள் வராது. மூளைக்குச் செல்லும் நரம்புகள் அதிகமான சூட்டை மூளைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அனுப்பாமல் அதைக் கட்டுப்படுத்தும் பகுதிதான் நெற்றி. அந்த நெற்றியில் குங்குமம் இடுவதால் அந்தச் சூடு தணியும்." திவ்யா சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஆதி கேட்டாள், "அதென்னம்மா முட்டை இடும் மாதிரி பொட்டு இடும் என்கிறீங்க." "ஓமென்ன, நான் இவ்வளவுநாளும் யோசிக்கவேயில்லை. ஆதி நல்ல புத்திசாலி" என்று பாராட்டினாள். "அதோடு பொட்டு வைக்கும்போது நாலாவது விரலான மோதிர விரலால்தான் இடவேண்டும். ஆனால் இப்ப எல்லோரும் ஸ்ரிக்கர் பொட்டு வைக்கிறார்கள். இது சூட்டையும் தணிக்காது. நல்ல பலனையும் தராது. சும்மா ஸ்ரைல்தான். இப்படி எல்லா நல்ல விஷயங்களையும் விட்டிட்டுப் போய்க்கொண்டிருக்கிறம்" திவ்யா கவலைப்பட்டாள்.

"அம்மா எனக்கு மூக்கு குத்த ஆசையாயிருக்கு. குத்தலாமா? என்னோடை படிக்கிற இரண்டு பிள்ளைகள் குத்தியிருக்கினம். ஒரு கேர்ள் போலிஷ்" சிந்து கேட்கவும் அம்மா சொன்னாள், "முதலில் ஏன் போடுறது என்று தெரிந்து கொள்ளுங்கோ. இப்ப நீங்க சின்னப்பிள்ளை. வயது வந்தவர்கள்தான் மூக்கு குத்துகிறது. பருவ வயது வந்தவர்களுக்கு தலையில் சூடு ஏறும். அதைக் குறைப்பதற்காக மூக்கு குத்துறது. மூக்கு வழியாகவும் காது வழியாகவும் அந்த சூடு இறங்கிவிடும். இப்ப உங்களுக்கு காது குத்தினது போதும். விளங்கினதா? பிறகு விரும்பினா குத்துவம்" என்றாள். "ஓ. அப்படியோ, எனக்குத் தெரியாது. நான் நினைத்தன் தமிழருடைய ஃபஷென் என்று" என்றாள்.

"எப்படியம்மா லிப்ஸ்ரிக் போடத் தொடங்கினார்கள்?" என்று கேட்டாள் ஆதி. "அதொன்றும் ஸ்ரைலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கேலை. இந்த குளிர் நாடுகளில் எங்கடை சொண்டு குளிருக்கு வெடிக்கிறதெல்லோ. அதைக் காயாமல் ஈரப்பதனாக வைத்திருப்பதற்காக வஸ்லின் போடத் தொடங்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். பிறகு அதையே சிவப்பு, பிங் என்று போடத் தொடங்கி இப்ப எத்தனை நிறங்களில் போடுகிறார்கள். சிவப்புச் சொண்டு அழகாக இருக்கிறதெல்லோ. அதுதான் அப்படிப் போட்டு அதே பழக்கமாகிவிட்டது. குளிர் இல்லாத நாடுகளும் அதை ஒரு ஸ்ரைலாகச் செய்யத் தொடங்கி விட்டார்கள்" என்று திவ்யா கூறினாள். அங்கு வந்த சுந்தரேஸ் "நீர் சொல்றது ஒரு விதத்தில் சரிதான். ஆனால் முதன்முதலில் அதை தொடங்கியவர்கள் இந்தியாவிலுள்ள பஞ்சாபிகள்தான். அவர்கள் திருமணங்களில் 3500 வருடங்களுக்கு முன்பு போட்டார்களாம். தேனின் மெழுகு, தாவரங்களின் நிறம் இவற்றை உபயோகித்து லிப்ஸ்ரிக் செய்தார்கள். ஆனால் இப்போது மான், மாட்டின் கொழுப்பு, தேன், ஆமணக்கெண்ணெய் இன்னும் இரசாயனங்களும் கலக்கத் தொடங்கிவிட்டார்கள். அது அவ்வளவாக நல்லதில்லை யென்றுதான் நினைக்கிறேன்" என்றார்.



"கல்யாணத்துக்கு மெஹந்தி போடுறது ஏனம்மா? அது ஸ்ரைலுக்கா அல்லது ஏதும் நல்ல காரணமிருக்குதா?" கேட்டாள் சிந்து. "அதுவா? மருதாணி இலைகளில்தான் இந்த மெஹந்தி செய்கிறது. அது நல்ல குளிர்ச்சி. ஆனால் இந்த குளிர்நாடுகளுக்கு அவ்வளவு ஏற்றதல்ல. கல்யாண மணப்பெண்ணுக்கு கொஞ்சம் நேர்வஸாக இருக்கும் கல்யாணத்தை நினைத்து. இந்த மருதாணி நேர்வசைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கும். அதோடை தமிழரின் கல்யாணம் நீண்ட நேரம் எடுக்கும். அப்ப கல்யாணப்பெண் கூட நேர்வஸ் ஆயிடுவா. அதைக் குறைக்கத்தான் போடுகிறது." அம்மா சொன்னா. எங்கிருந்தோயிருந்து வந்த யுகி கேட்டான், "ஏன் மாப்பிள்ளைக்கு நேர்வஸ் வராதா?" "ஆண்பிள்ளைகள் ஸ்ரோங்தானே. அவர்களுக்கு நெர்வஸ் இல்லையென்று திவ்யா சொல்ல, "இன்னும் கொஞ்சக்காலத்தில் ஆம்பிளையள் போடுவினம் பாருங்கோ. பொம்பிளைகளுக்குத் தேவையில்லை" என்றாள் சிந்து.

❖❖❖

## 9

இரவு சாப்பிடும்போது சிந்து கேட்டாள், "அப்பா எனக்கு



ஸ்ரோறி ஒஃப் மை லைஃவ் என்ற ஹெலன்கெல்லரின் புத்தகம் வாங்கித் தருவீங்களா? இன்றைக்கு அவவைப் பற்றிப் படித்தம்"என்றாள். "ஓ அதுக்கென்ன. நாளைக்கே வாங்கித்தாறன்" என்றார். "அது யார் எங்களுக்கும் சொல்லுங்க? என்றான் யுகி. "அவ அமெரிக்காவிலை 27யூன் 1880இல் பிறந்த ஒரு அற்புதமான பெண். பிறந்த ஆறு மாதத்திலையே பேசத் தொடங்கி ஒன்றரை வயதில் வந்த மூளைக்காய்ச்சலால் கண்பார்வை, கேட்குந்திறன், பேசும் திறன் இவ்வளவற்றையும் இழந்த பெண், இவரது அப்பா கிரகாம்பெல்லைச் சந்தித்து உதவி கேட்டபோது அவர் பெர்கினன் என்ற பள்ளிக்கு அனுப்பி ஆன் சல்லிவான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான ஆசிரியரையும் அறிமுகப்படுத்தினாராம்." "யார் ரெலிபோனைக் கண்டுபிடித்த கிரகாம்பெல்லா?" கேட்டான் ஜீவன். "ஓம். அவர்தான். அந்த ரீச்சர் ஐந்தில்லை பத்தில்லை. 49 வருஷம் இவரோடையே இருந்திருக்கிறார். ஹெலன் கெல்லரை உருவாக்கிய பெருமை இவருக்குத்தான். காது கேட்காத பேசமுடியாத கண் தெரியாத ஒரு குழந்தையை உலகமே போற்ற ஒரு எழுத்தாளராக்கி இருக்கிறார், பிரெய்லி முறையில். ஆங்கிலம் மட்டுமில்லை. ஜேர்மன், பிரெஞ்ச், லற்றீன், கிரேக்கம் மொழிகளைத் தன்னுடைய பத்து வயது



முடியுறதுக்குள்ளை நியூயோர்க் காதுகேளாதவர் பள்ளியில் படித்து 24 வயதில் பட்டம் பெற்றார். கண் தெரியாத, காதுகேட்காத,வாய் பேச முடியாத பிள்ளை பட்டம் பெற்றது உலகத்திலேயே இவர்தானாம். 23 வயதில் நான் கேட்ட சுயசரிதை எழுதினாராம்." "அதென்ன சுயசரிதை என்றால்?" கேட்டாள் ஆதி. "தன்ரை கதை. மகாத்மாகாந்தி சுயசரிதை எழுதினவரெல்லோ?" கேட்டான் யுகி. "ஓமோம்" என்றார் அப்பா. "12நூல்கள் எழுதினாராம். இவை 50க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவையாம். பல கட்டுரைகளும் எழுதினாராம். மை ரீச்சர், த வேர்ள்ட் ஐ லிவ் இன், லைற் இன் மை டாக்னெஸ், த ஸோங் ஒஃவ் த ஸ்ரோன் வோல்." "எனக்கு எல்லாமே வாசிக்க வேணும். இங்லீஷ், டொய்ச் இரண்டிலையும் வேணும்". "அதுக்கென்ன உங்களுக்கு ஜேர்னலிஸ்ற் ஆகவேணும் என்றதுதானே கனவு. அப்ப இதுகளை வாசிக்காட்டால் எப்படி? எல்லாம் வாங்கித்தருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள்தான் உண்மையான செல்வம். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. ஒரு நூலகம் திறக்கும்போது அங்கிருக்கும் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்று. எவ்வளவு உண்மையான வார்த்தை" என்றார். "அவ 39நாடுகளுக்கு சென்று பணம் சேர்த்து பார்வையற்றவர்களுக்கு படிக்க உதவினாராம். தன்னுடைய வீட்டையும் பார்வையில்லாதவர்களுக்கு பள்ளியாக்கினாராம்". "இவ்வளவு விஷயம் தெரிந்திருக்கு. பிறகென்ன" என்றார் அப்பா. "இன்னும் கேளுங்க அப்பா. சலிவான் கடைசிவரை இவரோடையே இருந்து இவரின் கையைப் பிடிச்சபடியே இறந்தாராம். பின் இவருக்குத் துணையாக வந்துசேர்ந்த ஸ்கொட்டிஷ் பெண்ணான பாலி தாம்ஸன் இவருக்குப் பேசப் பழக்கினாராம். பார்வை அற்றவர்களுக்காக வழக்குரைஞராக, பேச்சாளராக, எழுத்தாளராக நாட்டின் சிறந்த பெண்மணி என்ற சுதந்திரப் பதக்கம் பெற்றாராம். 88 வயது தொடங்க ஒரு வாரமிருக்கும் போது நித்திரையிலேயே இறந்தாராம். அவரது வாழ்க்கை நாடகமாக திரைப்படமாக வந்தது. அலபாமாவில் இவருக்கு வெங்கலச்சிலை வைச்சிருக்கு. வைத்தியசாலை,பள்ளி, வீதி என்று இவரது பெயர் வைக்கப்பட்டது. "1968 நான் ஸ்கூலிலை படிக்கும்போது தான் அவர் இறந்தவர். எனக்கு நினைவிருக்கு" என்றார் அப்பப்பா. "எவ்வளவு குறைகள் இருந்தாலும் சாதிச்சுக் காட்டின அந்த வில்பவரை நீங்களும் வளர்த்துக்கணும்" அப்பப்பா சொல்லவும் ஜீவன், சிந்து, யுகி "ஓமோம்" சொல்லவும் ஆதி கேட்டாள், "எப்பிடி வளர்க்கிறது, ஏதோ நாய்க்குட்டி வளர்க்கிற மாதிரிச் சொல்றீங்க" என்றதும் எல்லோரும் சிரித்தார்கள்.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

அப்பா சுந்தரேசின் நண்பர் பிரகாஷின் குடும்பம் வந்திருந்தது. அவர்களின் மகன் ஹார்ஷனும் மகள் ஹார்ஷிகாவும் கலகலப்பானவர்கள். கதையும் சிரிப்பும் வீடே களைகட்டியது. அவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஹார்ஷன் சொன்னான், "அங்கிள் ஒருநாள் டடிடை ஃப்ரண்ட் சிறீலங்கன் அவரை றோட்டிலை பார்த்தம். பேசிற்றே வந்தவர் தங்கள் வீட்டை வரும்படி இன்வைற் பண்ணினார். அப்புறம் சொன்னார். அடிச்சிட்டு வாறீங்களா? அல்லது அடிச்சிட்டு விடுங்கோ. நான் அடிப்பன். அல்லது வந்து அடியுங்கோ. நாங்க திகைச்சிட்டம் அங்கிள். எனக்கு ஒண்ணுமே புரியல்லை. நாங்க அவரை அடிக்கிறமா? அவர் அடிப்பாரா? எதுவுமே புரியலை. அப்புறந்தான் டடி எக்ஸ்பிளெயின் பண்ணினார். சிறீலங்கன்ஸ் ஃபோன் பண்றது என்று சொல்லமாட்டாங்க. ஃபோன் அடிக்கிறதென்றுதான் பேசுவாங்க என்று. "ஹார்ஷனின் பேச்சைக் கேட்டு எல்லாருமே சிரிசிரியென்று சிரித்தார்கள். எல்லோரும் கலகலப்பாக இருக்கும்போது பிரகாஷ் கேட்டார், "எங்கே அப்பாவைக் காணேல்லை". "அப்பா சன்டேசிலை ஓல்ட்ஏஜ் ஹோமுக்குப் போறவர். அங்கை கண்தெரியாது வாசிக்க கஷ்டப்படுகிறவைக்கு வாசித்துக்காட்டப் போய்விடுவார். பிள்ளைகளும் யாரும் ஒருத்தர் போவினம். இன்றைக்கு ஒவ்வொருத்தரும் ஏதோ வேலையிருக்கென்று போகேல்லை." சொன்னார் சுந்தரேஸ். "ஓ நல்ல சேர்வீஸ். நீங்க இப்பவே பிள்ளைகளையும் ரெயின் பண்றீங்க. வொன்டஃபுள் ஜொஃப்" கூறினார் பிரகாஷ். "சுந்தரேஸ் நான் சொல்றதை நீங்க ஸ்பீடாய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லணும்" என்றார். "இது யாரு தைச்ச சட்டை தாத்தா தைச்ச சட்டை" எல்லோருமெ சொல்லிப் பார்த்து தடக்கி மாற்றிச் சொல்லி சிரித்தார்கள். பிரகாஷ் சொன்னார், "இதைச் சொல்லுங்கோ பார்க்கலாம். "ஓடற நரியிலை ஒரு நரி கிழ நரி உருளுது புரளுது" சுந்தரேஸ் கூறியதைவிட இது சொல்லக் கஷ்டப்பட்டு நன்றாகவே சிரித்து மகிழ்ந்தார்கள். ஹர்ஷன் ஓரளவுக்கு சரியாகச் சொன்னான்.

ஹர்ஷன் "கம்பியூட்டர் பாஷையிலை வாழ்க்கை பற்றி நானொரு விஷயம் சொல்லட்டா?" "சொல்லும் சொல்லும். உங்களிட்டைத்தானே இதுகளை நாங்க கேட்க வேண்டியிருக்கு."

| | | |
|---|---|---|
| "இன்பத்தை | Inbox | இல் வை |
| கவலையை | Outbox | இல் வை |
| புன்னகையை | Sent | பண்ணு |
| கோபத்தை | Delete | பண்ணு |
| மனதை | Vibrate | பண்ணு |

வாழ்க்கை தானாகவே Ringtone ஆகிவிடும்."

"வாவ். ரொம்ப நல்லாயிருக்கே" சுந்தரேசும் திவ்யாவும் ஒன்றுசேரச் சொன்னார்கள். ஹர்ஷன் "நான் கேட்கிறது யாருக்குத் தெரியும்? சொல்லுங்க பார்க்கலாம். நாங்க ஃபோன் பண்ணும்போது ஹலோ ஹலோ என்பமே. அது ஏன் தெரியுமா? அந்தச் சொல் எப்படி வந்தது?" சுந்தரேஸ், "ஹர்ஷன் எங்களை மடக்கீற்றார். நீரே சொல்லும் பதிலை" என்றார். "ரெலிஃபோனைக் கண்டுபிடித்த கிரகாம் பெல்லின் வைஃப் உடைய பெயர் மார்க்கிரெட் ஹலோ. அவர் முதன் முதலாய் பேசும்போது தன்னுடைய வைஃப்பை ஹலோ கேட்குதா என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். அந்தச் சொல்லே நிலைச்சிட்டுது" என்று கூற, "கில்லாடிதான். எங்களுக்கெல்லாம் தெரியாத நல்ல இன்ஃமேஷன். நாங்க இனி இதை மற்றவைக்கு அள்ளிவிடலாம்" சுந்தரேஸ் சொன்னார்.

"இங்கை வாறதென்றால் பிள்ளைகள் துள்ளிக்கொண்டு வருவினம். இங்கு நீங்க எல்லாம் அவங்களையும் சேர்த்து வைச்சுப் பேசுறதாலை இங்கு வர மட்டுந்தான் விருப்பம். மற்ற இடங்களில் பெரியவங்களே பேசிக்கொண்டு இருக்கிறதாலை இவங்க போரடிக்குதென்று வர மறுத்திடுவாங்க" என்றார். "எங்கடை பிள்ளைகளும் அப்பிடித்தான்" என்றார் சுந்தரேஸ். "சிந்துஅக்காடை பிறந்தநாளன்றுதான் கிரகாம் பெல்லும் பிறந்தவர்." ஆதி கூற, "ஓ மார்ச் 3ஆம் திகதியா? அப்ப சிந்துவும் கிரகாம்பெல் போல பெரிய இன்வென்ஷர் ஆவா" பிரகாஷின் மனைவி ரோகிணி சொன்னா. "தாங்ஸ் ஆன்ரி. அவரைப்போல வராவிட்டாலும் பெயரெடுக்கிற மாதிரி வருவன்" என்றாள் சிந்து. "வெல்டன் சிந்து. இப்பிடித்தான் தன்னம்பிக்கையோடை இருக்கவேணும்" என்று பாராட்டினார் பிரகாஷ்.

சிந்துவே எல்லோருக்கும் தேநீர் தயாரித்து யுகியோடு பரிமாற பிரகாஷ் தம்பதிகள் அசந்துபோனார்கள். "எவ்வளவு கெட்டிக்காரர் உங்கடை பசங்க" என்று பாராட்டித் தள்ளினார்கள். திவ்யா, "நாங்க கொஞ்சம் கொஞ்சமாய் பழக்கிறதிலைதானே இருக்கு. அவங்களையும் எங்களுக்கு உதவுறதிலை ஈடுபடுத்தினால் அவர்களும் சந்தோஷமாய் செய்வார்களே" என்றாள். "அவங்க படிக்கட்டும் என்று நாங்க விட அதுங்க எங்கட கஷ்டத்தை எங்க புரிஞ்சுக்கிறாங்க. இனி நானும் பழக்கணும். ஹர்ஷனைவிட சின்னப் பொண்ணுதானே சிந்து. என்னமாய் எவ்வளவு கியூட்டாய் வேலை செய்கிறா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள் ரோகிணி. "எங்கடை பசங்களைப் பார்க்கணுமே. ஸ்கூலால் வந்தால் புத்தகப்பையை ஹோலிலேயே வைச்சிட்டுப் போறது. சாப்பிட்ட தட்டை மேசையிலேயே வைச்சிட்டுப் போறது. அப்பப்பா டிசிப்பிளினே இல்லை". "ரோகிணி திவ்யாட்டைக் கேட்டு எல்லாம் பழகிக்கோ. அவங்களும் உன்னைப்போலத்தானே வேலைக்கும் போய் வீட்டையும் பார்த்துக்கிறாங்க" என்று பிரகாஷ் சொல்லவும் "இதுதாங்க இங்கை வந்திட்டுப் போனாலே இவர் எனக்கு டோஸ்தான். எங்கைங்க நான் உங்களைப்போல ஆகிறது?" சலிப்போடு சொன்னாள் ரோகிணி.

நிலைமையைத் திசை திருப்ப சிந்து சொன்னாள், "இதைக் கேளுங்க அங்கிள் ஆன்ரி. தமிழ் இனி எப்படியெல்லாம் போகப்போகிறதென்று சொல்லியிருக்கு.'

| | | |
|---|---|---|
| தடுக்கி விழுந்தால் | மட்டும் | அ ஆ |
| சிரிக்கும்போது | மட்டும் | இ ஈ |
| சூடு பட்டால் | மட்டும் | உ ஊ |
| அதட்டும்போது | மட்டும் | எ ஏ |
| ஐயத்தின்போது | மட்டும் | ஐ |
| ஆச்சரியத்தின்போது | மட்டும் | ஒ ஓ |
| வக்கணையின் போது | மட்டும் | ஔ |

விக்கலின்போது மட்டும் ஃ என்று தமிழ் பேசி மற்றநேரம் வேற்றுமொழி பேசும் தமிழர்களிடம் மறக்காமல் உரத்துச் சொல் உன் மொழி தமிழ்மொழியென்று." "ஃவன்ராஸ்ரிக் சிந்து" ரோகிணி சொல்ல "இதுவும் தமிழ் இல்லை. அற்புதமாயிருக்கம்மா" பிரகாஷ் பாராட்டினார். "நான் உண்டாக்கேல்லை அங்கிள். யாரோ நல்ல வடிவாய் யோசிச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருக்கினம். "ஹர்ஷிகா நீங்கதான் எங்களை தமிழ் கிளாசுக்கு அனுப்பிறேல்லையே" என்றாள். "அனுப்பாட்டாலும் பரவாயில்லை, நீங்க சொல்லிக் கொடுக்கலாமே. தாய்மொழி முக்கியம் இல்லையா? வேணும் என்றால் இவங்க அப்பாட்டைப் படிப்பாங்க. அந்த நேரத்திலை கூட்டிவந்து விடுங்களேன். இவங்களோடை படிக்கலாமே" என்றார் சுந்தரேஸ். "எந்த நாளிலை? ஹர்ஷிகா மியூசிக் கிளாசுக்கும் போறவ. சிந்து நீங்க டான்ஸ் கிளாஸ் போறீங்கதானே. எந்த கிரேட் இப்ப?" ரோகிணி கேட்டாள். "அப்பா நல்ல விரிவான இராமாயணக்கதை சொல்லி வாறார்" சுந்தரேசன் சொன்னார். ஹர்ஷிகா "ஏன் அங்கிள் இராவணனுக்கு பத்து தலை இருக்கு? அவருக்கு கோல்ட் பிடிச்சால் எப்படி எல்லா மூக்கையும் சீறுவார்?" ஹர்ஷிகாவின் கேள்வியை இரசித்து எல்லோருமே விழுந்து விழுந்து சிரித்தார்கள். சுந்தரேசன், "உண்மையில் பத்து தலை இல்லை. அவ்வளவு சக்தி உள்ளவன் என்றதை இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். முருகனுக்கு ஆறு தலை என்றதும் அப்படித்தான். அதோடு ஆறுபக்கமும் பார்த்து எங்களுக்கு அருள் செய்வார் என்றும் சொல்லலாம். ஆறு தலைகளும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்கிறது.


| | |
|---|---|
| முதலாவது தலை | Kraft (energy) |
| இரண்டாவது தலை | Wissen (Knowledge) |
| மூன்றாவது தலை | Jugend (Young) |
| நான்காவது தலை | Licht (Light) |
| ஐந்தாவது தலை | Glücklich (Happy) |
| ஆறாவது தலை | Vollständigkeit (Completeness)" |

"ஓஹோ இப்பதான் எனக்கு விளங்குது. ஆனா இராமரும் சக்தி உள்ளவர்தானே. அப்ப ஏன் அவருக்கு கன தலை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லேலை" என்றான் யுகி. "உங்களிட்டைக் கேட்டுத்தானடா கதை எழுதவேணும். இவங்கடை கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாது" சலிப்புடன் சொன்னார்.

சிந்து கேட்டாள், "ஏன் அங்கிள் தமிழ்நாட்டில் அந்த அழகான மெரீனா கடற்கரையை கிறிமெற்றோரியமாக்கி யிருக்கிறார்கள்.'' திடுக்குற்ற ரோகிணி "இல்லையே" என்றாள். ''ஏன் ஆன்டி அண்ணா சமாதி, எம்.ஜி.ஆர் சமாதி, ஜெயலலிதா சமாதியென்று எத்தனைபேரின் உடம்பை வைத்திருக்கிறார்கள்?"



"ஆமா என்ன. நாங்க இதை யோசித்ததேயில்லையே. இது ஒரு தப்பான விஷயம்தான். யாரிட்டை போய் சொல்றது. நிச்சயம் அடுத்தமுறை இந்தியா போகும்போது யாரும் அரசியல் தலைவர்களுடன் பேசணும், இந்தியாவைச் சேராதவர்களின் பார்வையில் இது எவ்வளவு மோசமான விஷயமென்று" கூறினார் பிரகாஷ். "கிறிமெற்றோறியம் என்றாலே எல்லோரும் பயப்படுவார்கள், இறந்தவர்களின் ஆவி உலாவுமென்று. இவர்களுடைய ஆவி உலாவாதா?" கேட்டான் ஜீவன். "ஆமா எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால் மெரீனாவில் பழக்கமாயிடிச்சு. ஆனால் இது ஒரு மோசமான விஷயம்தான். சிந்து சொல்லத்தானே எனக்கும் உறைக்கிறது" கூறினார் பிரகாஷ்.

ஜீவன் "மாதங்களின் பெயர்கள் வந்த கதை உங்களுக்குத் தெரியுமா?" கேட்கவும் "இவங்க எங்களை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டாங்க போலிருக்கே" என்றார் பிரகாஷ். சொர்க்கத்தின் வாயிற்காப்போனின் ஜன்னுஸ் என்ற பெயர்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி. பாவங்களுக்கு பரிகாரம் தேடும் காலத்தை பெப்ருவாலியா என்பர். அதுவே பெப்ரவரி ஆயிற்று". "மார்ச் எனக்குத் தெரியும்" என்றான் ஹர்ஷன். "யுத்த தேவதையின் பெயரான மார்ஸ் தானே". "ஓமோம். அது சரி." என்றான் ஜீவன். "மலர் பூத்தல் என்ற லற்றீன் சொல் ஏப்பிரிரே. அது ஏப்பிரல். தாவரங்களை வளரவைக்கும் தேவதையின் பெயரான மேயா மே ஆகிவிட்டது. யூன் எனக்குத் தெரியேல்லை. யூலை யூலியசீசரின் பெயர். ஓகஸ்ற் முதலாம் ரோம் சக்கரவர்த்தி ஒகஸ்ரிஸ் இன் பெயர். லற்றீன் சொல்லான செப்ரெம் என்றால் *07* என்று அர்த்தம். *08* லற்றீனில் ஒக்டோ. அது ஒக்டோபர். லற்றீன் நெவம் என்பது *09*. டிசெம் *10* டிசெம்பர். எல்லாம் லற்றீன் சொற்கள்தான் மாதங்களுக்கு வைத்திருக்கு"ஜீவன் முடிக்க, திவ்யா "தமிழிலும் நவ என்பது *09*தானே." "ஆமா என்ன" என்று வியந்தாள் ரோகிணி. பலவிதமான உரையாடலுடன் விடைபெற்றார்கள்.

❖❖❖

## 11

"அம்மா இன்று ஸ்கூலில் தீபாவளி பற்றிக் கதைத்தோம். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு றீசன் சொல்றாங்க. நரகாசுரனை கிருஷ்ணர் கொன்ற நாள் என்பது உண்மையா அம்மா. தமிழர்கள் ஒருவரைக் கொன்ற நாளை சந்தோஷமாகக் கொண்டாடுகிற குரூர மனம் உள்ளவர்களா? தமிழர்கள் அப்படியில்லை. மற்றவர்கள் துன்பத்தில் மகிழ்வாயிருக்கிற குணம் தமிழருக்கில்லை என்று சொன்னேன். உண்மையில் எது சரி" என்று சிந்து கேட்டாள். "பழைய கதைகளில் எது சரியென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கிறது கஷ்டம். ஆனால் இது வடஇந்தியாவில் அக்பர் காலத்தில் தொடங்கியதாக எங்கேயோ வாசித்த ஞாபகம். இராமர் பட்டாபிஷேகம் நடந்தநாள்தான் தீபாவளி என்றும் ஒரு கதையிருக்கிறது. வடஇந்தியர் தமிழ்நாட்டுக்கு வந்த பிறகே இது தமிழரால் கொண்டாடப்பட்டு அப்படியே இலங்கைக்கும் வந்துவிட்டது. அளி என்றால் வரிசை. தீபங்களின் வரிசை. இதுவே தீபாவளி. ஆனால் தமிழரின் தீபத்திருநாள் கார்த்திகை விளக்கீடு. கார்காலம் தொடங்கும் காலத்தில் நேரத்துடனே இருட்டுவதால் அக்காலமான கார்த்திகையில் வீடுகள், ஆலயங்களில் விளக்கேற்றி வழிபடுவர். முந்தையகாலத்தில் மக்கள் இருளுக்குப் பயந்தார்கள். பாம்புகள், விஷப்பூச்சிகளின் தொந்தரவு அக்காலத்தில் இருந்ததால் விளக்கேற்றி இருளைப் போக்கினர். கார்காலத் தேவனை வரவேற்கிற ஒரு திருநாள்தான் இந்தத் தீபாவளி." திவ்யா சொல்லவும், "ஹெலோவின் மாதிரியா?" யுகி கேட்டான். "ஓ எங்கடை தீபாவளிதான் இங்கை ஹெலோவின். வேறையொன்றுமில்லை. திருவண்ணாமலையில் மலை உச்சியில் எல்லா உயிரினங்களின் நன்மைக்காகவும் விளக்கேற்றுவார்கள்" என்று அம்மா விரிவாக எடுத்துரைத்தாள். "ஏனம்மா நாங்கள் கிரிவலம் வந்த திருவண்ணா மலைதானே" கேட்டாள் சிந்து. "ஓமோம். பார்த்தீங்கதானே. பௌர்ணமியன்று எத்தனை ஆயிரம் மக்கள் அந்த மலையைச் சுற்றி வந்ததை. 40 கிலோ மீற்றரையும் நடந்தே வந்தம்தானே" என்றாள் திவ்யா.

"கடல் மலை ஆறு இவற்றுக்கு மின்னாற்றல் உண்டு. அதுதான் எங்கடை ஆலயங்கள் இவற்றுக்குப் பக்கத்தில் கட்டியிருக்கினம். கருங்கல்லுக்கும் அந்த மின்னாற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கென்றபடியால்தான் அதில் சிலைகள் செய்தார்கள்." சொல்லவும் ஜீவன், "ஓ இந்த ஆற்றல் இருந்ததால்தானே ஆதிமனிதன் கருங்கல்லை ஒன்றோடொன்று தேய்த்து நெருப்பை உண்டாக்கினான் என்ன?" என்றான். "பெரிய கண்டுபிடிப்பு. எல்லாருக்கும் தெரிந்ததுதானே" என்று நக்கலடித்தான் யுகி.




யுகி ஜீவனைக் கேட்டான், "அண்ணா, நொஸ்ரடாம் பற்றிச் சொல்லுங்க. அவர் சொன்னதெல்லாம் இப்ப நடந்துகொண்டிருக்காம். 1505இல் பிறந்த அவர் நியூயோர்க் ருவின்ரவர் தகர்ப்பு பற்றிக்கூட சொன்னவராம்." இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆதி. "ஏனண்ணா ஆம்ஸ்ரடார்ம் சொல்லத் தெரியாமல் யுகியண்ணா நொஸ்ரடாம் என்கிறாரா. நீங்க ஆளைப்பற்றிக் கதைக்கிறீங்களா? இடத்தைப் பற்றிக் கதைக்கிறீங்களா" என்று கேட்டாள். "ஆதி ஆம்ஸ்ரடாம் ஹோலந்துத் தலைநகரம். இவர் நொஸ்ரடாம். இவர் ஒரு யூதர் என்று நினைக்கிறன். இவர் சொன்னதெல்லாம் நடந்துகொண்டு வருகிறது. 6 ஆயிரம் ஆருடங்கள் சொல்லியிருக்கிறாராம். அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டது, இளவரசி டயானா கார்விபத்தில் இறந்தது, ஹிட்லர் இறப்பு, ஜப்பான் அணுகுண்டு வீச்சு என்று நிறைய சொன்னதெல்லாம் நடந்திருக்கிறது." "அது எப்படியண்ணா அவருக்குத் தெரிந்தது?" ஆதியும் யுகியும் ஒரு சேரக் கேட்டார்கள். "அதுதானே இன்னும் அவரைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர் ஒரு எழுத்தாளர், வானியல் நிபுணர், வைத்தியர், மொழிபெயர்ப்பாளர். தான் சொன்னதெல்லாம் 3797ஆண்டுகளுக்கு நடக்குமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1555இல் கூறியிருக்கிறார்." "ஓ அப்படியென்றால் அவ்வளவு காலமும் உலகம் அழியாது. அப்ப பயமில்லை"என்றான் யுகி. "இலங்கைப் போர் பற்றியும் சொல்லியிருக்கிறாரா?" யுகி கேட்டான். "இல்லையென்று நினைக்கிறன். ஏனென்றால் இலங்கை ஒரு சின்னநாடு. அதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. அம்மம்மா முந்தி இந்தியாவுக்கு போனபோது இந்தியாவில் இருக்கிறவைக்கே இலங்கையைத் தெரியாதாம். சிலோன் என்றால் சிங்கப்பூரா என்று கேட்பார்களாம். அம்மா ஒருக்கா சொன்னாதானே" என்றான் ஜீவன்.

யுகி கேட்டான், "ஏனண்ணா உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் ஒரேயடியாகக் கட்டப்பட வில்லையாம். நிறைய அரசர்கள் தங்கள் தங்கள் காலத்தில் தொடுத்துக்கட்டிக் கொண்டே போனார்களாம். அப்படியா அண்ணா?'' "ஓமோம் 9000 கிலோமீற்றர் துரத்துக்கு நீள்கிறது. முழுவதும் கட்டி முடிக்கும்போது 10 லட்சம் வேலையாட்கள் இறந்திருக்கிறார்களாம். இறந்த உடல்களையும் அதற்குள்ளேயே வைத்துக் கட்டிக்கொண்டு போனார்களாம்.'' ஜீவன் கூறவும் சிந்துவும் ஆதியும் கவலையுடன், ''எத்தனை அம்மாக்கள் பிள்ளைகளைத் தேடியிருப்பினம்" என்றார்கள். "எத்தனையோ பெண்கள் தங்கள் கணவர்களை, பிள்ளைகளைத் தேடி அங்கு வந்தபின் இது அறிந்து வேதனையுடன் திரும்பினார்களாம். இது கட்டுவதற்காக தொழிலார்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கினார்களாம். ஜெஜியாங் பல்கலைக்கழக விஞ்ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவித அரிசிக்கஞ்சியை எலுமிச்சம்சாற்றில் கலந்து சுவரின் கற்களை இணைத்துள்ளார். அதுதான் வலுவாக இருக்குமாம். அம்மா சொன்னார். இப்படித்தான் தாஜ்மகால் இன்னும் உலக அதிசயங்களுக்குப் பின்னால் எத்தனையோ சோகங்கள் இருக்கும். தாஜ்மகால் கட்டிய பிரதான சிற்பியின் கைகள் வெட்டப்பட்டதாக ஒரு கதை உண்டு." "ஐயோ ஏனம்மா?" சிந்துவும் ஆதியும் பதட்டத்துடன் கேட்டார்கள். "தாஜ்மகால் போல் இன்னொரு கட்டடம் கட்டக்கூடாதென்பதற்காக கைகளை வெட்டிவிட்டு ஏராளமான பொன்னும் பொருளும் கொடுத்தார்களாம். இப்படி எவ்வளவோ சோகக் கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எவ்வளவுதூரம் உண்மை என்பதுதான் தெரியாது. உண்மையாகவும் இருக்கலாம், புனையப்பட்டவையாகவும் இருக்கலாம். எத்தனையோ பேரின் தியாகங்கள் இன்று அதிசயமாகப் பார்க்கப்படுகிறது.'' எல்லோருமே நீண்ட பெருமூச்சு விட்டார்கள்.

❖❖❖


## 12

ஒரு அழகான பூம்பனி கொட்டும் நாள். மேகம் கறுப்பு ஆடையை இறுகப் போர்த்திக்கொண்டு இருளைத் தனதாக்கிக் கொண்டது. இரவு கொட்டிய பூம்பனி வீதியெங்கும் வெள்ளையாய் பரவியிருந்தது. கோடைக் காதலனை காலதேவனுக்கு வாரிக்கொடுத்துவிட்டு விதவைக்கோலத்தில் மொட்டையாக நிற்கும் மரங்களெல்லாம் வெள்ளைப் பூக்களைத் தாங்கி நின்றன. யன்னல் ஊடாக வெளியே பார்த்து கொட்டி இருக்கும் பனியை இரசித்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொலைவில் அல்ப்ஸ்மலை பனியில் நனைந்தபடி வெள்ளைவெளேரென்று காட்சியளித்தது. நித்திரை விட்டு எழும்பி வந்த மகன் யுகி "வாவ். நல்ல வடிவாயிருக்கு. வெள்ளைச் சீனியைக் கொட்டி விட்டதுபோல் அள்ளிக் கைகளில் எடுத்து விளையாட வேண்டும் போல இருக்கு. என்னம்மா. இது எப்படியம்மா வாறது? மழை தான் பனியாய் மாறுறதா?" ஆவலுடன் கேட்டான். யுகி, "கொஞ்சம் பொறுங்கோ, இனி ஜீவன் அண்ணாவும் சிந்துஜா ஆதித்யாவும் வரட்டும். சேர்த்துவைச்சே சொல்றன்." "இவ்வளவுநாளும் ஸ்நோ என்று விளையாடுவீங்க. ஆனால் அது எப்படி வருகிறது என்று கேள்வி கேட்டதேயில்லை. இப்பதான் அதை அறிகிற ஆவல் வந்திருக்கு. எல்லாருக்கும் சேர்த்தே சொல்றன்'' என்றாள் திவ்யா. சிறிது நேரத்திலேயே நான்குபேரும் காலைக்கடன் முடித்து சாப்பாட்டு மேசைக்கு ஓடிவந்தார்கள். "அம்மா இந்த வெள்ளைப் பனியின் கதையைச் சொல்லுங்க அம்மா" என்றார்கள் நால்வருமே.



"இந்தப் பனி மழையைப் போலத்தான் பெய்யும். ஆனால் குளிர் கூடவாக இருந்தால் வெப்பம் அதாவது சூடு குறைந்திருந்தால் இப்படிப் பனி கொட்டும். பஞ்சுபோல மென்மையாய் மேகங்களிலிருந்து விழும். உயர்ந்த மலைகளில் சூடு குறைந்தே இருப்பதால் பூம்பனி பொழிந்து மலையை மூடிவிடும். இமயமலை அப்படித்தான் இருக்கும்." திவ்யா சொல்ல ஜீவன் சொன்னான், "ஆபிரிக்க ரன்சானியாவிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற கிளிமஞ்சாரோவும் மூடியிருக்குமென்று ரீச்சர் சொன்னா". "அங்கையெல்லாம் பனி இப்பிடிக் கொட்டாது. மழையும் இருக்காது. பனி ஒருக்காலும் உருகாமல் உறைந்த பனிக் கடலாகவே எப்பவும் இருக்கும். எங்கடை மாமா அங்கைதான் கனகாலம் இருந்தவர். அவர் நிறையச் சொல்லுவார்"





சொன்னாள் திவ்யா. "அன்டாட்டிகாவில் இருக்கிற ஒரு பனிப்பாறைக்கு ஒரு தமிழரின் பெயர், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிறீதர் ஆனந்த கிருஷ்ணனின் பெயரை வைத்திருக்கிறார்கள். தமிழருக்கு எவ்வளவு பெருமை." "ஏன் அவருடைய பெயரை வைத்தார்கள்"? "ஏனென்றால் அவர் பனிப்பாறைகள், பனிக்கரடிகள் பற்றி ஆராய்ச்சி செய்து அவற்றைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்." "அங்கு செடிகள் வளராது என்னம்மா?" என்றாள் சிந்து. "ம். அவ்வளவு குளிரில் செடிகள் எப்படி வாழ முடியும்? பனிக்கரடிகள் மட்டுந்தான் வாழும்." "சிந்துக்கு செடிகள் பற்றிக் கவலை. கொஞ்சம் அந்தப் பேராசிரியரைப் பற்றிக் கேட்பம் என்றால் சிந்து விடமாட்டா" என்றான் ஜீவன். "பனிக்கரடிகள் பற்றிச் சொல்லுங்கம்மா" என்று ஆதி கேட்டாள்.

"இந்தப் பனிக் கரடிகள் கனடாவிலும் வாழ்கின்றன. இதன் எடை 750 கிலோ. உயரம் 7-8 அடி உயரமாக வளரும். மோப்ப சக்தியில் நாயையும் வென்றிடும். இந்தப் பனிப்பிரதேசத்தில் சீல், வால்ரஸ் போன்ற பிராணிகள்தான் இவற்றுக்கு உணவு. உணவு கிடைக்காவிட்டால் ஏழு எட்டு மாதங்கள் கூட உணவில்லாமல் ஆரோக்கியமாக வாழுமாம். இந்தப் பனிக் கரடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிபோடுறதுக்கு பாதாளக் குகைகளுக்குள் போய் இருந்துதானாம் குட்டி போடும். பனிக்கரடிகள் வாழுமிடத்தில் ஆயிரக்கணக்கான பனிக்குகைகள் இருக்கும். பனிப்புயல் அடிக்காத திசையில்தானாம் அந்தக் குகைகளின் வாசல் இருக்கும். அந்தக் குகைக்குள்ளை சூடாக இருக்கும். இந்தப் பனிக்கரடிகள் குட்டி போடுமட்டும் எட்டு மாதங்களுக்கு ஒன்றுமே சாப்பிடாமல் இருந்துதான் குட்டி போடுமாம்"



என்றாள் திவ்யா. "உங்கடை மாமா பனிக்கரடிகளைப் பார்த்திருக்கிறாரா?" என்று சிந்து கேட்டாள். "சீ அவ்வளவு பனிப் பிரதேசத்துக்கு யார் போவினம். எக்ஸிமோவர் என்று ஒரு ஆட்கள் அங்கை வாழுவினம். அவர்களின் மூளைதானாம் உலகிலுள்ள எல்லா மக்களினதும் மூளையை விட அதிக எடையுள்ளதாக இருக்கும். இதுகளை ஆராய்ச்சி செய்கிறவர்கள்தான் போய்ப் பார்த்து எழுதிவைச்சிருக்கினம். எங்கடை மாமா தந்த நிறைய படங்கள் இருக்கு. அம்மாடை அலுமாரி லாச்சியிலை இருக்கு. பிறகு பாருங்கோ." உணவு அருந்திக்கொண்டே உரையாடல் தொடர்ந்தது.

ஜீவன் அப்பாவைக் கேட்டான் "அப்பா மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் ப்ராங்ளின் என்றுதானே நாங்க நினைத்துக் கொண்டிருக்கிறம். என்னுடைய ப்ரண்ட் சொன்னான் தான் ஒரு புத்தகத்தில் படித்தவனாம். **2000** வருடங்களுக்கு முதலே மொசப்பற்றேமியாவில் மின்சாரம் பாவித்திருப்பதற்கான சான்று அகழ்வாராய்ச்சியின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்ததாம்." "ஆ அப்படியா? எனக்கு இது தெரியாது"என்றார் அப்பா. "செப்புக்கம்பிகளும் பற்றரி போன்ற அமைப்புடைய பொருளும் கண்டுபிடிக்கப்பட்டதாம். அதோடு எகிப்தில் பிரமிட்டுகளின் உள்ளே மின்குமிழ்கள் இருந்தனவாம். இந்த பிரமிட்டுகள் 6000 வருடங்களுக்கு முன்னதாம். அப்ப மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யாரென்றே தெரியாதுதானே" என்றான் ஜீவன். "யார் யாரோ கண்டுபிடித்தவைக்கெல்லாம் இப்ப வெள்ளைக்காரன் உரிமை கொண்டாடுகிறான்" என்றார் அப்பா.

இரவுச் சாப்பாட்டு நேரம் மீண்டும் ஒன்றுசேர்ந்து உணவு உண்டார்கள். "ஏனப்பா பசிக்கிறது?" கேட்ட சிந்துவுக்கு அப்பா கூறத் தொடங்கினார், "எங்கடை மூளையிலுள்ள ஒரு இரசாயனப் பொருள்தான் பசியைத் தூண்டுகிறது. அமெரிக்காவில் ஒரு பரிசோதனை செய்துபார்த்தார்கள். எலிகளின் மூளையில் இந்த இரசாயனப் பொருளை ஊசிமூலம் செலுத்திப் பார்த்தபோது எலிகள் வழக்கத்தைவிட மூன்று மடங்கு சாப்பாடு சாப்பிட்டதாம். அப்ப பசி மூளையில்தானே இருக்கிறது. ஒவ்வொரு அளவில் ஒவ்வொருத்தருக்கும் சுரக்கும்." "அப்படித்தான் பனிக்கரடிக்கு பசிக்கிறதில்லை யாக்கும்." யுகி சொன்னான். "பிடிச்ச சாப்பாட்டைப் பார்த்தவுடன் ஏனப்பா வாயூறுறது?" கேட்ட ஆதிக்கு "சாப்பாட்டைப் பார்த்தவுடன் மூளை சாப்பாடு செமிபாடு அடைய உதவும் ஒரு சுரப்பை அனுப்பச் சொல்லி இரைப்பைக்குச் சொல்லும். அந்த சுரப்பு வந்தவுடன் வாயூறும். சரியா" என்று அப்பா சொல்ல "ஆ அப்படியா விஷயம்" என்று நால்வருமே சொன்னார்கள். "அதுக்குத்தான் கைகளாலை சாப்பிட வேணுமென்று சொல்றது. இரைப்பை ஒரு சுரப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பும் என்று சொன்னன்தானே. அதைப்போலத்தான் என்ன சாப்பாடு சாப்பிடத் தயாராகிறம் என்றதையும் மூளை சொல்லும். இனிப்பா, காரமா, திரவமா, திடமா என்று மூளை சொல்ல அதுக்கேற்ற சுரப்பை இரைப்பை அனுப்பும். கையை சாப்பாட்டில் வைத்தால்தானே இது மூளைக்குத் தெரியும். கரண்டி முள்ளுக்கரண்டி பாவித்தால் மூளைக்கும் கரண்டிக்கும் தொடர்பே இல்லையே". "ஏனப்பா கரண்டி பாவிச்சாலும் வாயிலை வைச்சவுடன் தெரியுந்தானே. "என்ன கொஞ்சம் பிந்தி மூளை சொல்லும்" என்றாள் திவ்யா. "அப்பா சொன்னதுதான் சரி, முதலே மூளை சொல்லுமே". "அப்பா நல்ல விடயம் சொன்னீங்க. நாங்க எங்கடை ப்ரண்ட்ஸ்க்கு சொல்லி அவையளையும் கைகளாலை சாப்பிடப் பண்ண வேணும்" ஒன்றுசேரச் சொன்னார்கள்.

"அதோடை இன்னொரு முக்கிய விடயம் எங்கடை பழையகாலத்து சாப்பாட்டுமுறை. நிலத்திலை இருந்து சாப்பிடும்போது வயிறு அமுக்கப்படுவதால் தேவையான



அளவு மட்டுமே சாப்பிடப்படும். நாக்கு ருசிக்கு நிறையச் சாப்பிட மாட்டம். அப்ப சுகமாக இருக்கலாம். கால்களை மாற்றிப் போட்டு சப்பாணி கட்டும்போது ஜீரணத்துக்கு பெரிதும் உதவுமாம்." "ஓ அதுதான் நாங்க எல்லாரும் கீழை இருந்து சாப்பிடுறனாங்களோ" கேட்டாள் ஆதி. "அதோடை வாழையிலையில் சாப்பிடுறதுக்கும் நல்லதொரு காரணம் இருக்கு. வாழையிலையிலை அன்ரிஓக்ஸிடன்ற் என்ற நோயெதிர்ப்புச்சக்தி இருக்கிறது. சூடாக சாப்பாட்டை இலையில் போடும்போது அந்தச் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டுடன் எங்கள் உடலுக்குள் செல்லும். நோய் வந்தபிறகு வைத்தியம் செய்கிறதைவிட நோய் வராமல் பாதுகாக்கிறதுதானே நல்லது. அதோடு கைகளால் சாப்பிடும் போது ஐந்து விரல்களும் சேர்ந்து ஒன்றையொன்று அழுத்துவதால் அக்கியுபங்ஷர் புள்ளிகள் செயலாற்றத் தொடங்கி உடலுக்கு பெரிய சக்தி கிடைக்கிறது. எங்கடை முன்னோர்கள் எவ்வளவு அறிவாளிகளாக இருந்திருக்கிறார்கள். நாங்கள் தமிழர் என்று சொல்றதே எவ்வளவு பெருமையான விடயம்" என்று அப்பா சொல்ல "ஓமப்பா" என்றான் ஜீவன்.

"அப்படித்தான் விரதமிருக்கிற விஷயமும். உடல்நலத்துக்கு நல்லதைக் கடவுளோடு சம்பந்தப்படுத்தினால் வேகமாக இந்தப் பழக்கம் பரவி நடைமுறைப்படுத்தப்படும் என்பதை முன்பிருந்த அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். 15 நாட்களுக்கு ஒருமுறை வயிறு வெறுமையாக இருப்பது நல்லதென்றுதான் அமாவாசை பௌர்ணமிக்கு விரதம் இருக்கச் சொன்னார்கள். ஜீரண உறுப்புகள் சீராகும். முழுநாளும் உபவாசம் இருப்பது கூட உள்ளுறுப்புகள் தாங்களாகவே தங்களைச் செம்மையாக்க உதவும்" அப்பப்பா கூற "அம்மாடி எங்களுக்கு பசி இருக்கேலா" யுகி சொல்லவும் "எதுவும் ஏலாதென்றால் ஏலாது; முடியும் என்றால் முடியும்" என்று அப்பா சொன்னார். "பசியைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். அதோடு உடல் சேமித்து வைக்கும் கொழுப்பு நாம் பசியோடிருக்கும்போதுதான் செலவழிகிறது. அதற்கு வழி வைக்காமல் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தால் கொழுப்பு சேர்ந்துகொண்டே போய்க் கடைசியில் இதயநோயில் முடிகிறது." அப்பா விளங்கப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா கேட்டார், "தண்ணீர்விடாய் ஏன் வருகிறது சொல்லுங்க பார்க்கலாம்"? "நாங்க அதைப்பற்றி யோசிச்சதேயில்லையே" என்று திவ்யா உட்பட சொல்லவும், "எங்கடை இரத்தத்திலை இருக்கிற நீர் 70% இருக்குது. அது குறைகிறபோது தண்ணீர் விடாய்க்கும். அதேபோல உடம்பிலுள்ள ரிசியூக்களிலும் உப்பும் நீரும் மினரல்களும் ஒரே அளவிலைதான் இருக்குது.




உடம்பிலிருந்து வியர்வை அதிகம் வெளியேறும்போது இரத்தத்திலை உள்ள நீரின் அளவு குறைகிறது. அப்போது உப்பு, நீர் இரண்டின்ரையும் சமநிலை பாதிக்கும். உடனை மூளை தொண்டைக்கு செய்தி சொல்ல தொண்டைப் பகுதி சுருங்கத் தொடங்கும். அப்படிச் சுருங்கும்போது அந்தப்பகுதி காய்ந்து தாகம் ஏற்படும்." அப்பா சொன்னவுடன் "எல்லாம் மூளைடை வேலையா?" யுகி கேட்க, "மூளை தான் எங்கடை முக்கிய உறுப்பு. அது 100 பில்லியன் நரம்புகள் மூலம் எல்லாவற்றையும் செய்விக்குது. நரம்புத் தொகுதிகள் எங்கடை முதுகுத் தண்டில் இருந்து மூளைக்குச் செல்கின்றன. மூளைதான் எங்கடை செயல்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. முடிவுகள் எடுப்பதும் இந்த மூளைதான். உணர்வுகளை தொடு உணர்ச்சி மூலம் அறிகிறதை விட சத்தம் மூலம் விரைவில் அறிந்துகொள்ளும். மேல் பகுதி மூளை நல்ல கருத்துகள் நல்ல நடத்தை என்பவற்றை வழங்கும். நடு மூளையில்தான் கோபம், பசி, பொறாமை போன்ற கெட்ட குணங்கள் இருக்கும். வலதுபக்க மூளை செயல்பட்டால்தான் நினைவாற்றல், அறிவு, ஞானம் என்பன உண்டாகும். இதை வலுப்படுத்தத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுப்பயிற்சி செய்ய வேண்டும் என்கிறது". "ஆ. அப்பிடியோ? அதுதான் எல்லாத்துக்கும் உனக்கு மூளை இருக்கா என்று பேசுறது. ஒளிஞ்சிருந்து எவ்வளவு வேலை செய்யுது என்ன" என்று யுகி கூறினான். "நித்திரையில்தான் மூளை வளரும். அது நன்றாக செயல்பட எந்த விட்டமின் மாத்திரைகளும் உதவாது. நிறைய இனிப்புணவு சாப்பிட்டாலும் மூளை வளர்ச்சியைப் பாதிக்கும். மூளைக்கு வேலை கொடுக்கும் பயிற்சிகளும் மூச்சுப்பயிற்சியும்தான் மூளைக்கு வலிமை சேர்க்கும்.


"மூச்சுப் பயிற்சியைப்போல சிறந்தது எதுவுமில்லை.




அதுதான் அதைச் செய்யுங்கோ என்று நான் நெடுகச் சொல்லுறது. அப்பப்பா என்னை அப்படிப் பழக்கினபடியால் தான் என்னாலை எல்லாமே கிரகிக்க முடியுது. இப்ப அமெரிக்காவிலை டொக்டர்ஸ் எல்லாம் மென்ரல் ரெயின்னிங் என்று இந்த மூச்சுப் பயிற்சியையும் எங்கடை தோப்புக் கரணத்தையும் சொல்றாங்களாம். தோப்புக்கரணம் நரம்புமண்டலத்தைத் தட்டி எழுப்பும். இரத்தோட்டத்தை அதிகரிக்கும். மூளைக்கு நிறைய இரத்தம் போகும். மூளையின் இரு பகுதிகளும் தூண்டப்படும். காதுகளைத் தொடும்போது முக்கியமான அக்குபங்ஷர் புள்ளிகள் தூண்டப் படுகின்றன. தோப்புக்கரணம் போடுவதனால் ஏற்படும் மாற்றங்களை ஈ. ஈ. ஜி கருவியால் டாக்டர் யூஜினியஸ் அங் அளந்து காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்புக்கரணம் தினமும் செய்வது ஓட்டிஸம், அல்சைமர் போன்ற வியாதிகளுக்கு நல்ல பலனைத்தரும் என்று பல பரிசோதனைகள் சொல்கின்றன. ஏன் அப்பப்பா செய்வாரே, ப்ராணிக் சிகிச்சை அதன் நிபுணர் கோசோக் சூயி கூட சுப்பர் பிரெயின் யோகா என்ற புத்தகத்தில் தோப்புக்கரணத்தைப் பற்றி எழுதியுள்ளார். மூட்டுவலி கூட வராது. நாங்க சொன்னா உங்களுக்கு ஏறாது. அமெரிக்கன் சொன்னாதானே ஏறும்" சொன்ன அப்பாக்கு "ஓஹோ. அதுதான் பிழை விட்டால் தோப்புக் கரணம் போடச் சொல்றது. முந்தின தமிழர் நல்ல இன்ரல்ஜன்ஸ்" கூறினான் ஜீவன். "நாளையிலிருந்து செய்யிறம் அப்பா" என்று நால்வருமே உறுதி அளித்தார்கள். "வீணையின் நாதம் மூளையின் செயல் திறனை அதிகரிக்கும். அதுதான் அறிவுக்கடவுள் சரஸ்வதியின்ரை கைகளிலை வீணையை வைத்திருக்கிறார்கள். எங்கடை முன்னோர்கள் ஒவ்வொன்றும் ஒரு காரணத்தோடைதான் செய்திருக்கிறார்கள். நாங்கதான் அவற்றைத் தெரியாது பழசெல்லாம் சரியில்லையென்று ஒதுக்கி விட்டோம்" என்றார் அப்பா சுந்தரேசன். "வீணை பலாமரத்திலிருந்தா செய்யப்படுகிறது?" கேட்ட சிந்துவுக்கு "கெட்டிக்காரி. சிந்துக்கு தெரிந்திருக்கே" என்று அப்பா பாராட்டினார்.



❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

பனிக் காலத்து விடுமுறையாதலால் எல்லோருமே வீட்டில் இருப்பதால் வீடு சிரிப்பும் கலகலப்புமாக கழிந்தது. அல்ப்ஸ் மலை வெள்ளை ஆடை அணிந்து பால் கீழே கொட்டியதுபோல் பார்க்கப் பார்க்க தெவிட்டாத காட்சியாக இருந்தது. மரங்களெல்லாம் ஆடாமல் அசையாமல் நின்றன. "ஏனம்மா காற்று எங்களுக்குத் தெரியிறேல்லை? காற்று வீசுதோ என்று கூடத் தெரியுதில்லை" என்றாள் சிந்து.




ஜீவன் சொன்னான், "காற்றில் சௌஅர்ஸ்ரொஃவ் (ஒக்ஸிஜின்) ஸ்ரிக்ஸ்அராஃவ் (நைட்ரஜன்) போன்ற குறுன்ட்ஸ்ரொஃவ் (எலிமன்ற்) போன்றவை சேர்ந்திருக்கு. காற்றிலுள்ள நுண்ணிய மூலக்கூறுகள் ஒன்றோடு ஒன்று இணையாமல் தனித்தனியே இருப்பதால் ஒளி அதன்மூலம் பாய்கிறது. இதனால் காற்றை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் எங்கடை உடம்பில் படும்போது உணர முடியும்."

"அம்மா ஏன் நாங்க காற்றை சுவாசிக்காமல் இருக்க முடியாது?" கேட்ட யுகிக்கு "நாங்க சாப்பிடுகிற சாப்பாடு முழுக்க செலவழிக்காமல் உடம்பு அவற்றை சர்க்கரையாகவோ கொழுப்பாகவோ சேமித்து வைத்து தேவைப்படும்போது பாவிக்கும். எங்கடை உடம்பு சாப்பாட்டை சேர்த்துவைப்பது போல தண்ணீரையும், காற்றையும் சேமித்துவைக்க எந்த உறுப்பும் எங்களிட்டை கிடையாது. ஒட்டகத்துக்கு மட்டுந்தான் இரண்டு மூன்று வாரங்களுக்கு சேர்த்துவைக்கக்கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர்ப்பை உடம்புக்குள்ளே இருக்குது. மீன்களிட்டை மட்டுந்தான் காற்றை சேமிக்கக்கூடிய காற்றுப்பைகள் இருக்கு." "எல்லா மீன்களிட்டையும் அந்தப்பை இருக்கா அம்மா?" சிந்து கேட்க, "இல்லை சில மீன்கள் தங்கடை செதிள்களில் காற்றுக் கரைந்த தண்ணியை சேர்த்துவைக்கும். மனிசருக்கு அப்பிடி ஒரு உறுப்பும் இல்லாதபடியால் மனிதன் ஒவ்வொரு நிமிஷமும் காற்றை சுவாசிக்கத்தான் வேணும். உங்களுக்குத் தெரியுமா பல்லி தன்னுடைய வாலில் உணவையும் நீரையும் சேமித்து வைக்குமாம்" என்ற திவ்யா தொடர்ந்தாள். "அன்றைக்கு அப்பா



சொன்னார் ஒரு நியூஸ். இங்கை பாசல் என்ற இடத்திலை ஜோன் என்ற பிரித்தானியர் அல்ப்ஸ் மலைக் காற்றைப் பிடித்து பக்கெற்றிலை அடைத்து விற்கத் தொடங்கியிருக்கிறாராம். அரை லீற்றர் காற்று 97 டொலர், நல்ல வியாபாரம் நடக்குதாம். அதில் வாற பணத்தை வறியநாடுகளுக்கு அனுப்புகிறாராம். பார்த்தீங்களா காற்றும் தண்ணீரும் இயற்கை எங்களுக்குத் தந்த கொடை. முன்பு இவையெல்லாம் எங்களுக்கு இலவசமாகக் கிடைத்தது. பிறகு தண்ணீரை அடைத்து விற்றார்கள். இப்ப காற்றையும் அடைத்து விற்கிறார்கள். ஏனென்றால் இப்ப காற்று செயற்கை இரசாயனங்களால் பழுதாய்ப் போகிறது". "அது என்ன செயற்கை இரசாயனம்?" கேட்டாள் சிந்து. "அதுவா? அது மனிதனே கண்டுபிடித்த கெமிஷ் ஒன்றுக்கு நல்லதாயிருந்தாலும் நிறையப் பக்கவிளைவுகள் தரும். பைஸ்பீல் (உதாரணத்துக்கு) கார் எங்களுக்கு உதவுகிறது. ஆனால் பிறீன்ஸ்றொஃவ் நல்லதில்லை. இப்படி நிறைய இருக்கு. சரிதானே அம்மா" என்றான் ஜீவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ஓசோன் என்றால் என்ன அம்மா?" யுகி கேட்க. "ஓ அதுவா? சூரியனிலிருந்து வரும் அல்ரா வயலெட் கிரணங்களிலிருந்து ஓசோன் என்ற வாயு பூமியைக் காப்பாற்றுகிறது. அந்தக் கிரணங்கள் நேரடியாகப் பூமியில் விழுந்தால் உலகில் ஒரு உயிரும் இருக்காது. எல்லாக் கோள்களையும் போல பூமிக்கும் தன்பக்கம் இழுக்கிற சக்தி உண்டு. அல்லது நாங்க இப்பிடி நிற்க மாட்டடம். மிதப்பம்" என்றாள் திவ்யா. "மிதப்பமா; நினைக்கநல்லாயிருக்கே. எல்லாரும் மிதந்தால் நல்ல முஸ்பாத்தி" என்றாள் ஆதி. எல்லோரும் கற்பனை பண்ணிப்பார்த்து சிரித்தார்கள். "ஓசோன் படையில் துவாரம் வாறதுக்கு எது காரணம் என்று தெரியுமா?" கேட்ட ஜீவனுக்கு "உகூம் தெரியாதே" என்றார்கள் எல்லாரும். "குளோரோ ஃபுளோரோ காபன் (சீ.எவ்.சி) என்ற வாயுதான் காரணம்." ஜீவன் சொல்லவும் "அதென்ன என்னுடைய சினேகிதி கிளாரா மாதிரி குளோரோ. மற்றதென்ன சீ.எவ்.சி இது கே.எவ்.சீ மாதிரி இருக்கு" என்று ஆதி சொல்லவும் எல்லாரும் சிரித்தார்கள். யுகி சொன்னான், "ஆதிக்கு சாப்பாட்டு நினைவுதான் நெடுக." ஆதிக்கு கோபம் வர, "அம்மா பாருங்க அண்ணாவை நெடுக என்னை ரீஸ் பண்றார்" என்றாள்.

பனி தூறல் தூறலாய் தொடங்கி கொட்டோ கொட்டென்று கொட்டத் தொடங்கியது. மூன்றுபேரும் சந்தோஷக்காற்று முகங்களில் பரவ ஜன்னல் பக்கத்தில் ஓடிச் சென்றார்கள். "மழை பெய்யும்போது சத்தம் கேட்கும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனி சத்தம் போடாமல் கொட்டுது. ஏனம்மா?" கேட்டாள் சிந்து. பனியின் உருவ அமைப்புதான் காரணம். பனி தன்னைச் சுற்றியுள்ள சத்தங்களை உறிஞ்சி எடுத்திடும். ஆனபடியால் பனி கீழை விழும்போது சத்தம் கேட்காது. அதோடு வின்ரருக்கு நன்றாகப் பனி கொட்டினால் அடுத்து வரும் காலங்களில் நோய் குறைவாக இருக்கும். நோய்க்கிருமிகள் அழிந்துவிடும்." விளங்கப்படுத்தினாள் திவ்யா.

திடீரென்று "ஐய்யய்யோ பாலை அடுப்பில் வைத்துவிட்டு ஸ்நோ பார்க்க வந்திட்டன். எல்லாம் பொங்கி ஊற்றியிருக்கும்" என்று சமையலறைக்கு ஓடினாள். அம்மாவுக்குப் பின்னால் நான்கு பிள்ளைகளும் ஓடினார்கள். "ஏனம்மா பால் பொங்கும். தண்ணி பொங்காதே" என்று நால்வரும் ஒருசேரக் கேட்டனர். "பாலில் புரதம், கொழுப்பு, தண்ணீர் என்பன இருக்கிறதுதானே. கொழுப்பின் அடர்த்தி தண்ணீரின் அடர்த்தியைவிடக் குறைவு. ஆகவே பாலின் மேல் கொழுப்பு ஆடைபோல் மிதக்கிறது. எந்தவொரு திரவத்தைக் கொதிக்க வைத்தாலும் அந்த திரவத்திலிருந்து காற்று குமிழிகள் மேல் நோக்கி எழும்பும். அப்போது மேலே ஆடையாக இருக்கும் கொழுப்பு இந்தக் காற்றுக் குமிழிகளை மேலே தடுத்திடும். அதுதான் பால் பொங்குறது" என்று தாய் விளக்க "ஓ அப்படியோ? அப்ப அத்தை வீட்டிலை பால் குக்கரிலை இப்பிடி பொங்குறேல்லையே. அது ஏன்?" என்றான் ஜீவன். திவ்யா, "ஓ அதுவா? பால் குக்கரில் சூடு நேரடியாய் போகாது. பால்குக்கரில் முதல் அடுக்கில் தண்ணீரும் இரண்டாம் அடுக்கில் பாலும் நிரப்பும் அமைப்பு இருக்கிறது. ஆனபடியால் பால் நேரடியாக சூடாகாது. நேரடியாக அடுப்பிலிருந்து வெப்பம் கிடைக்காமல் முதல் தண்ணீர் சூடாகி அதன் மூலம் பாலுக்கு சூடு கிடைப்பதால் பால் பொங்காது. விளங்குதா"என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி கேட்டாள், "அம்மா தமிழ்ப்புத்தகத்தில் பசு பால் தரும் என்று இருக்கு. டொய்ச்சிலையும் அப்பிடித்தானிருக்கு. பசு பால் எங்களுக்குத் தருதா? அல்லது பசு தன்ரை பிள்ளைக்கு வைச்சிருக்கிற பாலை நாங்க எடுக்கிறமா?" ஆதியின் கேள்வி திவ்யாவை சிந்திக்க வைத்தது. "ஓம் ஆதி. பசு தன்ரை பிள்ளைக்கு வைச்சிருக்கிற பாலை நாங்க எடுத்திட்டு சும்மா பொய்க்கு பசு பால் தரும் என்று சொல்றம். மனிதன் உலகத்திலை இருக்கிற எல்லாமே தனக்காகத்தான் என்று நினைக்கிறான். மற்ற உயிர்களைப் பற்றி நினைக்கிறதேயில்லை. பார்த்தீங்களா ஆதியை, சின்னப் பிள்ளை என்றாலும் எவ்வளவு சிந்திக்கிறா" என்று கூறி ''கெட்டிக்காரி என்ரை பிள்ளை'' என்று கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தாள் திவ்யா. "கோழியை மட்டும் முட்டை தரும் என்று சொல்லாமல் இடும் என்று சொல்லீற்றினம்" என்றான் யுகி. "முட்டையும் இடும். பொட்டும் இடுகிறது என்னம்மா" ஞாபகமாகக் கேட்டாள் ஆதி.

❖❖❖

## 14

அப்பப்பாவின் அறையில் மாட்டிவைத்திருக்கும் படத்தைப் பார்த்து ஆதி "அது யாரண்ணா?" கேட்கவும், "அவர் அகத்தியச் சித்தர். அவரைப்பற்றி வேறு ஒன்றும் தெரியாது. இன்றைக்கு கேட்பம்" என்றான் யுகி. வெளியிலிருந்து அப்பப்பா வரவும் பிடித்துக்கொண்டார்கள். அவர் சொன்னார், "எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முதல் இந்தியாவில் பல சித்தர்கள் வாழ்ந்தார்கள். இந்த உலகத்தில் எல்லா மக்களும் நல்லாய் வாழவேண்டுமென்று நிறைய விஷயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்களுக்காக எழுதிவைத்துவிட்டு மறைந்து விட்டார்கள். வைத்தியம், வீடு கட்டுகிற முறை, கோயில்களில் கடவுள் சிலைகளை பிரதிஷ்டை செய்வது, இப்படி எத்தனையோ விஷயங்கள். அவர்கள் சாதாரணமக்கள் போல இறக்காமல் ஜீவசமாதி அடைந்தார்கள். அந்த சமாதி இடங்களில் அமைக்கப்பட்ட கோயில்கள்தான் அநேகமாக இன்றுவரை அருள்கொடுக்கும் ஆலயங்களாக இருக்கின்றன" என்றார். சிந்து கேட்டாள், "சித்தர்கள் பெயர் கொஞ்சம் சொல்லுங்க அப்பப்பா." "அகஸ்தியர், திருமூலர், போகர், சிவவாக்கியார், ரோமரிஷி, கருவுரார் இன்னும் நிறையப் பேர் இருக்கினம்" என்றார். "தஞ்சைப்பெரியகோயில் அந்தப் பெரிய லிங்கம் செய்தவர் கருவுரர் என்றுதானே சொன்னீங்க.



அவருடைய சமாதியில் நாங்க எல்லாரும் கும்பிட்டந்தானே" என்றாள் சிந்து. "எப்படி இவ்வளவு அழகான சிலைகள் செய்கிறது?" கேட்ட ஆதிக்கு "ஓ அதுவா? சிற்பிகள் கற்களில் வேண்டாத பகுதிகளை செதுக்கி எடுக்க அழகான சிற்பம் வெளிப்படும்" என்றார். சிந்து கவலையுடன், "எவ்வளவு பாடுபட்டு சிற்பிகள் சிலைகள் செய்ய ஓரிடத்தில்கூட சிலை செய்தவர் பெயர் போட்டிருக்காதே" என்றாள். "அவர்கள் கடவுள் சிலைகளைப் புகழுக்குச் செய்வதில்லை. ஒரு அர்ப்பணிப்புடன் அர்சனைபோலத்தான் செய்வார்கள். மனம் அவ்வளவு துய்மையுடன் செய்ததால்தான் தெய்வீக அழகு தெய்வச்சிலைகளில் இருக்கிறது" கூறினார் அப்பப்பா. "ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பப்பா சித்தர்கள் எல்லோரும் தமிழரா? ஒரு யுரோப்பியனும் இல்லையா?'' யுகி கேட்டான். "இல்லை. வேறுவேறு நாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டுக்குப்போய் அங்கு தவமிருந்து சித்தராகியிருக்கினம். தமிழ்நாடுதான் நல்ல குளிருமில்லை, நல்ல சூடுமில்லை. தவம் செய்ய ஏற்ற இடம்.



அகஸ்தியர், அகஸ்டிஸ் ரோம்மிலை பிறந்தவர். இவர்தான் நிறைய சித்த வைத்திய நூல்கள் எழுதினவர். சகலவிதமான நோய்களுக்கும் மருந்து எழுதியிருக்கிறார். இவருக்கு முருகன்தான் தமிழ் கற்றுக்கொடுத்தவர் என்கிறார்கள். அகத்தியம் என்ற நூல் இவர் எழுதினதுதான். 12ஆயிரம் பாட்டுகள். ஆனால் இப்போது இவ்வளவுமில்லை. நாங்க அவற்றை எல்லாம் கவனிக்காது விட்டுவிட இந்தியாவைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அவற்றை மொழிபெயர்த்து தங்கள் நாட்டுக்குக் கொண்டுசென்று விட்டார்கள். இவர் திருவனந்தபுரத்தில் சமாதியடைந்தவர்.'' "அவர்தானே அப்பப்பா பொதிகை மலையை பதியவிடாமல் செய்தவர்" கேட்டான் ஜீவன். "ஓமோம். அவர்தான். குறுமுனி என்றும் சொல்வார்கள். அவர் சரியான குள்ளமாக இருப்பாராம்." "பொதிகைமலையும் சூரியனும் தமிழும் உலகம் தோன்றும்போதே தோன்றியதாகச் சொல்வார்கள். அது உண்மையா?" ஜீவன் கேட்க, சுந்தரேஸ் சொன்னார், "கிறீஸ்தவர்களைப் பாருங்கோ. பைபிளில் எது சொன்னாலும் அதை அப்படியே நம்புவார்கள். இந்துக்கள் மட்டும் எதையும் நம்பாமல் பத்துக் கேள்வி கேட்பார்கள். எங்கடை சமய உண்மைகளை நாங்களே நம்பாவிட்டால் மற்றவன் எப்படி நம்புவான்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ரோமரிஷியும் ரோம் நகரைச் சேர்ந்தவர். போகர் சீனாவைச் சேர்ந்தவர் என்றும் சொல்கிறார்கள். பல்லவ அரசனான கந்தவர்மனின் மூன்றாவது மகன் என்றும் எழுதியிருக்கிறது. அவர் சீனாவிலேயே ஜீவசமாதியும் அடைந்தவர்". "ஓ அவர்தான் ஆறாம் அறிவில் வாற போதிதர்மன் என்ன?" சிந்து கேட்டாள். "ஓமோம். அப்படித்தான் நினைக்கிறன். போதிதருமரும் போகரும் ஒருவரா? வெவ்வேறு ஆட்களா என்பது தெரியவில்லை. ஆனால் அவர் சீனாவில் போயாங் என்று அழைக்கப்பட்டார். அவரின் பாடலில்

'தேசமென்றால் தேசமது சொல்லப்போமோ
தேசத்தில் சீனபதிக்கிணையீடுண்டோ?
நேசமுடன் சத்தியத்தைக் கைவிடாதவர்
நீணிலத்தில் சீனபதி மாந்தர்தாமே'

பாடியிருக்கிறாரென்றால் முன்பு சீனர்கள் மிகவும் சிறந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். இந்த போதிதர்மர்தான் குங்ஃபூவை உலகத்துக்கு அறிமுகப்படுத்தியவர்". "அதென்ன குங்ஃபூ குஷ்பு மாதிரியிருக்கு" கேட்டாள் ஆதி. "குங்ஃபூ என்றது தங்களைத் தாங்களே காத்துக் கொள்கிற ஒரு தற்காப்புக் கலை. இந்தியாவிலிருந்து தான் சீனா போனது இக்கலை என்றும் பலர் சொல்கிறார்கள். போகர் தான் 4448 மூலிகைகளில் முருகனைச் செய்து பழநியில் பிரதிஷ்டை செய்தார். அச்சிலைக்கு அபிஷேகம் செய்யும்போது அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலிகைகள் கரைந்துவரும் நீர் எத்தனையோ நோய்களை மாற்றியது. அதோடு காய்ச்சல். சளி போன்ற நோய்கள் வராமல் பாதுகாக்க மலை வாழைப்பழம் தேன் நெய் கலந்து பஞ்சாமிர்தம் செய்து பழநியில் பிரசித்திபெற்று வந்தது. பழநிப் பஞ்சாமிர்தம் என்றால் எந்த நோயும் தீரும் என்றிருந்தது ஒரு காலம்." "ஏன் இப்ப மாறுறேல்லை" என்றாள் சிந்து. "அதுவா, இப்ப எல்லாம் கலப்படமாகப் போய்விட்டது. சுத்தமான தேனுமில்லை. ஒரிஜினல் மலை வாழைப்பழமும் இல்லை. அதுதான் அது வேலை செய்யுதில்லை. அவர்தான் எங்கடை கதிர்காமத்திலும் வேல் செய்து பிரதிஷ்டை பண்ணினவர். ஆறுபடை வீட்டோடு ஏழாம்படை வீடாக கார்த்த்திகேயக் கிராமம் என்று கதிர்காமத்தையும் சேர்த்தவர். இவருடைய சீடன்தான் தொல்காப்பியர். அவர் எழுதிய இலக்கணநூல்தான் இப்போதும் நாம் படிக்கும் இலக்கணநூல். புலிப்பாணிச் சித்தரின் பெயர் டைகர். அவர் ஐரோப்பியன். எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முந்தினதால் பல விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய பாடல்கள்தான் அவர்கள் எவ்வளவு ஞானிகள் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கிறது."அப்பப்பா பெரிய பிரசங்கமே செய்துவிட்டார். "ஏன் அப்பப்பா கமெரா இல்லாத அந்தக் காலத்திலை இவ்வளவு சித்தரும் இப்படியிருந்தவையென்று என்ன என்று தெரியும்." சிந்து கேட்கவே, "என்னுடைய கெட்டிக்கார பேத்திபோல ஒருத்தரும் கேட்கேலை. நான் நினைக்கிறன். சும்மா யூகத்திலைதான் கீறினமென்று" கூறினார். "எனக்கு ஞானம் சொன்ன என்ரை தேவதை கேட்டால் எல்லாமே சரியாய்த்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்” என்றார் அப்பப்பா. “என்ன சொன்னா உங்கடை தேவதை” என்றான் யுகி. “எனக்குத் தெரியும்” என்ற ஜீவன், “முந்தி அப்பப்பா உருத்திராட்ச மாலையை வைத்து உருட்டி உருட்டிக் கொண்டிருப்பார். ஒருநாள் சிந்து கேட்டா, ‘ஏன் அப்பப்பா அப்பிடிச் செய்கிறீங்க?’ என்று. இந்த மாலையில் 108 மணிகள் இருக்கிறது. ஒரு நாளைக்கு 108 தரம் நமசிவாய சொல்ல வசதியாக இருக்கும். எண்ணத் தேவையில்லை என்று.” “மிச்சத்தை நான் சொல்றன்” என்று அப்பப்பா தொடர்ந்தார். “குறையச் சொன்னால் சாமி கோவிப்பாரா? என்று சிந்து கேட்க, எனக்கு யாரோ தலையில் அடித்தது போலிருந்தது. கடவுளை எண்ணிக்கை வைத்துக் கும்பிடுறது அது கணக்கா அல்லது பக்தியா. பக்திக்கு எண்ணிக்கை தேவையில்லை என்று சொன்ன என்ரை கடவுளில்லையா சிந்து” என்றார். “ஓ” என்று எல்லாருமே சிந்துவைக் கொண்டாடினார்கள். “எனக்கு இப்பதான் இந்த சிந்துக்குட்டியின் கதை தெரியும்” என்றாள் திவ்யா.


❖❖❖

## 15

திவ்யாவைத் தேடி அவளது நண்பி பூர்ணிமா வந்திருந்தாள். வரவேற்றுப் பேசும்போது “நான் ஏன் வந்தன் தெரியுமா திவ்யா. எனது மகள் தமிழினி பெரிய பிள்ளையாயிட்டாள். எனக்கு இந்த சாமத்தியச்சடங்கு செய்கிறது பற்றி ஒன்றும் தெரியாது. எனக்கு சும்மா நெருங்கின சொந்தக்காரரோடை செய்தது. உமக்கென்றால் எல்லாம் தெரியும். அதுதான் பிள்ளைகளில்லாத நேரத்தில் கேட்பமென்று வந்தன்” என்றாள். “என்னைக் கேட்டால் நல்ல அயர்ன் சாப்பாடு, சீரகம், வேப்பங்குருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைச்சுக்குடுக்கிறது, எள்சாப்பாடு, நல்லெண்ணெய், உழுத்தங்களி போதும். உடல்நலத்தை மையமாகக் கொண்டிருந்த ஒரு நடைமுறை இப்ப வெற்றுச் சடங்காக இழிந்ததாக மாற்றப்பட்டுவிட்டது. மகரந்தச் சேர்க்கைபோல பக்குவமாக்கப்படும் பருவத்தின் சுழற்சி. இதற்கேன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்றது எனக்கு விளங்கேல்லை. இந்தச் சாப்பாடுகள் ஆரம்பத்திலேயே கர்ப்பப்பை வளரத் தொடங்குற காலத்திலேயே அதைப் பாதுகாக்கும். நீர்கட்டிகள் கர்ப்பப்பை நோய்களுக்கெல்லாம் நல்லதென்றுதான் நினைக்கிறன். கத்தரிக்காயில் நல்ல அயர்ன் இருக்கு. நல்லெண்ணெயில் விட்டமின் ஈ, கே, பி6, பி12, ஒமேகா6, எலும்பு வளர்ச்சி, தோல் பாதுகாப்பு, மக்னீசியம் இவ்வளவும் இருக்கிறது. அது பெண்களுக்கு நிறையத் தேவைப்படுகிற விஷயமல்லா? அதோடு மனப்பதற்றம், மனக்குழப்பம் இவற்றுக்கு நல்லதாம்.'' திவ்யா சொல்லவும் ''இந்தக் காலத்தில் எல்லாருமே நல்ல சாப்பாடுதானே சாப்பிடுறது. சத்துகள் கூடிப்போயிருக்கு. முந்தினகாலத்தில் அது சரி. நீர் சொன்னமாதிரி அயர்ன் சாப்பாடு சீரகம்



கூடச் சேர்ப்பம்" என்றாள். அகத்தைச் சீர் செய்வது சீரகம். அது நல்லாய்க் கொடும். அது இடுப்பு நோவுக்கு நல்லது. முந்தி நாங்க சாப்பிட்டதுதானே. இப்பவும் முதுகுநோ இடுப்புநோ என்றில்லாமல் சுகமாயிருக்கிறம்." திவ்யா சொல்ல, "அதென்றால் உண்மை. இப்பத்தைப் பிள்ளைகள் நெடுக இடுப்புநோ முதுகுநோ என்று கண்ட மருந்துகளையும் விழுங்கிக் கொண்டிருக்கினம்" என்று ஆமோதித்தாள் பூரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சும்மா உந்தச் சாமத்தியச் சடங்கு செய்கிறதெல்லாம் வேஸ்ற். அதுக்குச் செலவழிக்கிற காசைப் போட்டு வைத்தால் படிப்புக்கு உதவும். சீலை உடுத்தி இனி நீ பெரிய பெண், சாமர்த்தியமாய் உன்னைப் பாதுகாக்க வேணும் என்றதை விளக்கவே இந்தச் சடங்கு. முந்தி காசு வாங்கிறதுக்காக ஏழைகள் பெரிசாய் செய்தது. ஒரு பெண்பிள்ளை எப்படித் தன்னைப் பாதுகாத்து இந்த உலகத்திலை வாழவேண்டுமென்பதைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரனும் பள்ளி ஆசிரியரும் வீட்டுக்குள்ளே மாமாவும் வீதியிலே அங்கிள்கூட நம்பிச் செல்ல முடியாத உலகமிது என்பதை எங்கடை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்த வேண்டும். அதுதான் முக்கியம். தங்களைத் தாங்களே எப்படி பாதுகாக்க வேண்டும், எந்த ஆண்மகனையும் நம்பிவிடாது தங்களைக் காத்துக்கொள்கிற கெட்டித்தனத்தை சொல்லிக் கொடுக்கிறதை விட்டிட்டு சும்மா ஆட்களைக்கூட்டி ஆடம்பரம் காட்டுறதில் என்ன இருக்கு? ஒன்றுமே சொல்லிக்கொடுக்காமல் பிறகு துயரம் தரும் சுமையை குழந்தைகள்மீது சுமக்க விடலாமா? அது யாருடைய தவறு? இப்ப இங்கை சரியான வெட்கக்கேடாயிருக்கு. சுவிஸ்காரர் எங்களை படிப்பறிவு இல்லாதவர்கள் என்று நினைக்க வைக்குது. தாயாகிற தகுதியை ஏன் இப்படிக் கொண்டாட வேணுமென்று எனக்கு விளங்கேல்லை. பிள்ளைகளுக்கு இதை வடிவாய் விளங்கப்படுத்த வேணும். அப்பதான் அவையள் இது வேண்டாம் என்று சொல்லுவினம். அதுவரைக்கும் இந்த கூத்து தொடரத்தான் போகுது. இதைப்பற்றிய விழிப்புணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும் என்றால் நாங்க வளருகிற வளர்ந்த பெண்பிள்ளைகளைக் கொண்டு செய்விக்கத்தான் வேண்டும். ஆசைக்கு நெருங்கிய நாலுபேரைக் கூட்டி சீலையுடுத்தி படமெடுத்து ஆரத்தி எடும். அதுவும் பிள்ளையும் நீரும் விரும்பினால். அது போதும். நான் சிந்துவுக்கு அப்பிடித்தான் செய்வன். நான் ஒருநாளும் உந்தச் சடங்குகளுக்குப் போறேல்லை. என்ரை பிள்ளைகளுக்கு உதுகள் தெரியவும் மாட்டுது. அதுவும் ஆம்பிளைப் பிள்ளையளை இதுகளுக்கு கூட்டிப்போறது நல்லதாகவா இருக்கு?" கூறி முடித்தாள் திவ்யா. "தாங்ஸ் திவ்யா. நீர் சொல்றதுபோலத் தான் செய்வம். ஆனால் இந்த ஆரத்தி ஏனென்று எனக்குத் தெரியாது.



அது செய்யவேணுமோ" என்றாள் பூர்ணிமா. "மனிதர்களைச் சுற்றிலும் ஆரா என்ற கண்ணுக்குத் தெரியாத சூட்சுமப் பகுதி சுற்றிவளைச்சு இருக்கெல்லோ. அதிலை விஷக் கிருமிகளோ தீயசக்திகளோ முதலில் சேர்ந்து பிறகே உடம்புக்குள் போகும். இந்த ஆரத்தி அதை உள்ளே போகமுதலே எரிச்சிடும். ஓசோன் பூமியைப் பாதுகாப்பதுபோல. அதுதான் ஆரத்தி எடுப்பதன் அர்த்தம். ஆனபடியால் அதைக் கட்டாயம் செய்திடும்" என்று கூறவும், "ஐயரைக் கூப்பிட்டு துடக்கு கழிக்க வேணுமே" என்று கூறவும், "இதிலை என்ன துடக்கு என்று எனக்கு விளங்கேல்லை. ஆனால் பிராமணர்கள் இந்தச் சடங்கு செய்வதில்லை என்று எங்கேயோ படித்திருக்கிறன். சரியாய்த் தெரியேல்லை. இது உம்மடை விருப்பம். பிறகு திவ்யா சொன்னதாலை செய்யெல்லையென்று ஒரு நாளைக்கு கதை வரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறையில் ஒரு நாளைப் பார்த்து செய்யும்" என்றாள் திவ்யா. "எனக்கு அதுகள் ஒன்றும் தெரியாது. வளர்பிறையென்றால்..." பூர்ணிமா இழுக்கவே, "அமாவாசை வந்த பிறகு. அந்த நேரத்தில் பூமியில் நேர்மறை சக்தி வலுவாயிருக்கும். நல்ல விஷயங்கள் செய்ய ஏற்ற காலம் இது. ஆ இப்பதானே அமாவாசை வந்தது. இன்னும் பதினைந்து நாட்களுக்கு நல்லது. மற்றது நல்ல நுனி உடையாத அரிசியில் மஞ்சள் கலந்து வையும். அதை வருபவர்களிடம் கொடுத்து பிள்ளையை ஆசீர்வதிக்கச் சொல்லும். ஆசீர்வதிக்கும்போது எல்லாருக்கும் தலையில் மட்டும் அரிசியைத் துவி ஆசீர்வதிக்கச் சொல்லும். கனபேர் கீழிருந்து மேல் பிழைபிழையாய் அட்சதை போடுவினம். நீர் பக்கத்திலை நின்று சரியாய்ச் செய்வியும். இல்லையில்லை. நானே நின்று சரியாய்ச் செய்விக்கிறன். இப்படி ஐந்தாறு கொண்டாட்டங்களில் செய்ய எல்லாரும் பழகிடுவினம். சரி சரி இன்னும் இரண்டு பேரிட்டை துடக்கு கழிக்கிறது பற்றிக் கேட்டிட்டுச் செய்வம்." "அப்ப நீர் வருவீரே" "ஓம் நான் மட்டும் வாறன்" என்று கூற விடைபெற்றாள் பூர்ணிமா.

❖❖❖

## 16

சிந்து தான் வாசித்து முடித்த புத்தகங்களை அடுக்கி வைப்பதைப் பார்த்தபடியிருந்த ஆதி, "எப்பக்கா நான் இதெல்லாம் வாசிக்கிறது. கெதியாய் வளர என்ன செய்யலாம்?" கேட்டுக்கொண்டுவந்த அம்மா "நான் ஒரு கதை சொல்றன். கேளுங்கோ" என்று கூறத் தொடங்கினாள். ஒரு பெரிய அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஞானியிடம் போய்க் கேட்டானாம். நான் சீக்கிரம் எல்லா நாடுகளையும் வென்று பெரிய அரசனாக ஒரு வழி சொல்லுங்க என்று. அப்போது ஞானி ஒரு பூ மொட்டைப் பறித்து அரசனின் கையில் கொடுத்து இதைப் பூக்கவையென்றாராம். அந்த அரசன் இதழ்களை வலுக்கட்டாயமாகப் பிரிக்க பூவின் இதழ்கள் பிய்ந்து உதிர்ந்தன. அப்போது ஞானி சொன்னாராம், எதிர்காலம் மலர்களைப்போல. கடவுள் மலர்களை மலர்விப்பது போலத்தான் எங்கள் வாழ்க்கையையும் அவர்தான் காட்டவேண்டும். நாங்க அவசரப்படக் கூடாது. ஒன்றும் அவசரமில்லை. ஒவ்வொரு நாளையும் இரசித்து அனுபவித்துக் கொண்டு போகவேணும். புத்தகங்கள் ஓரிடமும் போகாது. வளர்றபோல வளர்ந்து ஆறுதலாக வாசிக்கலாம். ஒரு அவசரமுமில்லை. அந்தந்தப் பருவங்களை அப்படியப்படியே அனுபவித்துக்கொண்டு மெல்ல மெல்ல வளரலாம்" என்றாள் அம்மா.

அன்றைக்கு பிரகாஷ் அங்கிளவை வந்திருக்கும்போது "யூலியசீசர் என்று ஒரு பெயர் சொன்னீங்களே அண்ணா. அது யார்?" கேட்டான் யுகி.



"ஓ அவரா? அவர் கி. மு. 100ஆம் வருஷம் வாழ்ந்த ரோம அரசர். ரோமப்பேரரசை உருவாக்கியவர். புதிய நாட்காட்டியை உருவாக்கியவரும் அவர்தான். லற்றீன் உரைநடை இலக்கியம் படைத்த எழுத்தாளர்" ஜீவன் கூறவும், "ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வாற யூலியசீசரா?" சிந்து கேட்டாள். "ஓமோம், அவருடைய கதைதான். பேர்னாட்ஷோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வைத்து "சீசர் அன்ட் கிளியோப்பட்ரா" என்ற புத்தகம் எழுதினார்". "நீர் என்ன பெரிய கிளியோப்பட்ராவா என்று கேட்பினம். அந்தக் கிளியோப்பட்ராவா?" சிந்து கேட்டாள். "ஓமோம் அவவேதான். அவ ஒரு பேரழகியாம். ஆனால் அதுக்காக அவ நல்ல வெள்ளையென்று நினைக்க வேண்டாம். அவ எங்கடை நிறமோ கறுப்போதான்." ஜீவன் சொன்னான். "ஷேக்ஸ்பியர் இறந்த நாளன்றுதான் உலகப் புத்தகதினம் என்ன?" சிந்து கேட்கவும், "ஓ அது எனக்குத் தெரியும். ஏப்பிரல் 23தானே. ஷேக்ஸ்பியர் பிறந்ததும் ஏப்பிரல் என்ன" யுகி சொன்னான். "சீசர் தானாகவே இறக்கவில்லை. புரூட்டஸ் என்பவன் நஞ்சூட்டிக் கொன்றான்". "இந்தக் காலத்தில் மட்டுமில்லை அந்தக்காலத்திலும் துரோகிகளும் கெடுதல் செய்பவர்களும் இருந்திருக்கிறார்கள்" கதையைக் கேட்டுக்கொண்டிருந்த திவ்யா கூறினாள்.

"முதன்முதல் ஒரு மணிக்கு அறுபது நிமிடங்கள் என்று நேரத்தை ஒதுக்கியவர்கள் பபிலோனியர் தானே" சிந்து கேட்க, "யார் பபிலோனியர்? தெரியுமா உங்களுக்கு?" கேட்டான் ஜீவன். "தெரியாதே. அவர்கள் இப்ப அழிந்துவிட்டார்களோ?" சிந்து கேட்க. "இல்லை. ஈரானியர்தான் பபிலோனியர்" என்றான் ஜீவன். "ஈரானுக்கு பழைய பெயர் பபிலோன். நாகரிகத்தில் தமிழருக்கு இணையாக இருந்தவர்கள். அவர்களின் தொங்குதோட்டம் உலக அதிசயங்களில் ஒன்று. சிந்துநதி நாகரிகம் மாதிரி மொகஞ்சதாரோ நாகரிகம் பழையகாலத்தில் இருந்தது" கூறினான் ஜீவன்.

"கலிலியோவைத் தெரியுமா?" கேட்டான் ஜீவன். "ஓம் தெரியுமே, பள்ளியில் படித்தம் அவரைப்பற்றி. சூரியன்தான் பூமியைச் சுற்றி வருகிறதென்று நம்பி இருந்த காலத்தில் சூரியன் சுற்றுவதில்லை. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டுபிடித்தவர் என்ன?" கேட்டான் யுகி. "ஓமோம். பூமி கோளவடிவம் என்றும் பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது என்றும் சொன்னதற்காக சாகும்வரை சிறையில் வைத்து அவரது கண்ணைக் குத்தி சித்ரவதை செய்து அங்கேயே இறக்கவும் விட்டுவிட்டார்கள்." ஜீவன் சொல்லவும் சிந்து கேட்டாள், "உண்மையைக் கண்டுபிடித்ததற்காகவா?" "இல்லை தங்கள் கத்தோலிக்க மதத்துக்கு எதிரான கருத்து அது என்று கத்தோலிக்க திருச்சபை செய்த வேலை. புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்தவரும் அவர்தான். ஆனால் நியூட்டனுக்குத்தான் பெயரும் புகழும் கிடைத்தது. அப்பா சொன்னமாதிரி பல நேரங்களில் நிறையக் குளறுபடிகள் நடந்திருக்கிறது."

"நாங்க எல்லாவற்றையும் ஸ்பைகர் பண்ணிவைப்பமே பென்ட்ரைஃவ். அது யார் கண்டுபிடித்ததென்று தெரியுமா?" யுகி கேட்டான். "தெரியாதே. உமக்குத் தெரியுமா?" கேட்டான் ஜீவன். "ஓ தெரியுமே. அவர் ஒரு மலேஷியன். புவாகெயின்சிங். அவர் மலேஷியாவில் யூனிவசிற்றிக்கு அனுமதி கேட்க, அவர் தகுதியானவரில்லை என்று கொடுக்கவில்லையாம். அவர் தைவான் போய் அங்கு பட்டம் பெற்று 2001இல் இந்தப் பென்ட்ரைஃவ்வைக் கண்டுபிடித்தார். இவராலை தைவான் 93 பில்லியன் ரிங்கிட் சம்பாதித்ததாம்." யுகி சொன்னான். "ரிங்கிட் என்றால் தைவான் பணத்தின் பெயரா?" சிந்து கேட்டாள். "உம். யுனிவசிற்றிப் படிப்புக்கும் அறிவுக்கும் சம்பந்தமேயில்லை என்ன அண்ணா?" என்றான் யுகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17

அப்பப்பா "இங்கை ஓடிவாங்கோ பிள்ளைகாள். இன்றைக்கு யாருடைய நினைவுநாள் சொல்லுங்க பார்க்கலாம்" என்றார். ஜீவன் சொன்னான். "நெல்சன் மண்டேலா, சரிதானே அப்பப்பா"? "அது யார் எங்களுக்குத் தெரியாதே" ஆதியும் யுகியும் சொன்னார்கள். "அதுதான் இப்ப சொல்லப்போறன். அவர் தென் ஆபிரிக்காவில் பிறந்த கறுப்பு வைரம் என்று போற்றப்பட்டவர். வெள்ளையர்கள் கறுப்பர்களை அடிமைகளாக நடத்திய நிலைமையை மாற்றியவர். அதோடை உலகமே அவரைக் கொண்டாட வைத்தவர். 95 வயதில் அவர் இறந்தபோது உலகின் முக்கிய தலைவர்கள் எல்லோரும் மரணச்சடங்கில் கலந்துகொண்டார்கள் என்றால் எப்படிப்பட்டவரென்று பாருங்கோ". "அவருக்கு நோபல் பரிசு கிடைத்ததென்ன?" என்றாள் சிந்து. "ஓம், ஏழைக்குடும்பத்தில் பிறந்து ஆடு மாடு மேய்த்துக்கொண்டே பள்ளி சென்று படித்து தென்ஆபிரிக்கா, இலண்டன் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர். தென் ஆபிரிக்க மக்களை வெள்ளையர் அடிமைகளாக கூட்டிச்சென்று வேலை வாங்குவார்களாம். பெண்களை இரும்புச் சங்கிலிகளால் கட்டி இழுத்துக்கொண்டு போவார்களாம். அதைப் பார்த்து வேதனைப்பட்டவர். அவர்களுக்கெதிராகப் போராடி 27 வருடங்கள் சிறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்" கூறவும், "ஆ 27 வருஷமா? கடவுளே எப்படியிருந்தார்?" என்றார்கள். "44 வயதில் சிறை சென்று 71 வயதில் வெளிவந்தவரென்றால் பாருங்களேன். அதற்குப்பிறகு ஆபிரிக்கர்களுக்கு உரிமை கிடைத்து அவர் தென்ஆபிரிக்க ஜனாதிபதியாகி உலக சமாதானத்துக்காகப் போராடியவர் என்று நோபல்பரிசு பெற்றார். பார்த்தீர்களா? அடிமைப்படுத்தப்பட்ட இனத்தில் பிறந்து வெள்ளையர்களே மதிக்கக்கூடிய அளவுக்கு எல்லாருடைய மனங்களையும் வென்றிருக்கிறார். வாழ்ந்தால் இப்பிடித்தான் வாழவேண்டும். எங்கடை வாழ்க்கையெல்லாம் வேஸ்ற்" என்றார் அப்பப்பா.

சித்தியவையின் குடும்பம் லண்டனிலிருந்து வந்திருந்தார்கள். எல்லோரும் ஆரவாரமாகக் குதுகலித்தார்கள். சிரிப்பும் கதைகளுமாக வீடே அமர்க்களப்பட்டது. அப்பப்பா பிள்ளைகளுடன் அமர்ந்து கதை பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட சரா "மாமா பூனை குறுக்கை போனால் போகக்கூடாது என்று ஏன் சொல்றது? சரண்யா என்னைப் போகவே விடமாட்டா. வந்து தண்ணீர் குடிச்சிட்டுப் போங்கோ என்பா" என்று கேட்டாள். "அது சும்மா விஷயம் விளங்காமல் சொல்றது. முந்தின காலத்திலை சண்டைக்கு அரசர்மார் போகும்போது படைகளுக்கு கட்டளையிடுவினமாம். குடியிருப்புக்களில் அமைதியாகப் போகவேண்டும். குடிமக்களை அழிக்கக்கூடாதென்று. வேறு நாட்டுப் படைகளுக்கு எது குடியிருப்பென்று தெரியாததால் சும்மா போவார்களாம். பூனைகள் வந்தால் அது மக்கள் வாழுமிடமென்று தெரியவருமாம். உடனை திரும்பிச் சென்றுவிடுவார்களாம். அதுதான் நீங்க சொன்ன விஷயம். சரண்யாக்கு சொல்லுங்கோ" என்றார். "ஓ. கடைசியிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பென்ற விஷயம்." "இங்கை வாரும் சரண்யா, மாமாட்டைக் கேளும். நானும் உம்மடை பேச்சைக் கேட்டனே பேயன் மாதிரி" என்று சொல்ல பிள்ளைகளெல்லோரும் சிரித்தார்கள். "எல்லாம் தெரிந்த சித்தப்பா பூனை விஷயத்திலை ஏமாந்திட்டார். சித்தி நல்லாய் ஏமாத்திட்டா" என்றார்கள்.

"இன்னொரு பூனையுடைய கதை இருக்கு சொல்றன். கேளுங்கோ" என்று சொல்லத் தொடங்கினார். "முந்தி ஒரு கோயிலில் ஒரு பெரிய ஞானி தவம் செய்து கொண்டிருந்தார். அவர் தவத்திலிருக்கும்போது ஒரு பூனை குறுக்கும்மறுக்கும் கத்திக்கொண்டு திரியுமாம். அதைத் தாங்கமாட்டாத அந்த ஞானி தான் தியானத்திலிருக்கும்போது அதை பக்கத்திலுள்ள தூணில் கட்டச் சொன்னாராம். தியானம் முடிந்த பிற்பாடு அவிழ்த்து விடுவார்களாம். கொஞ்சக்காலத்தின்பின் அந்த ஞானியும் பூனையும் இறந்து அந்தக் கோயிலுக்குப் பொறுப்பாக வந்தவர்களும் அதையே கடைப்பிடித்து வந்தார்களாம். பலகாலங்களுக்குப்பின் பொறுப்பாக வந்தவர் தியானம் செய்ய உட்காரும்போது அக்கோயிலில் வேலை செய்பவர்கள் ஒரு பூனையைத் தேடிக் கூட்டி வந்தார்களாம். அதை துணில் கட்டி வைக்க கோயில் பொறுப்பாக வந்திருந்த சுவாமிகள் ஏனென்று கேட்டார். அதற்கு அவர்கள் சொன்னார்கள், நாங்கள் இங்கு வேலைக்குச் சேர்ந்தபோது ஒரு பூனையைக் கட்டி வைப்பார்கள். அது இந்த ஆலயத்தின் ஐதீகம் என்று காலங்காலமாக செய்து வந்தார்களாம். பின் வந்த அந்த சுவாமிகள்தான் அதைப்பற்றி ஆராய்ந்து உண்மையை அறிந்து இப்படிச் செய்ய வேண்டாம். ஒருநாள் அது தேவையாக இருந்தது. இப்போது எங்கிருந்தோ பூனையைப் பிடித்துவந்து கட்டிவைப்பது தேவையற்ற செயலென்று புரியவைத்தாராம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் மாமா. இப்பதான் விளங்குது. அந்தக் காலத்தில் தேவைப்பட்ட சில முறைகள் தற்போது தேவையில்லை என்று இனி ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கவேணும்."

"இன்னொரு கதையும் இருக்கு. கதையென்று சொல்ல ஏலாது. உண்மை விடயம்." "அதென்ன மாமா? அதையும் சொல்லுங்கோ" என்று சரா கேட்டார். "பழைய காலத்தில் வைத்திய ஏடுகள் பழுதடைந்தால் அவற்றைக் கடலில் வீசிவிடுவர். ஏனெனில் எழுத்துக்கள் அழிந்த அந்த ஏடுகளைப் பார்த்து யாரும் பிழையான வைத்தியத்தைச் செய்துவிடக் கூடாதே என்பதற்காக. ஆனால் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஆரியர் இதையே தங்களுக்கு சாதகமாக பாவிக்கத் தொடங்கினர். தமிழிலிருந்த சிறந்த நூல்களை போகிப்பண்டிகைக்கு கடலில் வீசவேண்டுமெனக் கூறி அவற்றையும் வீசப்பண்ணினார்கள். இப்படியும் நல்ல நூல்கள் பல அழிந்து இப்போது எங்களுக்கு, கிடைக்காமல் போய்விட்டது. "கடல்கோளினால்தானே நல்ல நூல்கள் அழிந்தன" என்று சரா சொல்லவும்" "இயற்கையாகவும் இப்படி செயற்கையாகவும்தான் அழிக்கப்பட்டன. திட்டமிட்டு ஆரியர் செய்த சதியாலும் பலவற்றை இழந்துவிட்டோம்" என்றார் அப்பப்பா.



"இந்தியா இலங்கையில் நல்ல பொசிற்றிவ் எனேர்ஜி உள்ள இடங்களில்தானே கோயில் கட்டுறது. இந்த நாடுகளில் சும்மா ஏதாவதொரு கட்டிடத்தில்தானே கோயில் வைக்கினம். அது சரியில்லைத்தானே மாமா?" சரா கேட்க, "ஓமோம். அநேகமாக சித்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதியான இடம் அல்லது நீங்க சொன்னமாதிரி பொசிற்றிவ் எனெர்ஜியுள்ள இடத்தில்தான் கட்டினார்கள். ஓடிவந்த இடத்தில் இதுகள் நாங்க பார்க்கேலாது. கிடைத்த இடத்தில் அந்த எனேர்ஜியைக் கொண்டரவேண்டியதுதான். அதற்குத்தானே ஹோமங்கள் பூஜைகள் என்று நிறைய இருக்கே. அதோடை அதைத் தக்கவைக்கிறது எங்கடை கையிலைதானிருக்கு. கோயிலைக் கதைபேசும் இடமாய் நினைக்காமல் ஓம் என்ற ஒலி நிறைந்திருக்கச் செய்ய வேண்டும். கண்ட கதைகளும் அங்கு கதைத்தால் நல்ல வைபிறேஷன் எங்கை வரும்? ஓம் என்று சதா ஓதும் ஒருவர் ஆசீர்வதித்தால் ஓம் என்ற மின்காந்த சக்தி வெளியே பாயும். ஓம் என்ற ஒரு சொல் மந்திரத்துக்கு அப்படியொரு சக்தி இருக்கு". "இதுகளை உங்களைப்போல விஷயம் தெரிந்த பெரியவர்கள் எல்லோருக்கும் சொல்ல வேண்டும் மாமா" சரா சொன்னார் "ஓம் என்பதன் கருத்து தெரியுமா சரா?" கேட்டார் மாமா. "பொசிற்றிவ் எனேர்ஜியைக் கொடுக்கும் ஒரு காந்தச் சொல் என்று மட்டும் தெரியும்" என்றார் சரா. பூமி தன் சுழற்சியில் சூரியனைச் சுற்றும்போது இந்த ஓம் என்ற சத்தம்தான் வெளிப்படுகிறதாம். ஆகவேதான் அந்தச் சொல்லுக்கு அவ்வளவு மகத்துவம் இருக்கிறது. அதோடு ஓம் என்று ஆழ்ந்த மூச்சு விடும்போது லங்ஸ் விரிந்து ஒக்ஸிஜின் நிறைய உள்வாங்கப்படும்." கேட்டுக்கொண்டிருந்த ஜீவன் கேட்டான், "ஓம் என்ற சொல்லுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறதென்றால் சிறீலங்கன் ஆட்கள் ஏன் போர் வந்து கஷ்டப்படுகினம். அவைதான் நெடுக எல்லாவற்றுக்கும் ஓம் ஓம் என்று சொல்வார்களே. இந்தியாவில் ஆமா தானே சொல்வார்கள்." "சரியான கேள்வியடா. போட்டானே ஒரு போடு, கெட்டிக்காரனடா ஜீவன். சொல்லுங்க மாமா இதற்கு என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்போறீங்க?" "சரியான கேள்விதான். என்றாலும் உலகின் மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது சிறீலங்கன் மக்களின் கஷ்டம் குறைவு. மற்ற நாடுகளில் போர் இல்லாமலே எவ்வளவு கஷ்டங்கள். போர் ஒரு கொடூரமான நிகழ்வு. அது எங்கு நடக்கிறதோ அங்கு எல்லாவற் றையுமே புரட்டிப் போட்டிடும். என்றாலும் போர் அழிவிலிருந்து மக்களை மீட்க வெளிநாடுகளில் வாழும் தமிழரே எவ்வளவு முன்நின்று உழைக்கிறார்கள். பீனிக்ஸ் பறவையைப்போல எல்லாவற்றையும் துடைத்துவிட்டு மீண்டெழுகிறார்களென்றால் இந்த ஓம் என்ற மந்திரச் சொல்லின் மகத்துவம் என்று ஏன் சொல்லக்கூடாது. அதோடு கவலையளிக்கிற விஷயம் என்னவென்றால் ஓம் என்ற பூமிச்சுழற்சியின் ஒலியைத் தமிழர்கள் அதாவது இந்துக்கள் முதன்முதலில் கண்டுபிடித்ததனால் அதனை ஒரு மதத்தின் சின்னமாக்கி அதனால் ஏற்படும் நல்ல விளைவுகளை உலக மக்கள் பயன்படுத்த முடியாமல் செய்து விட்டார்கள்."

அப்பப்பாவின் விளக்கம் சிந்திக்கத் துண்டியது. சரா சொன்னார், "சதா துருதுருவென்று பிள்ளைகள் கேள்வி கேட்பது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு. கேள்வி கேட்கும் பிள்ளைகள்தான் அறிவில் சிறந்து விளங்குவார்கள். இப்ப மூளையைப் பலமானதாக்க மூளைக்கு நிறைய வேலை கொடுத்து இதயம் குறுகி மனிதம் செத்துக்கொண்டிருக்கிறது. மனதுக்கான கல்வியும் மூளைக்கான அறிவும் இதயத்துக்கான உணர்தலும் சேரவேண்டும்". "சரியாய்ச் சொன்னீங்க சரா. ஆனால் இந்தளவு புரிதல் யாரிடம் இருக்கு. மனிதம் என்றாலே என்னவென்று தெரியாத மனிதர்கள் தான் இப்ப இருக்கிறார்கள். பணத்தை நகையைப் பற்றிக் கேளுங்கோ. நிறையச் சொல்லுவினம்" என்றார் அப்பப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"உமக்குத் தெரியுமே சரா பழைய சங்ககாலப் பாடல்களில் ஒன்று. பாட்டை மறந்திட்டன். கருத்து நல்ல நினைவிலிருக்கிறது. ஒரு அரசன் காட்டுக்குள் தேரில் போகும்போது தேரில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த சின்ன மணிகள் மெல்லிய சத்தமிட்டபடி இருந்தனவாம். அப்போது அரசன் தேரோட்டியிடம் சொன்னானாம், மணிகளைக் கட்டி சத்தம் வராது இருக்கப்பண்ணச் சொல்லி. ஏன் தெரியுமா? பூக்களில் தேனுண்ணும் வண்டுகள் மணிகளின் சத்தத்தினால் பயந்தோடக்கூடுமென்று. வண்டுகள் என்ற சிறிய உயிரினம் கூடப் பாதிக்கப்படக்கூடாது என்ற மனிதநேயம் உள்ளவர்கள் தமிழர்கள். ஆனால் இப்ப அந்த மனிதநேயம் சக மனிதர்களிடமே காட்டத் தெரியாது காணாமல் போய்விட்டதே". "ஓம் மாமா. தமிழர்களிடம் மட்டுமில்லை எல்லா மனிதர்களிடமும் மனிதம் செத்துவிட்டது" என்றார் சரா.




"அதென்ன சித்தப்பா பீனிக்ஸ் பறவை? அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றார்கள். "ஓ அதுவா? அது புனித தீப்பறவை என்பார்கள். எகிப்திய கிரேக்க கிறீஸ்தவ புராணங்களில் இப்பறவை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நெருப்பில் கருகி இறந்து தன் சாம்பலிலிருந்து மீண்டும் எழும் என்பார்கள். இதன் வால் நீலநிறமும் ஊதா பச்சை பொன்னிறம் உடலில் இருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. இது ஒரு கற்பனைப் பறவையென்றும் சொல்கிறார்கள். பெரிய கஷ்டங்களிலிருந்து மீண்டு வருவதற்கு இப்பறவையை உதாரணமாகச் சொல்வார்கள். 'ரு றைஸ் லைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ பீனிக்ஸ் பிறம் த ஆஷ்ஷஸ்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. தமிழிலும் பினிக்ஸ் பறவைபோல உயிர்த்தெழும்பீற்றான் என்கிறது" என்று விளக்கினார் சரா. "நீங்க சொல்ற நிறங்களில் அந்தப் பறவையைக் கற்பனை செய்தால் மிகவும் அழகான பறவையாயிருக்கும் என்ன" என்று கற்பனையில் பீனிக்ஸ்சை கண்டு மகிழ்ந்தாள் சிந்து.



"ஏன் கோயில்களில் மணி அடிப்பார்கள்?" என்று பிள்ளைகள் எல்லோரும் அம்மாவைக் கேட்க, "அப்பப்பாவைக் கேளுங்கோ. அவருக்குத்தான் இதுகள் தெரியும்" என்றாள் திவ்யா. எல்லோரும் அப்பப்பாவைச் சூழ்ந்து கொண்டார்கள். "நீங்க இப்பிடி புத்திசாலிகளாக இருப்பது பெரிய சந்தோஷமாயிருக்கு. கேள்வி கேட்கிற பிள்ளைகள்தான் நிறைய சாதிப்பினம். என்ன சந்தேகமோ என்னட்டைக் கேளுங்கோ. எனக்குத் தெரிந்ததைச் சொல்லுவன். மணிச்சத்தம் மனதைத் தட்டி எழுப்பும். ஆன்மீக அதாவது கடவுள் சம்பந்தமான உணர்வைத் துண்டிவிடும்.



அதுதான் இந்து ஆலயங்கள் என்றாலும் சரி, கிறீஸ்தவ தேவாலயங்கள் என்றாலும் சரி, கட்டாயம் மணி ஒலிப்பார்கள். இந்த மணி குரோமியம், சிங்க், கொப்பர், லிட், காட்மியம், மங்னீஸ் என்ற உலோகங்களால் ஒவ்வொருவிதமான அளவிலை சேர்க்கப்பட்டிருக்கும். அளவு மாறினால் அந்த சத்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையும் வேறுபடும். அதுதான் கோயிலுக்கும் சேர்ச் மணிக்கும் வித்தியாசமான சத்தம். மணிச்சத்தம் மூளையின் செயலாற்றலைக்கூட துண்டிவிடும். மணியொலி கிட்டத்தட்ட 7 செக்கன் நீடிக்கும். அந்த நேர இடைவெளி உடம்பின் 7 சக்கரங்களையும் அக்ரிவேற் ஆக்கி மூளையில் எதிர்மறை எண்ணங்கள் இருந்தாலும் மாற்றிவிடும். பொசிட்டிவ் எனேர்ஜியைக் கூட்டும். அதுதான் கோயிலுக்குப் போறது மனதுக்கு ஆறுதலாயிருக்குது என்று சொல்றது. கண்ணை மூடி அந்தச் சத்தத்துடன் இணைந்து போய்ப்பாருங்கோ. நான் சொல்றது விளங்கும்" என்றார். "அதோடை மணிச்சத்தம் மூளையின் வலது இடது என்று இரண்டு பக்க மூளையையும் அக்ரிவேற்றாக்கும்."

"ஏன் அப்பப்பா திருநீறு பூசவேணும்?" கேட்ட ஜீவனுக்கு, "அது வாழ்க்கை நிலையாமையை விளக்கும். மற்றது குளித்தவுடன் பூசும்போது நெற்றியில் நீர் சேரவிடாமல் உறிஞ்சி எடுத்துவிடும். தலைவலி, தலையில் நீர்கோர்த்தல் போன்றன வரவிடாது. இது இறைவனே பர்நாதன் என்பவனுக்கு காயம் பட்ட இடத்தில் கொட்டி காயத்தை மாற்றியதாக ஒரு கதை உண்டு. இந்த வீபூதியில் இறைவன் தானிருப்பதாகவும் இதை அணிபவர்களிடம் தீயசக்திகள் அணுகாதென்று கூறியதாகவும் ஒரு கதையுண்டு. வீபூதி சைவர்களின் சமயச் சின்னமாக கருதப்படுகிறது" என்றார்.

சிந்து கேட்டாள், "ஏன் அப்பப்பா நோர்த் சைடிலை தலை வைச்சுப் படுக்கக்கூடாது. அம்மாவிடம் கட்டிலை மாற்றக் கேட்டன். அப்ப சொன்னா. வடக்கிலை தலை வைக்கக் கூடாதென்று. ஏனென்று அப்பப்பாட்டைக் கேளுங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்தான் சரியாய் சொல்லுவார் என்றா". "அதுவா நாங்க வாழுற பூமி இருக்கே அதன் காந்தசக்தி எங்கடை உடலின் காந்தசக்திக்கு எதிர்த்திசையில் இருந்தால் உடல் பொருத்தமற்ற நிலையிலிருக்கும். அப்போது இதயத்துடிப்பு சீராக இருக்காது. ஒழுங்கற்ற முறையில் துடிக்கும். மூளை அமைதியற்ற நிலையிலிருப்பதால் பல நோய்கள் எமக்கு வர சந்தர்ப்பத்தை நாங்களே ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவோம். பூமி சுற்றுகிற திசையிலேயே நாங்களும் போய்க்கொண்டிருந்தால் உடல்நலம் கெடாது." நன்றாகவே விளங்கப்படுத்தினார்.

சித்தியின் குழந்தை அக்ஷயா ஓடும்போது தடுக்கிக் கீழே விழுந்து விட்டாள். "ஓ"வென்று அழத்தொடங்கிவிட்டாள். சித்தி தூக்கி சமாதானப்படுத்தினாலும் அழுகை நிற்கவில்லை. "கண்ணீர் எப்பிடி வருகுது உங்களுக்குத் தெரியுமா சித்தி?" சிந்து கேட்கவும் சித்தி சொன்னா. "எங்கடை கண் இமையின் அடியில் கண்ணீர் சுரக்கும் உறுப்பு இருக்கிறது. அதிலிருந்து கண்ணீர் வந்து கண்களைக் கழுவும். துக்கம் வரும்போது மூளை கண்ணீர்ச்சுரப்பிக்கு சொல்லும் கண்ணிலை நீரை வரச்சொல்லி. கண்களிலிருந்து நீர் கொட்டக் கொட்ட கவலையும் போயிடும். ஆனால் கண்ணிலிருந்து எப்பவுமே நீர் வந்துகொண்டுதான் இருக்கும். அது எங்களுக்குத் தெரிகிறேல்லை. காற்றில் அது காய்ந்து மறைஞ்சிடும். நாங்க இமைக்கிறதாலை எந்த நேரமும் நம்மை அறியாமலே கண்களைக் கழுவி வருகிறோம்." "அழும்போது ஏன் சித்தி மூக்கிலையும் தண்ணி வருகுது?" கண் கீழ் இமை இருக்கே. அதில் ஒரு சின்னப் பள்ளம் இருக்கு. அதன் வழியே அந்தக் கண்ணீர் மூக்குக்குச் சென்றுவிடுகிறது. அதுதான் மூக்கை சீற வேண்டியிருக்கு. இன்னொன்று தெரியுமா? குழந்தை பிறந்தவுடன் கண்ணீர்ச்சுரப்பி வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாது. பிறந்து 15, 16 நாட்களுக்கு குழந்தை அழுதாலும் கண்ணீர் வராது. அதுக்குப் பிறகுதான் கண்ணீர்ச் சுரப்பி வேலை செய்யத் தொடங்கும்." சித்தி சொல்லவும் யுகி "ஏன் சித்தி சிலபேர் தொட்டதுக்கெல்லாம் கண்ணீர் விடுவினம் ஆதி மாதிரி" என்று கேலியாகக் கேட்க, "பாருங்க சித்தி. அண்ணா என்னைப் பகிடி பண்றான். எனக்கு பெரிய கண்ணீர்ச்சுரப்பி இருக்காக்கும். அதுதான் நெடுக அழுகிறன் ஆக்கும். என்ன சித்தி?" என்றாள் ஆதி. "அப்படியில்லை ஆதி. நீங்க கண்ணீர்ச் சுரப்பியை உங்கடை கொன்ரோலுக்குள்ளை வைச்சிருக்க வேணும். வீணாக்கினால் பிறகு கண்களைக் கிளீன் பண்ண கண்ணீர் இல்லாமல் போயிடும். கெதியாய் கண்கள் கெட்டிடும்" என்று கூறி சித்தி கண்ணடித்தார். பிறகு சொன்னா "இல்லைடா. கண்ணீர் குறையாது. ஆனா நீங்க சும்மா சும்மா அழுதால் யாரும் கணக்கெடுக்க மாட்டினம். அதைச் சொல்றது மற்றவை தன்னை கவனிக்க வேணுமென்று அற்றன்ஷன் சீக்கிங் என்று. அது நல்ல பழக்கமில்லை. அதை நீங்கவிடப் பழகவேணும் ஆதி. அழுபவன் கோழை என்று பாரதிதாசன் சொன்னாரே. பாரதியார் சொன்னார் குன்றென நிமிர்ந்து நில் என்று. மலையைப்போல நிமிர்ந்து நிற்கவேணும். தன்னிலை நம்பிக்கை இல்லாதவை தான் தொட்டதுக்கெல்லாம் அழுகிறது. இனிப் பாருங்கோ ஆதி எப்படி வீரியாகிறா என்று". "ஓ அப்படியோ. எனக்கு இப்பிடி யாரும் சொல்லேலையே. இனி நான் எப்பிடி வீரியாகிறன் பாருங்கோ" என்றாள் ஆதி. இப்பிடித்தான் முந்தி சிந்துக்காவும் அழுவா. இப்ப பாருங்கோ எவ்வளவு சிமாட் ஆயிட்டா" என்றா சித்தி.

"பாரதியார்தானே சித்தி பெரிய புலவர்?" ஆதி கேட்டாள். "பழைய காலத்தில் நிறையப் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடிய பாடல்கள் விளங்கிக்கொள்ள கொஞ்சம் கஷ்டம். அந்த நிலையை மாற்றியவர்தான் பாரதியார். எல்லாருக்கும் விளங்கக்கூடிய இலகுதமிழில் பாடல்கள் பாடினார். அதோடு பெண்கள் வீட்டுவேலை செய்யும் அடிமையாக இராமல் படித்து நிறையச் சாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு நிறையப் பாடல்கள் பாடினார். சுதந்திர எழுச்சிப்பாடல்கள் நிறையப் பாடியதுடன் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் பாடுவதற்கு உதவியாக முதலே பாடல்கள் பாடிவிட்டார். ஆனால் சுதந்திரத்தைப் பார்க்காமலே 38 வயதிலேயே இறந்துவிட்டார்." சித்தி கூறவும் சிந்து சொன்னாள், "தெரியும் சித்தி. யானை அவரைத் தாக்கியதால் பாதிக்கப்பட்டு சில நாட்களில் இறந்தார். அதுவும் யானைக்கு தினமும் வாழைப்பழம் கொடுப்பார். அந்த யானையே ஒருநாள் அவரை அடித்துவிட்டது. என்ன சித்தி." "ம் உங்களுக்குத்தான் தெரிந்திருக்கே" என்றாள் சரண்யா.

திடீரென்று சிந்து சித்தியைக் கேட்டாள், "அக்ஷயா என்றால் என்ன அர்த்தம் சித்தி? மணிமேகலைக்கதையில் வருகிறதே அக்ஷய பாத்திரம். அள்ள அள்ளக் குறையாது. அதுதான் அர்த்தமா"? "கெட்டிக்காரி, அள்ள அள்ளக் குறையாது வளர்ந்து கொண்டே போகும். உலகின் ஆண்டுகளில் அக்ஷயம்தான் முதலாவது வருடம்". "ஓ அப்படியோ. நல்ல கருத்துள்ள பெயர். எனக்கு அந்தப் பெயர் நல்லாய் பிடிச்சிருக்கு" என்றாள். "ஏன் சிந்துஜாவும் நல்ல பெயர்தானே". "ஓம் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெயர்தான். அக்ஷயா மாதிரி நல்ல கருத்து இல்லைதானே" என்றாள். "ஏன் ஆதித்தியா மிச்சம் நல்ல கருத்து. ஓம் சூரியனின் பெயர். அதுதான் அவ எங்கள் எல்லாரையும்விட புத்திசாலி" சொன்னாள் சிந்து. "ஏன் நீங்க எல்லாருமே நல்ல புத்திசாலிக் குழந்தைகள்," சித்தி பாராட்டினாள். சிந்து சொன்னாள். "ஆதி போல அக்ஷயாவும் தமிழ்ப்பால் குடிக்கிறாவா"? "அதென்ன தமிழ்ப்பால் இங்கிலீஷ்பால் என்று இருக்கா எனக்கு விளங்கேலையே" சித்தி கூறவும் APTAMIL பால் பெட்டியை எடுத்துவந்த சிந்து APயை மூடிக்கொண்டு இப்ப வாசியுங்க" என்றாள். "ஓம் என்ன, அடடா எவ்வளவு யோசிக்கிறீங்க. நான் இவ்வளவுகாலம் இந்தப்பால் பாவிக்கிறன். எனக்கு இப்படித் தோன்றவே இல்லையே" என்று பாராட்டினாள்.

❖❖❖

## 18

வீட்டின் வரவேற்பறையில் வைத்திருந்த செடிகளின் இலைகளை சித்தியின் மகன் தீபக் ஒடித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். பார்த்த ஜீவன் ஓடிச்சென்று "தீபக் இப்படிப் பிய்க்கக்கூடாது. அந்தச் செடிகளுக்கு வலிக்குந்தானே. திரும்ப அந்த இலைகளை செடியில் ஒட்டவைக்க முடியுமா? முடியாதெல்லோ. இனிமேல் ஒடிக்கக்கூடாது என்ன" என்றான். தீபக் கேட்டான், "அண்ணா செடிகளுக்கு உயிர் இல்லையே. அப்ப எப்படி வலிக்கும்"? "யார் சொன்னது உயிரில்லையென்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செடிகள் எப்படி வளருது? உயிர் இருக்கிறபடியாலை தானே வளருது. செடிகளுக்கு உயிர் இருப்பதால் தானே வளர்ந்து பூக்குது. காய்க்குது. ஒவ்வொரு செடியும் ஒரே காலத்திலை பூக்கிறேல்லையே. ஒகஸ்ற் பிளவர் ஆவணி மாதத்திலை மட்டுந்தான் பூக்கும். சில பூக்கள் பகலிலும் சில பூக்கள் இரவிலும் பூக்குதே. பழங்கள் தங்கடை தங்கடை காலங்களில் தானே பழுக்குது. செடிகளுக்கு எங்களைப்போல நரம்பு மண்டலம் தானில்லை. நாங்க வலியை உணர்கிற மாதிரி அவைக்கு உணர முடியாது. அவ்வளவுதான். தொட்டாற்சிணுங்கி என்று ஒரு செடி இருக்கு. அதுக்குமட்டும் உணர்ச்சி இருக்கென்று நினைக்கிறன். அதுமட்டும் தொட்டவுடன் தன் இலைகளை மூடிச் சுருக்கிக் கொள்ளும். இனிமேல் இப்படி இலைகளை ஒடிக்கக்கூடாது என்ன. மரத்துக்குச் சொல்லி அழத் தெரியவில்லை. ஆனால் தன்ரை பிள்ளைகளை இப்படிப் பிய்த்தால் அதுக்கு கஷ்டமாயிருக்கும் தானே." ஜீவன் சொன்னதும், "சொறி அண்ணா. இனிமேல் பிய்க்க மாட்டன்" என்று சொல்லி ஓடிப்போய் நீரெடுத்து வந்து ஊற்றி செடியைத் தடவி விட்டபடியே "சொறி. மன்னிச்சிடுங்கோ" என்றான்.

பிறகு கேட்டான், "அண்ணா பறவைகள், மிருகங்களுக்கு உணர்ச்சி நரம்பு இருக்குதென்ன? அவைக்கு எங்களைப்போல வலிக்குந்தானே" என்றவனுக்கு "ஓமோம். வலிக்கும். ஆனால் அழத் தெரியாது. மிருகங்கள் வலிச்சால் கத்தும். பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கத்தாதென்று நினைக்கிறன்" என்றான் ஜீவன். தொடர்ந்து தீபக் கேட்டான், "அண்ணா பறவைகள் எப்பிடி மேலை பறக்கும்? கல்லை மேலை வீசினால் கிழே வந்து விழுகுது. ஆனால் பறவைகள் மட்டும் எப்பிடி பறக்கினம்"? "பூமி புவியீர்ப்புச் சக்தியால் எல்லாத்தையும் தன்னட்டை இழுத்துக் கொள்ளும். பறவையையும் பூமி தன்னிடம் இழுக்கும். ஆனால் பறவைகள் தங்கள் சிறகுகளின் உதவியால் பூமியின் சக்தியை எதிர்த்து மேலே பறந்துபோகிறது. பறவைகளின் எலும்புகளில் ஓட்டை இருப்பதால் பாரமில்லாமல் பறக்க முடிகிறது. நாங்க தண்ணீரில் நீந்துவதுபோல் பறவைகள் காற்றில் சிறகுகளை உதைத்துப் பறக்கின்றன. சிறகுகளை பாவிக்காவிட்டால் மேலே பறக்க முடியாமல் கீழே விழுந்துவிடும்." யுகி கேட்டான், "சரியண்ணா. வானத்தில் இந்தப் பறவைகள் பறக்கும்போது எப்பிடித் திசை தெரியும்"? "எனக்கும் தெரியேல்லை. வாங்க சித்தப்பாட்டைக் கேட்பம்" என்று ஓடினார்கள்.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

சித்தப்பா தொலைக்காட்சியில் கால்பந்தாட்டப் போட்டியைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார். பிள்ளைகள் ஓடிவரவும் "என்ன பிள்ளைகளா எல்லாரும் ஓடி வாறீங்க. என்ன விஷயம்?" என்று கேட்டார். "எங்களுக்கு ஒரு விஷயம் தெரியேல்லை. அப்பா நீங்க சொல்றீங்களா" என்று தீபக் கேட்க, "அப்படியா. கேளுங்கோ" என்று கூறியபடி தொலைக்காட்சியை நிறுத்தினார். பறவைகள் எல்லாம் எப்படி வானத்திலை வழி கண்டுபிடிச்சு பறப்பினம். அதுவும் ஐரோப்பாவில் குளிர்காலம் வரப்போகுதென்று முன்கூட்டியே ஒரு கண்டத்தை விட்டு இன்னொரு கண்டத்துக்கே பறக்கினம். அது எப்படி சித்தப்பா" என்று எல்லார் சார்பாகவும் ஜீவன் கேட்டான். "அதுபற்றி இன்னும் ஆராச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். எல்லாப் பறவைகளும் ஒரேமாதிரியில்லை. என்றாலும் பூமியின் காந்த அலைகளைக் கொண்டும் காற்று வீசும் திசையைக் கொண்டும்தான் பறவைகள் திசையைக் கண்டுபிடிக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். சில பறவைகள் வழியில் குறுக்கிடும் மலைகள் ஆறுகள் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாம். இன்னும் சில பறவைகள் சூரியனையும் நட்சத்திரங்களையும் கணித்துப் பறக்கின்றனவாம். சில பறவைகள் தங்கள் உடலிலிருக்கும் மைக்னடைட் என்ற தாதுவை திசை காட்டும் கருவியாகப் பயன்படுத்துகின்றன என்றும் கூறுகிறார்கள்.

வெளியில் சென்றிருந்த அப்பப்பா அப்போதுதான் வந்தவர் சொன்னார். "உங்கடை பேச்சைக் கேட்டன். முந்தின காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் தோட்டம் வாங்குகிறதென்றால் ஒரு சேவலைக் கொண்டுபோய் வாங்க இருக்கிற நிலத்தில் விடுவார்களாம். தாங்களும் பக்கத்திலேயே தங்குவினமாம். விடிய அந்தச் சேவல் கூவினால் அந்த இடத்தை வாங்குவினமாம். ஏனென்றால் சேவல் மண்ணைக்கிளறி நல்லாய் பூச்சி புழுக்களைச் சாப்பிட்டால் வயிறு நிறைந்து இரவு நன்றாக நித்திரை கொண்டு விடிய நேரத்துக்கே கூவுமாம். நல்ல நிலமில்லாவிட்டால் பூச்சி புழுக்கள் இருக்காது. நல்ல சாப்பாடு இல்லாமல் இரவு சரியாக நித்திரை கொள்ளாமல் விடிய எழும்பிக் கூவாதாம். ஒரு பறவையை வைச்சு தோட்டம் வயலை வாங்கியிருக்கிறார்கள். முந்தைய காலத்தில் இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள்". "ஓம் மாமா. இப்ப இயற்கையை நம்பாமல் செயற்கைக் கருவிகளை நம்பி நல்லதுகள் எல்லாவற்றையும் இழந்துகொண்டு வருகிறோம். கடவுள் தந்த நல்ல இயற்கை வளத்தை இரசாயனங்களால் பாழடிச்சு உக்காத பொருளான பிளாஸ்ரிக், பொலித்தீன், நைலோன் என்ற குப்பைகளை பூமியில் குவித்து நாளைய சந்ததியான இவர்களுக்கு நல்லதல்லாத பூமியைக் கொடுக்கப் போகிறோம்" என்றார் சித்தப்பா. ஜீவனுக்கும், யுகிக்கும், சிந்துக்கும் புரிய ஆதி, தீபக் "எங்களுக்கு விளங்கேல்லை" என்றார்கள். "உங்களுக்கு வளர எல்லாம் விளங்கும்" என்றார் சித்தப்பா. "இறையன்பு சொல்லியிருந்தார். ஆதிவாசிகள் தங்கள் விளைநிலங்களில் பயிர்களை உண்ணும் யானைகளைச் சாப்பிட்டது போதும் என அன்போடு கூறுவார்களாம். இன்னும் கொஞ்சம் என்று அவை உணர்த்துவதாகவும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையில் எவ்வளவு புரிதல் இருந்திருக்கிறது. அது இப்ப எங்கே?" அப்பப்பா சொன்னார். "யார் மாமா ஐ.ஏ.எஸ் இறையன்புதானே. எனக்கு அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சம் பிடிக்கும்." "ஓ. எனக்கும் பிடிக்கும்." "இப்ப இப்படியான மனிதர்கள் எங்கே இருக்கிறார்கள்? இவர் தமிழ்நாட்டுக்கு முதல்வராய் வரவேணும். ஊழல், பொய் எல்லாம் இல்லாமல் போயிடும்" சொன்னார் மாமா.

"சரி சித்தப்பா, பறவைகள் மின்கம்பிகளில் நல்ல வடிவாக உட்கார்ந்திருக்குமே. எங்களுக்கென்றால் ஷொக் அடிக்கும். அதுகளுக்கு ஏன் அடிக்கிறேல்லை" ஜீவன் கேட்டான். "பறவைகள் மின்கம்பிகளில் தங்கள் சின்னக் கால்கள் படும்படி உட்காரும். மின்கம்பியில் ஆயிரக்கணக்கான வோல்ட் மின்சாரம் போய்க்கொண்டிருந்தாலும் பறவைகளின் குட்டிக் கால்கள் வழியே செல்லும் மின்சாரத்தின் வலு குறைவு. இந்தக் குறைந்த வோல்ட் மின்சாரம் பறவைகளை ஒன்றும் செய்யாது. ஆனால் அவற்றின் உடம்பு மின்கம்பியில் பட்டால் ஷொக் அடித்து இறந்துவிடும்." பேசிக் கொண்டிருக்கும் போதே திவ்யா "யாருக்கெல்லாம் ரீ வேணும்" என்று கேட்கவே, எல்லாரும் "குளிருக்கு பிளெயின் ரீ நல்லாயிருக்கும். எல்லாருக்கும் வேணும்" என்றார்கள். யுகியும்



சிந்துவும் கண்ணாடிக் கோப்பைகளில் சுடச்சுட தட்டில் வைத்துக் கொண்டுவந்தார்கள். கொடுக்கும்போதே யுகி கேட்டாள், "ஏன் சித்தப்பா கோப்பை சுடும். எங்கடை கைகளிலோ உடம்பிலோ பட்டாலும் சுடும். ஆனா நாக்கு சூடாய்க் குடிக்கும். எப்பிடி சித்தப்பா"? "நல்ல கேள்வி யுகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை நாக்கில் "மியூக்கஸா" இருக்கும். இது நாக்கை சூட்டிலிருந்து காக்கும். அதோடு நாக்கில் தொடர்ந்து சுரக்கும் எச்சில் சலைவா என்கிறது நாக்கை குளிர்ச்சியாக வைத்திருக்கும். அது சூட்டைக் குறைச்சிடும். எங்கடை உடம்பில் தோலின் மேல் அப்பிடியொன்று இல்லாததால் தோலால் சூட்டைத் தாங்க முடியாது." சித்தப்பா விளங்கப்படுத்தவே "எப்பிடி சித்தப்பா உங்களுக்கு எல்லாம் தெரியும்" என்று கேட்டாள் சிந்து. "சித்தப்பா லண்டனிலை செக்கன்ரி ஸ்கூல் மாஸ்ரர்தானே. அப்ப அவருக்கு எல்லாமே தெரியுந்தானே" என்றான் ஜீவன். சித்தப்பா கேட்டார், "யாருக்குத் தெரியும் இந்தத் தேயிலையைக் கண்டுபிடித்தது யாரென்று?" கேட்கவும் எல்லாரும் "சென்நுங் என்ற சீனஅரசன். எங்கடை தமிழ்ப்புத்தகத்தில் போட்டிருக்கே" என்றார்கள்.



"மடம் மேரிகியூரி பற்றித் தெரியுமா" சித்தப்பா கேட்க, "தெரியாதே" என்றார்கள் எல்லோரும். "போலந்திலை பிறந்து பிராண்சிலை வாழ்ந்து இரண்டுதரம் நோபல் பரிசு பெற்றவர். இரண்டுதரம் நோபல் பரிசு பெற்றவர் உலகத்திலேயே இவர் ஒருவர்தான். முதல் பெண் பேராசிரியரும் இவர்தான். தான் முதல் கண்டுபிடித்த கண்டுபிடிப்பான போலோனியத்துக்கு தன் தாய்நாட்டின் பெயரை வைத்தார். ரேடியத்தைக் கண்டுபிடித்தவரும் இவரே. இவரது கணவரான பேராசிரியர் கியூரியும் இவரோடு கதிர்வீச்சு ஆராய்ச்சிகள் செய்து பாதியில் மரணித்துவிட அதனால் மிக்க துன்பத்தில் இருந்தபோதும் ஆராய்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்து உலகிற்கு மிகவும் பயனுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரேடியத்தைத் தந்தவர் அவர்தான். அந்த ரேடியக் கதிர்வீச்சுக்களின் தாக்கத்தினாலேயே மரணமும் அடைந்துவிட்டார். பரிஸ்நகரில் மருத்துவ ஆராய்ச்சி மையங்களையும் நிறுவினார். பிறந்த தாய்நாட்டுக்கும் வளர்ந்த நாட்டுக்கும் ஏன் உலகிற்கும் பெரிய சேவை செய்துவிட்டு மறைந்து விட்டார்." சித்தப்பா கூறி முடித்ததும் எல்லோரும் கனமான சூழலிலிருந்து விடுபட்டனர். தங்களுக்காக இல்லாமல் வரும் சந்ததிகளுக்காக பாடுபட்டவர்களின் தியாகம் எல்லோருடைய மனதையும் நிறைத்தது.

தீபக் சொன்னான், "இப்படியான கவலையான கதை வேண்டாமப்பா. எங்கள் எல்லாருக்கும் அழுகை வருகுது". "ஓகே ஓகே மன்னிச்சுக் கொள்ளுங்கோ. வேறு விஷயம் கதைப்பம்" என்று கூறிவிட்டு "மாவீரர் அலெக்சாண்டரின் கதை சொலலட்டா. தன்னுடைய இருபதாவது வயதில் கிரேக்க அரசன் ஆனார். 33 வயதுக்குள் உலகின் பாதியைக் கைப்பற்றி மாவீரன் என்ற பெயரைப் பெற்றார். இந்தியாவின் பஞ்சாப் வரை கைப்பற்றினார். மிகச் சிறந்த வீரர். கிரேக்க தத்துவஞானி அரிஸ்ரோற்றலின் மாணவர். அரிஸ்ரோற்றில் உலகின் எல்லா



நாடுகளைப் பற்றிய அறிவினையும் தன் மாணாக்கனுக்கு சொல்லிக்கொடுத்து எப்படி நாடுகளைக் கைப்பற்றுவது என்ற அறிவையும் சொல்லிக்கொடுத்தாலேயே அலெக்சாண்டர் உலகம் முழுவதையும் வெற்றி காண முடிந்தது. அரிஸ்ரோற்றலின் நகரான ஸ்ரோகிரா போரின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழிக்கப்பட தன் குருவின் விருப்பப்படி மீண்டும் நிர்மாணித்து அந்த மக்களைக் குடியமர்த்தி அடிமைகளாகப் பிடித்தவர்களை விடுவித்து தன் ஆசிரியருக்கு நன்றி தெரிவித்தார். இவர் யாழ் வாசிப்பதில் வல்லவர். அவரது இருபதாவது வயதில் அவரது தந்தையார் அடக்கவே முடியாத ஒரு குதிரையை அடக்குபவனை அரசனாக்குவதாகச் சொன்னாராம். எவ்வளவோ பேர் முயன்றும் அடக்க முடியவில்லையாம். அந்தக் குதிரையை நன்கு ஊன்றிக் கவனித்த அலெக்சாண்டர் அக்குதிரை தன் நிழலைப்பார்த்தே பயப்படுவதைக் கண்டுபிடித்து சூரியவெளிச்சத்துக்கு எதிர்ப்புறத்தில் நிற்பாட்ட அது பயந்து அடிபணிந்தது. உடனே அதன்மேல் ஏறி அமர்ந்து வெற்றி பெற்றார். அந்தக் குதிரைதான் அவர் வெற்றிகளுக்குத் துணையாக இருந்தது. இந்தியா வரை சுமந்து சென்றதும் இக்குதிரைதான். அது இறந்தபோது அதன் நினைவாக அதன்பெயரான பூசிஃபலஸ் என்றதை ஒரு நகருக்கே வைத்து தன் நன்றியைத் தெரிவித்திருக்கிறான். 33 வயதில் நெருப்புக் காய்ச்சலால் இறக்கப்போவதை உணர்ந்து என்ன சொன்னார் தெரியுமா? நான் இறந்த பிறகு என் சவப்பெட்டிக்கு வெளியால் என் கைகள் இரண்டையும் தெரியுமாறு வைத்து மூடி எடுத்துச் செல்லுங்கள் என்றாராம்". "ஏன்?" என்று எல்லோருமே சரண்யா உட்பட ஆவலாகக் கேட்டார்கள். "எத்தனையோ நாடுகளை வெற்றிகொண்டு அரசனாயிருந்த மாவீரன் அலெக்சாண்டரே இறக்கும்போது எதையும் எடுத்துச் செல்ல முடியவில்லை என்பதை உலகம் புரிந்து கொள்ளட்டும் என்றாராம். எவ்வளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தத்துவத்தை எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்". "நல்ல அருமையாயிருக்கு சித்தப்பா இந்த அலெக்ஸ்சாண்டர் கதை. அதுவும் நீங்க சொல்றவிதம் இன்னும் நல்லாயிருக்கு" கூறினான் ஜீவன். "இந்த மாவீரன் அலெக்ஸ்சாண்டரிட்டை நீங்க பின்பற்ற வேண்டிய குணம் எல்லோரையும் நேசித்தல், நன்றியுணர்வு, குரு மேலுள்ள பணிவு, பக்தி, அதுவும் தான் வளர்த்த குதிரையின் பெயரை ஒரு நகரத்துக்கே வைத்த பெருந்தன்மை. எவ்வளவு பாராட்டவேண்டிய குணம். தன் வெற்றிகளுக்கெல்லாம் துணையாயிருந்த மிருகமே ஆயினும் அந்த நன்றியுணர்வு. இப்ப யாருக்கிருக்கும் இப்படியான நல்ல குணம்" என்றார். பிள்ளைகளின் மனதில் ஆணியடித்தது போல் அலெக்சாண்டரின் குண இயல்புகள் பதிந்தன.

❖❖❖

## 20


அடுத்துவரும் நாட்களில் எல்லோரும் பனிச் சறுக்கலுக்கு சுவிசின் கூர் என்ற மலைப் பிரதேசத்துக்குச் சென்று ஐந்து நாட்கள் தங்கினார்கள். அப்பப்பா தனது மகள் வீட்டுக்குச் சென்றதால் இவர்களுடன் பனிச் சறுக்கலுக்கு செல்லவில்லை. போவதற்கு மிகவும் ஆவலாக இருந்தவருக்கு மகளின் மகளுக்கு கொஞ்சம் உடல்



நலமில்லாததால் மகளுக்கு உதவியாகச் சென்றுவிட்டார். "அடுத்த தடவை போகலாம். இதைவிட உயரமான யுங்ஃபிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனன்தானே. அது போதும். இப்ப இதுதான் முக்கியம்” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஜீவன் கேட்டான், “நான் சின்னப்பிள்ளையாக இருந்தபோது யுங்ஃபிரா போனது. எனக்கு ஞாபகமேயில்லை. ஆக, படங்கள்தான் சொல்லுது நானும் போனதென்று. அந்த ஷெஷல் ஒருக்கா போவமப்பா.” “யுங் ஃப்ராவுக்கு ஷெஷல் தேவையில்லை. அது ரிற்றில்ஸ் போகும்போதுதான். அது வானத்திலை ஒரு செற்றியில் உட்கார்ந்து பறக்கிறது. அது ஒரு திரிலிங்கான அனுபவம். பயப்படுகிறவர்கள் எல்லாம் அங்கு போகமுடியாது” என்றார் அப்பா. ‘யுங்ஃப்ராவ்’ அவ்வளவு பயமில்லை. அதுதானே ரொப் ஒஃவ் யுரோப்” என்று கேட்டான் ஜீவன். “ஓமோம், முந்தி நாங்க போனபோது இல்லாததெல்லாம் இப்ப நிறைய இருக்காம். ஒருமுறை போகலாம். முதல் படிப்பு முடியட்டும். எவ்வளவுபேர் எவ்வளவு கஷ்டப்பட்டு இது செய்திருப்பினம். முழு ஸ்நோக்குள்ளை இவ்வளவு வேலைகள் செய்திருப்பது லேசுப்பட்ட வேலையில்லை.” சிலாகித்துப் பேசினார் அப்பா. “அடுத்தமுறை ரிற்றில்ஸ் போவம் அத்தான்” என்றார் சரா. “எத்தனை மீற்றர் உயரம் அண்ணா?” கேட்டான் யுகி. “4168 மீற்றர் என்று நினைக்கிறன். இப்ப கூர்ரைப் பற்றிச் சொல்லட்டா?” என்றான். “கூர் சுவிசின் பழைய நகர்களில் ஒன்று. அல்ப்ஸ் மலையின் கிழக்குப்பகுதியில் அமைந்திருக்கும் நகரம். கிறௌபுன்டன் கன்ரோனைச் சேர்ந்தது. ஏறக்குறைய 6184 அடி உயரம்.” இவ்வளவு தகவல்களையும் ஜீவன் பயணத்தின்போது எல்லோருக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொன்னான். இவர்கள் இரண்டு குடும்பத்துடனும் சமீபத்தில் சூரிச்சிலிருந்து இலங்கை சென்று திருமணம் செய்து வந்திருக்கும் சதீஷ், தர்ஷனாவும் வந்திருந்தார்கள். தர்ஷனாவுக்கு இந்தக் குளிர் தாங்க முடியாததாக இருந்தது. என்றாலும் குளிருது குளிருது என்று சொல்லிக்கொண்டே பூம்பனிக்குள் ஓடித்திரிந்தாள். எதைப் பார்த்தாலும் ஆச்சரியத்துடன் குழந்தைத்தனமாக் குதுகலிப்பாள். எங்கு திரும்பினும் வெள்ளை வெளேரென்று பூம்பனி கொட்டி வெள்ளைப் பஞ்சுப்பொதிகளாய். அவளால் சந்தோஷத்தை அடக்கவே முடியவில்லை. "இப்படித்தான் கயிலாயமலை இருக்குமாக்கும்." "அதென்ன கயிலாயமலை?" என்று கேட்ட பிள்ளைகளுக்கு கண்களை விரித்து அழகாக புராணக் கதைகளை பயணம் முழுவதும் சொல்லிக்கொண்டே வந்தாள். "அக்கா சொல்லுங்க சொல்லுங்க" என்று பிள்ளைகள் அவளைச் சூழ்ந்து கதை கேட்டபடி வந்தார்கள்.

"அல்ப்ஸ் என்றது லற்றீன் சொல்லா அப்பா?" கேட்டான் ஜீவன். "ஓமோம். லற்றீனிலை அதன் கருத்து வெள்ளை. பனி




சூழ்ந்து வெள்ளையாய் எப்போதும் இருப்பதால் அல்ப்ஸ் என்ற பெயரே அந்த மலைக்கு வந்திட்டுது" என்று அப்பா சொன்னார். சிறுவர்களுடன் சேர்ந்து தாங்களும் ஒரு சிறுவர்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூம்பனியை அள்ளி ஒருவர் மேலொருவர் எறிந்து மிகமிகச் சந்தோஷமாக இருந்தார்கள். குழந்தைகள் தொடங்கி முதியோர் வரை பனிச்சறுக்கலில் ஈடுபட்டு மகிழும் காட்சியே தனிதான். ஒவ்வொருத்தரும் பனியில் சறுக்கும் ஸ்கேற்றிங் பலகையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு இஷ்டத்துக்கு சறுக்கி சறுக்கி விளையாடினார்கள். வெள்ளை வெள்ளையாய் குண்டுக் குழந்தைகள் கனத்த ஆடைகளின் நடுவே சிரித்தபடி சறுக்கி வரும் அழகே அழகுதான். முதிய பெற்றோரைக்கூட பிள்ளைகள் தள்ளுவண்டியில் இருத்தித் தங்களுடன் அழைத்துச் சென்று அவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கினார்கள். திவ்யாவும், தங்கை சரண்யாவும் ஐரோப்பியர் தம் வயது முதிர்ந்த பெற்றோரை அன்புடன் பராமரிப்பதைச் சொல்லிச்சொல்லி மாய்ந்து போனார்கள். எங்கடை நாட்டவர் வீட்டிலை வைத்துப் பார்க்கிறம் என்ற பெயரில் அவர்களை சொற்களால் காயப்படுத்தியும் அன்பாகப் பேசாமலும் தம் பிள்ளைகளை அவர்களிடத்தில் சேராமலும் பண்ணும் கொடுமை பற்றியே கதைத்துக்கொண்டிருந்தார்கள்.



"அரசாங்கம் குடுக்கும் வெல்ஃபெயார் பணத்துக்காகத் தங்களுடன் வைத்துக்கொணடு அந்தப் பணத்தில் தங்கடை பிள்ளைகளுக்கு பொருட்கள், தாங்கள் நகைகள் என்று வாங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தங்கடை பிள்ளைகளையும் அவர்களைக் கொண்டே வளர்த்துப்போட்டு முடியாமல் வரும்போது ஹோமிலை விட்டிட்டுப் போய்க்கூட பார்க்காதுகள்" என்று சரண்யா இலண்டன் வாழ்க்கை பற்றிக் கூறினாள். "வெள்ளைக்காரர் தங்கடை வேலைச்சுமை காரணமாய் முதியோர் தனித்து வீட்டில் இருப்பது நல்லதில்லையென்று ஹோமிலை விட்டாலும் வார விடுமுறைகளில் பெற்றோரைப் போய் பார்த்து அல்லது வீட்டுக்குக் கூட்டிப்போய் அவர்களுடன் நேரத்தைச் செலவழித்து புத்தகங்கள் வாசித்துக்காட்டி ரெஸ்ரோறன்ற் கூட்டிப்போய் எப்பிடித் தங்கள் கடமையைச் செய்யினம். அவையின் பிள்ளைகளும் அதைப்பார்த்து அவர்களைப்போல இருப்பினம். எங்கடை தமிழர். சீ சொல்லவே வெட்கமாயிருக்கு. இந்த நாடுகளுக்கு வந்து இதுகளைப் பார்த்தாலும் உடுப்பு நாகரிகத்தைப் பழகினம் ஒழிய அவங்கடை நல்ல பழக்க வழக்கங்களை பழகமாட்டினம். ஏதோ அவர்களைப்பற்றி அவர்களின் உடுப்புகளை பழிக்க மட்டும் செய்வினம். கடைசியில் அவர்களின் பிள்ளைகளும் அப்பிடி உடுப்புகள்தானே போடினம்." திவ்யாவும் சரண்யாவும் மாறி மாறிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பிள்ளைகளுடன் தர்ஷனா, அவள் கணவன் சதீஷ், திவ்யா, சரண்யா அவர்களின் கணவன்மார்கள் என்று எல்லோருமே பனியில் சறுக்குவதிலும் பனித்துகள்களை கைகளில் துளாவி எடுத்து ஒருவர்மேல் ஒருவர் வீசி மகிழ்ந்து விளையாடுவதுமாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திவ்யா, சரண்யாவும் அவர்களுடன் சேர்ந்து சிறு பிள்ளைகளாக மாறி விளையாடினர். ஒரே சிரிப்பும், சந்தோஷமும் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தன. குழந்தை அக்ஷயா கூட பனியில் தத்தித்தத்தி நடந்து எல்லோரையும் தன்னைத் திரும்பிப் பார்க்கச் செய்தாள். எல்லோரும் அவளை அள்ளி அணைத்து




இரசித்தனர். எல்லாப்பக்கமும் கேபிள்கார்கள் போவதும் வருவதுமாக இருந்தன. தர்ஷனா குழந்தைபோலக் கைதட்டி அங்கே ஒரு கேபிள்கார். இங்கை இந்தப்பக்கம் அங்கை அந்தப்பக்கம் என்று ஆரவாரத்துடன் எப்படி அந்தரத்தில் போகுதென்று ஆச்சரியப்பட்டாள். அடுத்தநாள் எல்லோரும் கேபிள் காரில் பயணித்து படங்கள் எடுத்து ஒருவரையாருவர் பனிக்குள் தள்ளி விழுத்தி விளையாடினர். கேபிள்காரில் போகும்போது தர்ஷனா பட்ட பாடு கொஞ்சநஞ்சமில்லை. ஏறும்போது பயத்தைக் காட்டாமல் இருந்தவள் ஏறியவுடன் கணவன் கையை இறுகப் பிடித்தபடி மேலே மேலே போக முகமெல்லாம் வெளிறி கத்தியபடி "ஐயோ கீழை பார்க்க பயமாயிருக்கு" என்று கண்களை இறுக மூடிக்கொண்டாள். "கண்ணைத் திறந்து என்ஜோய் பண்ணுங்க ஆன்ரி" என்று தீபக் கூறவும் எல்லோரும் "தர்ஷனா கண்ணைத் திறந்து இரசியுங்க. இது பார்க்க கிடைக்காத காட்சி. நாங்க எல்லாரும் இருக்க நீர் மட்டும் விழவா போகிறீர்" என்று கேலி பண்ணினார்கள். "எனக்கு நெஞ்சு இடிக்குது. நான் என்ன செய்ய, எனக்கு இதுகளெல்லாம் பழக்கமா என்ன" என்று அப்பாவியாய்க் கூறியவளை எல்லோருமே கிண்டலடித்தார்கள். "என்னைப் பகிடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாதீங்கோ. பயமாயிருக்கு என்றால் நீங்க பகிடி பண்றீங்க" என்று அழுகிறமாதிரிப் பேசவே எல்லோரும் பேசாது இருந்துவிட்டார்கள்.



"கேபிள் காருக்கு தமிழிலை என்ன சொல் தெரியுமா?" சரண்யா கேட்கவே "எங்களுக்குத் தெரியாதே" பிள்ளைகள் கூற திவ்யா சொன்னாள், "கம்பிவட ஊர்தி. உலகத்திலேயே மிக நீளமான கேபிள்கார் சுவீடனிலை இருக்கு. அங்கை ஒருக்கா போகவேணும். 42 கி. மீற்றர். எவ்வளவு நல்லாயிருக்கும்" பயம் தணிந்த தர்ஷனா சொன்னாள். "ஐயோ நான் வரமாட்டன். இவரையும் விடமாட்டன். இதே இவ்வளவு பயமென்றால் அவ்வளவு தொலை. அப்பா நினைக்கவே நடுங்குது" என்றாள். "இந்தியாவிலை பழநியிலை போறது றோப்கார் என்று சொல்றது என்ன?" கேட்ட சரண்யா "அக்கா நாங்க முந்தி அப்பா அம்மாவையோடை போகேக்கை




அது இல்லை என்ன? அப்ப சின்னப் பிள்ளைகள். அவ்வளவாய் நினைவில்லை" என்றாள். "ஓமோம். நான் நினைக்கிறன் அது 2003, 2004ல் தான் போட்டிருக்க வேணும்" என்றாள் திவ்யா.

"காஸ் பலுன் எப்படிப் பறக்கும்?" அங்கு பறந்த காஸ் பலுன்களைப் பார்த்து ஜீவன் கேட்டான். "ஹைட்ரஜன் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைட்ரஸ் ஆக்சைட் போன்றவை நிரப்பப்பட்டிருக்கும். வெளி கவர் நைலோன் இரப்பர் போன்ற பொருட்களால் உருவாக்கப்படும். சரிதானே சரா" கேட்டார் சுந்தரேஸ். "ஓமோம், முன்பு மிருகங்களின் தோலால் செய்தார்கள்.



பிறகுதான் இந்த நைலோன். இதைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?" என்று கேட்க "ஐயைய்யோ இனி ஆதி எப்ப துலைஞ்சது யார் துலைச்சதென்று கேட்கப்போறா?" என்று யுகி சொல்லவே "ஒருக்கா கேட்டதற்கு சும்மா சும்மா ஆதியைக் கிண்டல் பண்ணுறிங்க" என்று திவ்யா செல்ல மகளுக்கு ஆதரவாகப் பேசினாள். "1783 ல்தான் காஸ் பலுன் முதல் பறந்தது. இதை டிசைன் பண்ணினவர் புரபஸர் ஜக்கியூஸ் சார்ள்ஸ் லெஸ், பிரீரஸ் றொபேட் என்று இரண்டு பேர். பலுனைக் கண்டுபிடித்தவர் யார் சொல்லுங்க பார்க்கலாம்" என்றான் ஜீவன். "நீரே சொல்லும்" என்று எல்லோரும் கூறவே மொன்ட் கொலிபர் என்பவர் என்றான்.

❖❖❖

## 21

ஐந்து நாட்களும் போனதே தெரியாமல் கடந்துபோக திரும்பவும் சூரிச் பயணமானார்கள். வரும்போது வானுக்குள் அரட்டையும் சிரிப்பும் பெரியவர்களும் குழந்தைகளாகி மகிழ்ச்சிக்கடலில் மிதந்தனர். திவ்யா கேட்டாள், "சரண்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இது தெரியேல்லை. உமக்குத் தெரியுமா? சொல்லும். ஏன் பச்சையை எதிர்மறைச் சொற்களுக்குப் பாவிக்கிறது? பச்சைப்பொய், பச்சைத்துரோகம், பச்சைக் கள்ளன், பச்சை பச்சையாய் சொல்றான் மற்றது பச்சைத்தண்ணீர்". "ஓமென்ன நான் யோசித்ததே இல்லை. சரா, "உமக்குத் தெரியுமே" கணவனைக் கேட்டாள். "ஒரு நல்ல கேள்வி அக்கா. நான் யோசிக்கவேயில்லை. இனிக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்பம்" என்றார். வழியில் மதியச் சாப்பாட்டுக்கு இறங்கியவுடன் தர்ஷனா "ஓடிவாங்கோ பசி வந்திடப் பத்தும் பறந்து போம். பந்திக்கு முந்து என்று பழமொழி இருக்கெல்லோ. நாங்க முந்துவம்" என்று பிள்ளைகளுடன் முன்னே விரைந்தாள். திவ்யா சொன்னாள், "தர்ஷனா நான் உம்மட்டை பிள்ளைகளுக்கு நல்ல பழமொழிகள் சொல்லிக் குடுக்கச் சொல்லி சொல்ல வேணுமென்று நினைச்சனான். மறந்திட்டன். ஆனால் இந்தப் பழமொழிக்கு நீர் சொல்றதில்லை அர்த்தம். எங்கடை கன பழமொழிகள் பிழையாய் அர்த்தம் பண்ணி வழக்கத்தில் கொண்டந்திட்டினம். போகும்போது அதைப்பற்றிக் கதைப்பம். இப்ப சாப்பிடுவம் என்ன" என்றாள். திரும்ப வானில் ஏறியவுடனேயே மறக்காமல் தர்ஷனா "சொல்லுங்கோ ஆன்ரி அந்தச் சரியான கருத்தை" என்றாள். "பந்திக்கு முந்து என்றால் சாப்பிட கையை முன்னுக்கு எடு. சண்டைக்கு அம்பு விட கையை பின்னுக்கு விடு. அவ்வளவுதான். சாப்பிடுறதுக்கு முன்னுக்கு போ என்று பிழையாய் அர்த்தப்படுத்தி விட்டார்கள். அதைப்போலத்தான் 'அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவார்.' என்பதன் உண்மையான அர்த்தம் கடவுளின் அடிகள் உதவுவது போல் யாரும் உதவ மாட்டினம் சரியா? பழமொழிகளை இரண்டு மூன்றுதரம் சொல்லிப் பார்த்தாலே உண்மையான அர்த்தம் விளங்கிடும். ஆனால் எனக்கு இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பழகப் பழக பாலும் புளிக்கும்தான் விளங்குதேயில்லை. பழசாகப் பழசாக பாலும் புளித்துவிடும் என்றது சரிபோலத் தெரியுது. ஆனால் சரியோ தெரியேல்லை" என்றாள் திவ்யா. "ஏனக்கா நீங்கதான் தமிழ்ப் பள்ளியிலை படிப்பிக்கிறீங்க. கன ரீச்சேர்ஸிட்டை கேட்கலாமே" என்று சரண்யா கேட்க, "நானும் கன பேரிட்டைக் கேட்டிட்டன். ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்று சொல்லினம். எனக்கு எதுவும் சரியாய்த் தெரியேல்லை 'யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்' என்றது ஆ நெய் பசுவின் நெய் கோடை காலத்திலும் பூ நெய் பூவிலிருந்து எடுக்கும் தேன் குளிர்காலத்திலும் பயன்படுத்த வேண்டும். அதைப்போய் யானை பூனை என்று" திவ்யா சொல்லி முடிக்கவும் "வாவ் அக்கா கலக்குறீங்களே"என்ற சரா "அப்ப என்ரை இந்த டௌற்றுக்கும் உங்களிட்டைப் பதிலிருக்கும் 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்றதற்கும் 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணு' என்றதற்கும் வேறேதோ அர்த்தம் இருக்க வேணுமென்ன அக்கா?" என்றார். "ஓம் சரா, ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன். பழைய காலத்தில் மூலிகை வைத்தியந்தானே. அப்படி ஆயிரக்கணக்கான வேர்களை மருந்தாக்குபவன் என்று அர்த்தம். இப்ப சொல்லிப் பாருங்க" என்றதும், "ஓமக்கா சரியாயிருக்கு" என்றார். "மற்றது ஆயிரம் தரம் போய்ப் பார்த்து நல்லாய் விசாரிச்சுக் கல்யாணம் பண்ணு. போய் பொய் ஆக மாறிட்டுது" என்றாள் திவ்யா. "ஓம். என்ன ஒரு எழுத்து எப்பிடி அர்த்தத்தையே மாத்திட்டுது." திவ்யா சொன்னாள், "இப்படித்தான் பாத்திரமறிந்து பிச்சையிடு என்ற பழமொழியும் பிழையான அர்த்தத்திலை விளங்கிக் கொள்ளினம். உண்மையில் சொல்லுற விஷயத்தை கிரகித்துக் கொள்கிறவர்களிடம் மட்டுந்தான் அதைப்பற்றி பேசவேண்டும். புரியாதவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைச் சொல்லிப் பயனில்லை. ஒருவர் கொடுக்கிற அறிவு என்ற உணவை ஏற்கிற பாத்திரம் பற்றித்தான் இதில் சொல்லப்படுகிறது". "மற்றது ஏன் நாற்பதுக்கு மேல் நாய்க்குணம் என்று சொல்றது?" "நாங்களெல்லாம் நாற்பதை நெருங்கப்போறம். நாய்க் குணத்துக்குப் பயமாயிருக்கு" சரா சொன்னார். "சீ. அது பிழை. உயர்வாய்த்தான் சொல்லியிருக்கு. நாலும் தெரிந்தவர்கள். நா என்றால் நாலும். அவர்கள் அனுபவத்தில் சிறந்தவர்கள்", "சுப்பர் அக்கா. அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாளாம். இது என்னக்கா?" சரண்யா கேட்டாள். "அரசமரம் சுற்றினால் குழந்தை வருமென்று புருசனை விட்டாள். இப்ப விளங்கிறதா?" "கழுதை கெட்டால் குட்டிச்சுவர். இது என்னக்கா?" கேட்டார் சரா. "இது எங்கடை இலக்கண இலக்கியத்தோடு சம்பந்தப்பட்டது. தை என்ற எழுத்து கெட்டிடில் அதாவது இல்லாவிடில் கழு என்பது குட்டிச்சுவர்." விளக்கினாள் திவ்யா. "ஓ அப்படியோ? நான் இதென்னடா கழுதைக்கும் சுவருக்கும் என்ன சம்பந்தம் என்று நினைத்தன். 'கொலையும் செய்வாள் பத்தினி.' இதென்னக்கா? சரண்யா கேட்க, "குடும்பக் கஷ்டங்கள் வறுமையைக் கொலை செய்வாள் என்றதுதான் அர்த்தம்" என்று மாமா சொன்னார். "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. இதன் அர்த்தம் சொல்லுங்க பார்க்கலாம், சுந்தரேசன் கேட்டார்." பார்த்து ட்ரைவ் பண்ணுங்க. கதையில் கவனம் போகாமல்" சொன்னாள் திவ்யா. "ஓகே. இதைச் சொல்லுங்க என்றார். "இது ஒருநாள் உங்கடை அப்பாதான் சொன்னவர். எத்தனை சூடு மிதித்தது என்று பார்த்துத்தான் மாடு வாங்குவார்களாம். அதனுடைய அனுபவம்தான் இந்தச் சூடு." கூறிக்கொண்டே "இனி நீர் அல்லது சரா ட்ரைவ் பண்ணுங்க. எனக்கு கண்ணைச் சுழட்டுது" என்று இறங்கினார். "இதைப் பற்றி கதைச்சால் எனக்கு நிறைய டௌற் இருக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகள் சின்னாக்களுக்கு அலுப்படிக்க அவை ஏதோ விளையாடினம். அவைக்கு இன்ரஸ்ற் உள்ள விஷயம் கதைப்பம். நாங்க தனியப் பழமொழி ஆராய்ச்சி செய்வம்" என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

"ஏன் அங்கிள் கப்பல்,பிளேனில் போகும்போது வாந்தி வாற போல இருக்கிறது?" கேட்ட தர்ஷனாவுக்கு சரா சொன்னார். "பிள்ளைகள் நீங்களும் கேளுங்கோ. எங்கடை காதுகளிலை ஒருவகைக் குழாய்கள் இருக்கு. அவை நாங்க நடக்கும்போது நம்மை விழாமல் பார்த்துக் கொள்கின்றன. ஒருவேளை கொஞ்சம் சாய்ந்து விட்டாலும் உடனே அவை அந்த விஷயத்தை மூளைக்கு அறிவிக்கும். அது தசைகளுக்கு சொல்ல, தசைகள் எம்மை விழவிடாமல் தடுத்துவிடும். கப்பல் பிளேனில் உட்கார்ந்து இருக்கும்போது அவை சாயும்போது நாங்களும் சாய்வந்தானே. ஆனாலும் அந்தக் குழாய்கள் நாம் சாய்ந்ததும் மூளைக்கு அறிவிக்க. மூளை அப்படி விழக்கூடியதாக இல்லையே என்று திகைத்து பக்கத்திலுள்ள உறுப்புகளை எழுப்பிவிடும். அதனால் பித்தக்குடலும் வயிறும் கோளாறு அடைந்துவிடுகிறது. அதனாலேயே தலைசுற்றலும் வாந்தி வாற உணர்வும் ஏற்படுகிறது". "அப்பாடா ஒரு சின்னதாய் சாய்கிறதாலை உடம்புக்குள்ளை எவ்வளவு நடக்கிறது?" என்று ஜீவனும் தர்ஷனாவும் ஒருசேரச் சொன்னார்கள். "அதேதான் சிறுவர்கள் வேகமாகச் சுற்றும்போது காதுகளின் பக்கத்தில் இருக்கும் உறுப்பு கோளாறு அடைகிறது. அதனால் தலை சுழல்கிறது. அதன் காரணமாக மூளையானது கண்களைச் சரியாக நடத்த முடியாமல் போக கண்களும் சுழன்று சுற்றிவர இருக்கும் பொருட்களும் சுழல்வது போலத் தோன்றும். அந்த நேரத்தில் எதிர்த்திசையில் சுற்றினால் அந்த உறுப்பின் கோளாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி தலை சுழல்வதும் நின்றுவிடும்" என்று சரா மேலும் விளக்கினார். "ஏன் அங்கிள் பிளேனுகளுக்கு வெள்ளை நிறம் அடிக்கிறது. கலர்கலராய் இருந்தால் வடிவாயிருக்குமெல்லோ" என்றாள் தர்ஷனா. "எனக்குத் தெரியுமே வேறை நிறங்களென்றால் கெதியில் மங்கிவிடும். அதோடை வெள்ளை சூட்டை உள்வாங்காது. அப்ப பிளேன் சூடாகாது. சரிதானே சித்தப்பா" என்றான் ஜீவன்.



"நீர் நல்ல கெட்டிக்காரன்" என்று சரா பாராட்டியதுடன் ஒரு பிளேன் செய்ய 40 இலட்சத்திலையிருந்து 1 மில்லியன் வரை செலவாகும்" என்றும் சொன்னார். "ஏன் சித்தப்பா என்ன மெட்டலிலை பிளேன் செய்கிறது" என்று கேட்கவும் "டியூரலிமின் என்ற மெற்றல்" என்றார். ரம்யா சொன்னாள், "உங்களுக்கெல்லாம் ரைட் சகோதரர்தான் விமானத்தைக் கண்டுபிடிச்சது என்றுதான் தெரியும். ஆனால் இராமரின் கதையில் இராவணன் சீதையைக் கடத்திச் சென்றது விமானத்தில் என்று சொல்கிறதே". "சங்க இலக்கியப் பாட்டு ஒன்றில் 'புலவன் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வானஊர்தி' என்று வருகிறது. அப்ப சங்ககாலத்தில் பிளேன் இருந்தது என்றுதானே அர்த்தம்" என்றாள். "அம்மா நான் நாளைக்கு இதை மாஸ்ரறிட்டை சொல்லவேணும். சொல்லலாந்தானே"என்றாள் சிந்து. "ஓம் சொல்லுங்கோ. ஆனா அவை நம்புவினமோ தெரியேல்லை" என்றாள் திவ்யா. "ஏன் 12000 வருடங்களுக்கு முதல் மகாபாரதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் பற்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்கு. ஏன் கனக்க குந்திதேவி கர்ணனைப் பெற்றது இப்ப சொல்ற ரெஸ்ற்ரியூப் பேபி முறையில்தானே" சொன்னார் சரா.

"ஏன் அங்கிள் மயங்கி விழுகிறவர்களுக்கு முகத்தில் தண்ணீர் தெளிக்கிறது?" என்று தர்ஷனா கேட்கவே, "மூர்ச்சையாவதற்குக் காரணமே மூளைக்குப் போதுமான இரத்தம் போகாததுதான். இதயம் பலவீனமாய் இருந்தாலும் தோலின் அருகிலுள்ள இரத்தக் குழாய்கள் விரிந்துபோய் இருந்தாலும் போதுமான இரத்தம் மூளைக்கு செல்வதில்லை. ஆனால் முகத்தில் தண்ணீர் தெளித்தவுடன் முகத்திலுள்ள நரம்புகள் அந்த விஷயத்தை மூளைக்கு அறிவிக்க மூளை இதயத்தை தட்டியெழுப்பும். இரத்தக்குழாய்களும் சுருங்கும். அதனால் மூளைக்குப் போதுமான இரத்தம் போக மயக்கம் தெளிஞ்சிடும்" என்றார் சரா. ஜீவனைத் தவிர சின்னப் பிள்ளைகள் எல்லோருமே நித்திரையாகிவிட்ட்டார்கள். யுகியும் தீபக்கும் இலேசாக குறட்டை விட்டு உறங்குவதைப் பார்த்த ஜீவன் ஏன் குறட்டை வாறது?"என்று கேட்டான். "அநேகமாக வயிறு பெருத்தவர்களுக்கும் உடல் பருமனானவர்களுக்கும் குறட்டை வரும். நெஞ்சிலை சளி இருந்தாலும் வரும். குரல்வளையின் அதிர்வலையாலையும் வரும். அநேகமாக மூச்சுப்பாதை அடைத்துக் கொள்வதால்தான் குறட்டை வாறது" என்று சரா சொல்லவே திவ்யா சொன்னாள், "குரல்வளை என்றால் ஸ்நாஷன்" என்று.

"ஓகே ஓகே" என்றான் ஜீவன்.

சரா கேட்டார், "ஜீவன் நீர் றொபின் என்ற பறவையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீரா? ஸ்பிரிங் காலம் வருவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிவிக்கும் இந்தப் பறவையின் குரல் இப்ப இல்லை. ரேச்சல் கார்சன் என்ற பெண் விஞ்ஞானி றொபின்சனின் குரலைக் கேட்காமல் அதனைத் தேடிய போது தான் தெரிந்தது டிடிரி என்ற செயற்கைப் பூச்சிகொல்லி இந்தப் பறவையின் முட்டையின் மீது படிந்து முட்டைகளை உடைத்து விட்டதனால் அப்பறவையின் இனம் அழிக்கப்பட்டுவிட்டது என்று. சைலன்ட் ஸ்பிரிங் என்ற புத்தகம் **1962** இல் வெளியானபோதுதான் இவ்வுண்மை உலகிற்குத் தெரிந்து உலகமே அதிர்ந்தது. சத்தமில்லாமல் ஒரு இனப்படுகொலை எங்கடை காலத்திலை நடந்து முடிந்திருக்கிறது. இந்த டிடிரியைக் கண்டுபிடித்தவர் உங்கடை நாட்டைச் சேர்ந்த அதாவது சுவிசைச் சேர்ந்த பால் ஹெர்மேன் முல்லர். அவருக்கு **1948**இல் நோபல்பரிசு கூடக் குடுத்திருக்கினம். பயிர் விளைச்சலைக் கூட்டிய இந்த டிடிரி என்ற பூச்சிகொல்லி மருந்து பறவைகளை அழிக்கிறது என்று நிரூபிக்கப்பட்ட பிறகு **1972**இல் தடை செய்யப்பட்டது. ஆனால் இந்த **24** வருடங்களில் எத்தனையோ பறவை இனம் இல்லாமல் அழிக்கப் பட்டுவிட்டது. இப்ப றொபின் என்று பறவை இருக்கிறது. ஆனால் ஆதியிலிருந்த றொபின் இல்லை.


பயிர் விளைச்சலைக் கூட்டுகிறோம் என்ற பெயரில் மற்ற உயிரினங்களை உலகிலிருந்தே எடுத்திருக்கிறது இந்த மனித இனம். இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரினத்துக்கும் பூமியில் வாழ உரிமை இருக்குதுதானே. எதையும் முற்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்க எங்களுக்கு யார் உரிமை தந்தது? விளங்குதா ஜீவன்? அடுத்த சந்ததி நீங்க இதுகளை அறிந்திருக்கவேணும்." "நல்லா விளங்குது சித்தப்பா. பழைய கதைகளிலை இந்த றொபின் பறவைகள் வருமில்லையா. நான் வாசிச்சிருக்கிறன். அவை அழிஞ்சு அதைப்போல ஒரு இனம் இருக்குது என்று எனக்கு இப்பதான் தெரியுது. கவலையாய் இருக்கு சித்தப்பா. நான் இதைப்பற்றி எங்கடை மாஸ்ரறிட்டை கதைச்சு எல்லாருக்கும் விளங்கப்படுத்தச் செய்யவேணும். சரியாய் யோசிக்காமல் அந்த சுவிஸ் விஞ்ஞானிக்கு நோபல்பரிசு கொடுத்தது பிழைதானே. இப்படியேதும் என்றால் அந்த நோபல் பரிசை திருப்பி எடுப்பார்களா?" என்று கேட்டான். "இல்லை. கொடுத்தது கொடுத்ததுதான். ஆனால் பூச்சிகளைக் கொன்று பயிர் விளைச்சலைக் கூட்டியது உண்மை. எது செய்தாலும் மற்ற எந்த உயிருக்கும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது. அதுதான் மனிதநேயம்" என்றார் சரா. மனிதநேயம் என்ற சொல் புரியாமல் அப்பாவைத் திரும்பிப்பார்த்த ஜீவனுக்கு "மென்ஞ்கைற் ஆங்கிலத்தில் ஹியூமனிற்றி" என்றார் அப்பா. சரா "இது ஜீவனுக்கு எவ்வளவு விளங்கினதென்று தெரியேல்லை. நீங்க டொய்ச்சில் விளங்கப்படுத்துங்கோ அத்தான்" என்று சொன்னார். "இல்லை. எங்கடை பிள்ளைகள் தமிழிலும் கெட்டிக்காரர்கள். நல்லாய் விளங்கும். என்ன சில வேர்ட்ஸ் டொய்ச்சிலை சொல்ல வேணும். நாங்க இங்கிலீஷ் சொற்கள் கலந்து கதைப்பதுபோல இவை டொய்ச் சொற்கள் கலந்து கதைப்பினம். அவ்வளவுதான்" என்றார் அப்பா. "மனிதநேயத்திற்கு வள்ளுவர் ஒரு திருக்குறள் எழுதியிருக்கிறார். அதைப்போல மனிதநேயத்தை விளக்க யாராலும் முடியாது." "அது என்ன அத்தான்?" "என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்". "வள்ளுவரின் மனிதநேயம் எப்படி விளங்குகிறது பாருங்கோ. எலும்பில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு புழு வெயிலில் துடிப்பதைப் பார்த்து துடிதுடித்த வள்ளுவர் அதைக் கையில் எடுத்து அந்தக் கரையில் விட்டுவிட்டு அறத்தோடு தொடர்புபடுத்தி ஒரு குறள் எழுதியிருக்கிறார். காயும் என்று சொல்லாமல் காயுமே என்று சொன்னதிலிருந்து அவரின் நேயம் விளங்குகிறது." சுந்தரேஸ் விளக்கினார். சரா "அத்தான் நோர்வே ஒஸ்லோவில் ஆலா யுனிவசிற்றியில் மனிதநேயத்தை வளர்ப்பதற்காக கோடைப் பள்ளியில் இரண்டு மாதங்களுக்கு அறுபது நாடுகளிலிருந்து மாணவர்களைத் தெரிந்து வகுப்புக்களும் கலந்துரையாடல்களும் நடக்கும். ஜீவன் யுனிவசிற்றிக்கு போனபிறகு கட்டாயம் ஒருமுறை அதற்கு அனுப்புங்கோ. நான் ஒருமுறை போனனான். உலகின் எத்தனையோ நாட்டு மனிதர்களுடைய பிரச்சனைகள் மனோபாவங்கள் என்று நிறையக் கற்றுக்கொள்ளலாம்" என்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எவ்வளவு முக்கியம் என்றது கனபேருக்கு விளங்கேல்லை. இலண்டனை விட இங்கை பரவாயில்லை. எல்லாப் பிள்ளைகளும் வடிவாய்க் கதைக்கினம். தாய்மொழி இல்லாட்டால் ஒரு மனிதனுக்கு அடையாளமேயில்லை. தாய்மொழியில் கல்வியைப் பெறும்போது கற்பனைத்திறனும் படைப்பாற்றலும் பெருகுமென்று சுவாமி விவேகானந்தர் மகாத்மாகாந்தி ஏன் பாரதியார் வரை சொல்லியிருக்கினம். அப்துல்கலாம் கூட ஆரம்பக்கல்வி படித்தது தமிழில்தானே. அமெரிக்கா, ஜேர்மனி பிரான்ஸ், இஸ்ரேல், ஜப்பான் போன்ற நாடுகளில் அறிவியல் கண்டுபிடிப்புகள் அதிகம் இருக்கக் காரணம் தாய்மொழிக் கல்விதானே" என்றார் சரா. "ஓம் அதுதான் இங்கை பள்ளிக்கூடங்களிலேயே சொல்லினம்



தாய்மொழி தெரிந்த பிள்ளை எல்லாவற்றையும் இலகுவில் கிரகிக்கும். அதோடை எத்தனை மொழிகளையும் கற்கும் ஆற்றல் வருமென்று. சுவிஸ் அரசாங்கம் தமிழ் கற்பிக்க தங்கள் பாடசாலைகளைக் கொடுத்து எல்லா உதவிகளும் செய்து தமிழைப் படிக்க ஊக்குவிக்குது. இதுக்கு மேலை என்ன செய்யலாம்" என்று சுந்தரேஸ் சொன்னார். சரண்யா சொன்னாள், "தமிழருவி மணியன் சொல்றார், இப்ப பிள்ளைகள் ருமாரோ ஈவினிங் சிக்ஸ் ஒ குளொக் ஃபங்ஷனிலை மீற் பண்ணுவம் என்று பேசிக் கன்னித் தமிழைக் கற்பழிக்கிறார்கள் என்று. மானிட சமுத்திரத்தில் நாம் அடையாளம் இழந்துவிடாமல் நமக்கென்று தனியாக ஒரு முகத்தையும் முகவரியையும் தருவதுதான் நாம் பேசும் நல்ல தமிழ் என்றும் நிலைக்கும் என்று அவர் சொல்வதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எங்கடை ஒவ்வொரு தமிழனும் உணரவேணும்." "தமிழ்நாட்டிலேயே இந்தக் கதியென்றால் புலம்பெயர் நாடுகள் பரவாயில்லை போலிருக்கு" என்றாள் சரண்யா. உடனே ஜீவன் "ஓம் சித்தி எங்கடை தமிழ் ஆசிரியைகூடச் சொல்லுவா "தமிழ்மொழியைப் புறம் தள்ளினால் நம்மினத்தின் ஒருமைப்பாடும், பண்பாடும், நாகரிகமும் நிச்சயம் நலிவுறும்" என்று. "அட ஜீவனின் அழகான தமிழ் கேட்கவே ஆசையாய் இருக்கு. லண்டனிலை இந்தத் தமிழ் மிஸ்ஸிங். மகாத்மாகாந்தியே தான் வாழ்க்கையில் கவலைப்படுகிற விஷயம் தான் தமிழ் கற்காததுதான் என்றாராம். இப்படியே டொய்ச்சோடை தமிழையும் எவ்வளவு படிக்க முடியுமோ படிச்சிடடா" என்றாள் சரண்யா. "ஏன் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் கூட அடுத்து ஒரு பிறவி உண்டு என்றால் நான் தமிழனாய் பிறக்க வேண்டும் என்று சொன்னாராமே" என்றார் சுந்தரேஸ். "நான் தமிழில் கவிதை கூட எழுதுவன் சித்தி" என்று ஜீவன் கூற, எல்லோருமே "டே நீ பெரியாளாய் இருக்கிறாயடா. எங்களுக்கு'ப் பெருமையாயிருக்கு. வீட்டை போனவுடன் காட்டுமென்ன" என்றார்கள்.

"தமிழில் மட்டுமில்லை. டொய்ச்சிலும் எழுதியிருக்கிறன் என்று ஜீவன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனார்கள். தமிழில் எனக்கு கவிதை ஆர்வமூட்டியவர் சதீஷ் அங்கிள்தான். அவர் நல்லாய் எழுதுவார்" என்று கூறவும் "அட இவ்வளவு நேரமும் வாயே திறக்கவில்லையே. ஏதோ ஒன்றும் தெரியாதவர் மாதிரி இருந்திட்டாரே" என்று சரா சொல்லவும் வெட்கத்தோடு சிரித்தான் சதீஷ். சுந்தரேஸ் சொன்னார், "அவன் சரியான ஷைரைப். என்னோடை கூட கதைக்க மாட்டான். ஜீவன்தான் அவன்ரை கூட்டாளி. திவ்யாவோடை தான் அக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா என்று பழகுவான். என்ன சதீஷ் உம்மடை கவிதைகளை எடுத்துவிட வேண்டியதுதானே" என்றார். "இந்த தர்ஷனாவை சின்னனிலையிருந்து பிடிக்குமாம். ஆனால் அவளுக்குச் சொல்லவே இல்லை. பிறகு வீட்டில் கல்யாணம் பேசும்போதுதான் என்னட்டை சொன்னான் தர்ஷனாவை மனசிலை வைச்சிருக்கிற விஷயத்தை. நான் பிறகு சதீஷின் அம்மாட்டை சொல்லிப் பெரிய கதை. இதிலை வேடிக்கை என்னவென்றால் அவளுக்கு இவனை ஞாபகமே இல்லையாம். எப்பிடி இவையின் காதல் கதை. எவ்வளவு காதல் கவிதைகள் தர்ஷனா பற்றி" என்று திவ்யா சொல்லவும் "போதுமக்கா என்ரை கதை"என்று வெட்கினான்.

சரண்யா சொன்னாள், "லண்டனிலை எல்லோரும் கண்டவுடன் ஹாய் அல்லது ஹலோ தான். இங்கை எல்லோரும் வணக்கம் என்று சொல்லினம். ஆனால் அவைக்கு வணக்கத்தின்ரை பொருள் விளங்கேல்லை என்று நினைக்கிறன். போகிறபோக்கிலை சொல்லினம். "ஓமோம் என்ற திவ்யாவுக்கு "எங்களுக்குத் தெரியாதே நீங்க ஒருநாளும் சொல்லேலையே" என்றனர் பிள்ளைகள்." ஓமென்ன. வண் அக் அம் தான் வணக்கம். அக் என்றால் புருவ மத்தியிலிருக்கும் உயிர். அந்த இடத்தைப் பார்த்துச் சொல்வதுதான் வணக்கம். அப்பிடி வணக்கம் சொல்லும்போது இரண்டு கைவிரல் நுனிகளும் ஒன்றையொன்று தொட்டு அழுத்த வேணும். அப்போது பிரஷர் புள்ளிகள் செயல்படத் தொடங்கும். நீங்கள் வணக்கம் சொன்னவரின் உருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மூளையில் பதியும். அதோடை இரண்டு கைகளும் நெஞ்சுக்கு நேரை இருக்க வேணும். அப்படி அக் என்ற புருவ மத்தியை செயல்படுத்தத்தான் அந்த இடத்தில் பொட்டு வைத்து அழுத்துறது. சரியா" என்ற திவ்யாவுக்கு ''அப்ப ஏன் ஆம்பிளையள் பொட்டு வைக்கிறேல்லை. எங்களுக்கு அந்த இடம் அக்ரிவ் ஆகத் தேவை இல்லையோ" என்று தீபக் கேட்டான். "இல்லைடா முந்தி ஆம்பிளையள் வைச்சவை. பிறகு அவை அதை விட்டிட்டினம். பொம்பிளையள் விடேல்லை. அவ்வளவுதான். அதுதான் பொம்பிளைப் பிள்ளையள் கெட்டிக்காரராய் இருக்கினம் உங்களைவிட" என்றாள் திவ்யா. யுகி "நான் இனிமேல் பொட்டு வைக்கப்போறன். என்ன அண்ணா தீபக் நாங்க தொடங்குவமே. ஆம்பிளையள் தோடு போடினம். பொட்டு வைத்தால் என்ன? என்றான்." "ஏன் அன்ரி பொம்பிளையள் காப்பு போடுறதும் பெரியவர்களின் கால்களில் விழுந்து கும்பிடுறதும்?" என்று கேட்டாள் தர்ஷனா. "பொம்பிளையளுக்கு கெதியிலை எனேர்ஜி லொஸ் ஏற்படும். மணிக்கட்டில் சக்தியைக் கூட்டுற புள்ளிகள் இருக்கு. கையிலை காப்புகள் போடுறதாலை காப்புகள் அந்த இடத்தை அழுத்த இழந்த சக்தி மீண்டும் கிடைக்கும். மெட்டி போடுறதுபற்றி தெரியுமா தர்ஷனா" கேட்டாள் திவ்யா. "அது தெரியும். இவர் சொன்னவர்" என்று வெட்கத்துடன் சொல்லவும் "எங்களுக்குத் தெரியாது. சொல்லுங்க சொல்லுங்க" என்று எல்லாப் பிள்ளைகளும் கத்தினார்கள். "அதுவா? அது பொம்பிளையள் குழந்தை பெறுவாங்கதானே. அந்தக் குழந்தை வயிற்றுக்குள்ளை இருக்க ஒரு பை வேணுந்தானே. அந்தப் பைக்கும் மெட்டி போடுற விரலுக்கும் ஒரு நரம்பு இணைக்கப்பட்டிருக்கும். வெள்ளி மெட்டி அழுத்திறதாலை அந்த நரம்பு நன்றாக வேலை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பை குழந்தையைப் பத்திரமாக வைத்திருக்கும்" என்று திவ்யா அவர்களுக்கேற்ற மாதிரிக் கூறினாள். சரண்யா சொன்னாள் "அதுதான் கல்யாணம் செய்தவை மட்டும் போடுறது", "விழுந்து கும்பிடுறது..." என்று தர்ஷனா தொடங்க "அது ஏனென்றால் கைகள் எப்பவும் சக்தியை எடுக்கும். கால்கள் சக்தியைக் கொடுக்கும். பெரியவர்களின் கால்களில் தலைபடுமாறு வணங்கினால் கூடுதல் சக்தி அந்தக் கைகளுக்குக் கிடைக்கும். பணிவானவர்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுகிறார்கள்தானே" என்று சரண்யா கூறி முடித்தாள்.

சுந்தரேஸ் சொன்னார், ''திவ்யா வணக்கத்திலை ஒரு முக்கியமான விஷயத்தை விட்டிட்டீர். வணக்கம் சொல்லும்போது வணக்கம் சொன்னவரின் எனேர்ஜி அவரிடமே இருக்கும். கை குலுக்கும்போது இரண்டு பேருடைய எனேர்ஜியும் ஒருத்தருக்கொருத்தர் போயிடும். நல்லதாய் இருந்தால் பரவாயில்லை. ஒருவருக்கு எதிர்மறை எண்ணம் அதாவது நெகட்டிவ் எனேர்ஜி இருந்தால் அது மற்றவருக்குப் போய் அவருடைய பொசிற்றிவ் எனேர்ஜியை போகப் பண்ணிடும். அதற்காகத்தான் தமிழர் கைகளால் தொடாமல் வணக்கம் சொல்றது." "வாவ் எவ்வளவு விஷயம் முந்தியே அவர்களுக்கு தெரிந்திருக்கிறது." ஜீவன் அதிசயித்தான்.

சரண்யா அக்காவிடம் சொன்னாள், "அக்கா கொஞ்சம் ஒற்றுமை பற்றி நல்லாய் புரியும்படி சொல்லுங்கக்கா. எங்களைப்போல அவர்களும் ஒற்றுமையாய் இருக்க வேண்டாமோ". ''நல்லது. ஞாபகப்படுத்தினது" கூறிவிட்டு "பிள்ளைகள் எல்லாரும் ஓடிவாங்கோ. ஒரு கதை சொல்லப்போறன். சொல்லிமுடிக்க முதல் எல்லோரும் ஓடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள். எல்லாரும் நான் என்று சொல்லிப் பாருங்கோ" என்றாள் திவ்யா. "உங்கடை சொண்டு முட்டுதோ" என்று கேட்கவும் இல்லையே என்றார்கள். "நாம் சொல்லிப் பாருங்கோ." "ம். இது முட்டுது". "அப்ப என்ன தெரியுது சொல்லுங்கோ பார்க்கலாம்". "நாம் என்று எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் எதையும் சாதிக்கலாம். ஒருத்தருக் கொருத்தர் உதவியாய் ஒருத்தர் கஷ்டத்தில் ஒருவர் உதவி வாழவேணும் எப்பவுமே. அதுவும் நீங்க ஐந்து பேருமே ஒரே அண்ணன் தங்கைகள்தான். நாங்க எப்படி ஒற்றுமையாக இருக்கிறமோ அப்படித்தான் நீங்களும் இருக்கவேண்டும். ஒற்றுமைக்கு ஒரு கதை சொல்லட்டா" கேட்ட திவ்யா கூறத் தொடங்கினாள்.

"ஒருநாள் வானத்தில் எல்லா நிறங்களும் தாங்கள்தான் பெரியவன் என்று வாக்குவாதப்பட்டனவாம். மரங்களெல்லாம் பச்சையாக இருக்கும். அப்போது நான்தான் பெரியவன் என்றது பச்சை. வானம் கடல் எல்லாமே நீலம். நான்தான் பெரியவன் என்றது நீலம். உலக உயிரினங்கள் எல்லாவற்றினதும் இரத்தம் சிவப்பு. ஆகவே நான்தான் சிறப்பானவன் என்றது சிவப்பு. சூரியன் மஞ்சள் வெயிலைத் தருவான். சூரியன் இல்லாவிடில் உலகமேயில்லை. ஆகவே நான்தான் உயர்வானவன் என்றது மஞ்சள். இப்படி எல்லா நிறங்களும் சண்டைபோட வானத்தில் பயங்கர இடிச்சத்தம். அதைக்கேட்டுப் பயந்துபோன வண்ணங்களெல்லாம் அத்தனையும் ஓடிப்போய் ஒன்றாகச்சேர வானவில் தோன்றியது. அப்போது மழை சொன்னது, நீங்க தனித்தனியாக இருப்பதைவிட சேர்ந்திருக்கும்போது எவ்வளவு அழகு. உலகமே உங்களைக் கொண்டாடுகிறதே இப்போதிருக்கும் அற்புதமான அழகு பார்த்து. புரிகிறதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையின் சிறப்பு"? "நல்ல கதை அக்கா" சரண்யா சொல்ல, "சுவாமி சுகபோதானந்தா சொன்ன கதை இது" என்றாள்.

"ஒற்றுமைக்கு இன்னொரு உதாரணம் சொல்லலாம். பறவைகளைப் பார்த்தீங்களென்றால் கண்டம் தாண்டி கண்டம் ஓய்வெடுக்காமல் ஒரே மூச்சாய் எப்படிப் பறக்க முடிகிறது? இதுக்குக் காரணம் வானத்தில் ய வடிவில் பறவைகள் ஒரே கூட்டமாக சிறகுகளை விரித்துப் படபடத்துப் பறக்கும்போது பக்கத்தில் பறக்கும் பறவைகளுக்கு சக்தி கிடைக்க உதவுமாம். இப்படிப் பறப்பதால் ஒவ்வொரு பறவைக்கும் பலமடங்கு சக்தி கிடைக்கிறது". "அப்படி சக்தி கிடைக்கிறதென்று மனிதர்களுக்கு எப்படித்" தெரிந்ததென்று சிந்து கேட்டாள். "நான் சொல்லேலையப்பா. பறவையியல் வல்லுநர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள்." சொன்னாள் திவ்யா. சிறிய



பறவைகளுக்கே இவ்வளவு அறிவென்றால் மனிதனுக்கு எவ்வளவு இருக்க வேண்டும். எல்லோரும் ஓடிவந்து ஒருவர் கை மேல் ஒருவர் கை வைத்து எல்லோரும் ஒற்றுமையாக அன்பாக இருப்போம் என்று சத்தியம் எடுத்தார்கள். சரா, "ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே வேற்றுமையை வளர்ப்பதனாலே விளையும் தீமையே" என்று பழைய சினிமாப் பாடலைப்பாடி கலகலப்பூட்டினார்.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக ஜீவனின் கவிதைப் புத்தகத்தை வாங்கி வாசித்தாள் சரண்யா. பலவிதமான விடயங்கள் அவன் கவிதைகளில் இடம் பெற்றிருந்தன. பொலித்தீன் பேய் என்ற அவனது கவிதையை வாசித்து இந்த வயதில் எவ்வளவு சமூக அக்கறை இவனுக்கு. பெரிய ஆளாய் வருவானக்கா என்று சிலாகித்துக் கூறிவிட்டு எல்லோருக்கும் வாசித்துக் காட்டினாள் ஒரு கவிதையை.

### சத்தம் போடாமல்

சத்தம் போடாமல்
பூவொன்று இதழ் விரிக்க
சத்தம் போட்டங்கே
வண்டொன்று மதுகுடிக்க
பூவே எப்படி நீ மலர்கின்றாய்
வானம் செய்யும் மாயமா
கதிரவன் செய்யும் மாயமா
காற்று செய்யும் மாயமா
அறிவியல் கண்டுபிடித்துவிடுமா
பூஎப்படி மலர்வ தென்று.

"நாங்க யாருமே சிந்திக்காத ஒரு நுட்பமான விடயத்தை எப்படி எழுதியிருக்கின்றான். சொல்லவேலையில்லை ஜீவனின் கெட்டித்தனத்துக்கு." சரண்யா ஜீவனைக் கட்டிக்கொஞ்சிப் பாராட்டினாள். எல்லோருமே ஜீவனைப் பாராட்டினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இன்னும் எழுதடா. எழுதினதெல்லாவற்றையுமே ஏன் தொகுத்து வெளியிடக்கூடாது. அடுத்த விடுமுறைக்கு வெளியிடுவம்”என்று ஊக்குவித்தாள். ஜீவனைப் பாராட்டியதுடன் நிற்காமல் “ஏன் சிந்து நீங்களும் எழுதுவீங்களாடா?'' என்று கேட்டாள். “கொஞ்சம் எழுதுவன் சித்தி. ஆனால் யாருக்கும் வாசிக்க குடுக்கிறேல்லை. நீங்களும் நல்லாயில்லாட்டி சிரிக்கக்கூடாது. பகிடி பண்ணாதேங்கோ சித்தி'' என்று கூறியபடியே தன் ஒரு கவிதையைக் காட்டினாள். வாசித்த சரண்யா திகைத்துவிட்டாள். ஒருவித தாய்மைத் தவிப்புடன் அந்தக் குழந்தை எழுதியிருப்பது மனதை என்னவோ செய்தது.

1. ஏன் அழுகின்றாய் மேகமே
மேகமே யாரடித்து நீ அழுகின்றாய்
வானத்தாய் அடித்தாளோ
ஆதவனப்பா அடித்தாரோ
குமுறிக்குமுறி அழுகின்றாய்
சொல்லிவிட்டு அழுதிடுவாய்
மேகமே யாரடித்து நீ அழுகின்றாய்.

2. அதிரவைக்கும் இடியண்ணா அடித்தாரோ
மினுமினுக்கி பயப்படுத்தும்
மின்னல் அண்ணா அடித்தானோ
குமுறிக்குமுறி அழுகின்றாய்
சொல்லிவிட்டு அழுதிடுவாய்
மேகமே யாரடித்து நீ அழுகின்றாய்.

3. நட்சத்திரப்பூக்களையெல்லாம்
நித்திரை கொள்ள அனுப்பிவிட்டு
தனித்து நின்று நீயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுறிக் குமுறி அழுகின்றாய்
மேகமே யாரடித்து நீ அழுகின்றாய்.

4. நீயழும் கண்ணீர் கொஞ்சமில்லை
துடைத்திடவும் என்னால் முடியவில்லை
அடித்தவரைச் சொல்லிவிட்டால் நான்
உனை அடித்தவரை அடித்திடுவேன்
சொல்லிவிட்டு அழுதிடுவாய்
மேகமே யாரடித்து நீ அழுகின்றாய்.

5. காற்றுத் தம்பி வந்து உந்தன்
கண்ணீர் துடைக்க மாட்டானோ
வெயில் தம்பி வந்துவிட்டால்
குமுறிக் குமுறி அழமாட்டாய்
சூடுபட்டு உன் கண்ணீர் வற்றி
மறைந்திடுமே அழுகையெல்லாம்.

திவ்யாவிடம் சென்ற சரண்யா, "அக்கா நீங்க நல்ல வடிவாய் பிள்ளைகளை வளர்த்திட்டீங்க. அறிவு மட்டும் முக்கியமில்லை. அன்பு, மனிதநேயம் என்றதைப் பிள்ளைகளிடத்தில் வளர்த்திட்டீங்கள். இனி அவர்களைப்பற்றிக் கவலைப்படவே தேவையில்லை" என்று கூறியவண்ணம் சிந்துவின் கவிதையைக் காட்டினாள். திவ்யாவுக்கு ஒரே அதிசயம் சிந்து கவிதை எழுதுவது. "ஜீவன் எல்லாம் காட்டுவான். சிந்து எழுதுவா என்றே எங்களுக்குத் தெரியாதே. பிள்ளைகள் எங்களிடம் ஒளிவு மறைவில்லாமல் இருப்பார்களென்று பெருமைப்பட்டிருந்தன். இப்ப கவலையாக இருக்கு. இதை நான் அறியாமலே இருந்திருக்கிறன்" என்று. சிந்துவைக் கூப்பிட்டு, "ஏனம்மா எங்களுக்கு இதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டேலை. எவ்வளவு நல்லாயிருக்கு. நினைக்க கவலையாயிருக்கு என்ரை பிள்ளையிடம் உள்ள ஒரு திறமை அம்மாக்கே தெரியேலையென்று." சிந்து ஓடிவந்து தாயைக் கட்டிப்பிடித்து "நல்லாயில்லாட்டி யுகி பகிடி பண்ணுவானென்று நினைத்துத் தான் நான் காட்டேலையம்மா" என்றாள். அந்தநேரம் சித்தப்பா வரவும் கவிதை விடயம் எல்லாருக்கும் பரவியது. எல்லாரும் சிந்துவை வாழ்த்தவே மகிழ்ந்து போனாள். அன்றே சித்தப்பா சித்தி அப்பா அம்மா பரிசு எல்லாம் கொடுத்து அசத்திவிட்டார்கள். ஜீவன் யுகி ஆதி தீபக் எல்லோரும் அழகான வாழ்த்து அட்டை செய்து பூக்களுடன் கொடுத்தபோது மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள் சிந்து.

❖❖❖

## 23

பிள்ளைகள் எல்லோரும் வீட்டின் முன்பக்கத்தில் கொட்டியிருந்த பனிக்குவியலை அப்பாவுடன் சேர்ந்து வாரி விட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது பக்கத்து வீட்டு நாய் புரூனோ தன் எஜமானியுடன் வாலை ஆட்டிக்கொண்டே வந்தது. திடீரென்று ஆதி கேட்டாள், "ஏன் எங்களுக்கு வால் இல்லை." எல்லோரும் சிரித்தார்கள். "ஏன் ஆதி உமக்கு வால் விருப்பமா" யுகி கேட்டான். "எங்களுக்கிருந்தால்" என்று சிந்து சொல்லத் தொடங்கவே எல்லோரும் அதைக் கற்பனை பண்ணிச் சிரிக்கத் தொடங்கினார்கள். சுந்தரேஸ் சொன்னார், "நாலுகால் இருக்கிறவைக்குத்தான் வால் இருக்கும். நேராக வளராமல் குறுக்குப்பாட்டிலை வளர்கிற உயிர்களுக்குத்தான் வால் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அது நடக்கும்போது பலன்ஸ் பண்ணத்தான் வால் இருக்கு. மனிதர் நேராக வளர்றபடியால் எங்களுக்கு பலன்ஸ் பிரச்சனையில்லை. வால் தேவையில்லை". "கடவுள் நல்ல கெட்டிக்காரன். அவருக்கு நல்ல மூளை" என்று மெச்சினாள் ஆதி. தீபக் கேட்டான், "ஏன் பெரியப்பா சிம்பன்ஸி எங்களைப்போல நேரைதானே இருக்குது." "ஓமென்ன சரா உமக்குத் தெரியுமா" என்று கேட்க அவரும் "தெரியேல்லை. ஆனால் குரங்குகளுக்கு வால் மிகவும் தேவை. ஏனென்றால் மரத்தில் தாவி ஏறும்போது உடல் சமநிலையைச் சரியாகப் பராமரிப்பது வால்தான். சில குரங்குகள் கீழே விழுந்திடாத வகையில் மரத்தோடு வாலைச் சுற்றிப் பிணைத்துக் கொள்ளும். ஏன் மீன்களுக்குக் கூட வால் மிகவும் தேவை. சரியான திசையில் திரும்பவும் நீந்தவும் வால் உதவுகிறது. பல்லிகள் தங்கடை வாலை ஆபத்து வரும்போது கழற்றிவிட்டுப் போயிடும். அவற்றின் வேர்ப்பகுதி அப்படியே இருப்பதால் பல்லிக்கு வால் வளர்ந்து கொண்டிருக்கும்" என்றார். "ஆ அப்படியா? இது எங்களுக்கு தெரியாதே!" என்றார்கள் பிள்ளைகள்.

ஜீவன் "நாய்கள் ஏன் அப்பா படுக்கும்போது சுற்றி சுற்றிப்போட்டு படுக்கிறது?" என்று கேட்டான். "ஓ அதுவா? மிருகங்களாய் இருந்தாலும் அவையும் நல்ல அறிவோடைதான் படைக்கப்பட்டு இருக்கின்றன. தமக்கு சுவாசிக்க நல்ல காற்று வீசும் திசையைப் பார்த்து நல்ல நித்திரைக்கு ஏதுவான திசை பார்க்கத்தான் அப்படி சுற்றுறது" என்றார். "வாவ். எவ்வளவு பெரிய விஷயம். எனக்கே இப்பதான் இது தெரியுது" என்றாள் திவ்யா. சரா சொன்னார், "நாயின் பெயர்களைப்பற்றி எனக்கொரு சந்தேகம். வெள்ளைக்காரன் வரமுதல் நாங்கள் நாய் வளர்க்கேலையா அல்லது முதல் தமிழ்ப்பெயர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்திட்டு வெள்ளைக்காரனைப் பார்த்து ஆங்கிலப் பெயர்கள் வைத்தோமா என்று சரண்யா சொன்னாள்." "வீதிகளுக்கு வெள்ளைக்காரர் பெயர்களை வைத்ததுபோல நாய்களுக்கும் வைத்திருக்கலாம்". "ஏன் வெள்ளைக்காரனின் மேலுள்ள கோபத்தைக்கூட அவங்கடை பெயர்களை நாய்களுக்கு வைத்து பழிவாங்கி இருக்கலாம்தானே" என்று சுந்தரேஸ் கூற, "இந்தப் பொய்ன்ற் ஒவ்வியூ நல்லாயிருக்கே" என்றார் சரா. திவ்யா சொன்னாள், "இந்தியாவிலை சுதந்திரம் கிடைச்சு வெள்ளைக்காரன் போனவுடனேயே எல்லாப் பெயர்களும் அந்தந்த மொழிகளிலே பெயர் வைச்சிட்டினம். இலங்கையிலைதான் அப்பிடியே இருந்தது. இப்ப எல்லாம் மாற்றியாச்சாக்கும்." சரா சொன்னாள் "நாய்களைப்பற்றி ஒன்று தெரியுமா. வியட்னாம் நாட்டு மக்கள் நாய்களைப் பிடித்து சமைச்சுச் சாப்பிடுவினம். போர்ணியோக்கு நான் போனபோது பார்த்தன். றெஸ்ரோறன்டுகளில் முழுக் குரங்கின் தலையைப் பிளந்துவைச்சு அப்படியே சாப்பிடுவினம். சரியான விலை அந்தச் சாப்பாடு."

"ஒட்டகத்துக்கு குரல் இல்லையென்று என்னுடைய நண்பன் சொன்னான் உண்மையா சித்தப்பா?" யுகி கேட்கவும், "ஓமோம் அது சத்தம் போடாது என்றபடியால் குரல் இல்லையென்றுதான் அர்த்தம். அதோடு ஒட்டகத்திற்கு வியர்க்கவும் மாட்டாது" சொன்னார் சித்தப்பா. "ஓகோ அதுதான் தண்ணீர் இல்லாத இடங்களில் வாழ அதற்கு உதவியாயிருக்கிறது. அதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் வியர்க்காமல் பண்ணியிருக்கிறார்'' என்றான் யுகி. ''திமிங்கிலம் 500 வருடங்கள் வாழுமாம். உண்மையா?'' யுகி கேட்டான். ''ஓம். அதோடை அதுக்கு வாயில் சுவை நரம்பே கிடையாது. அதுதான் அப்படியே எல்லாவற்றையும் விழுங்கும். அது குட்டிகளுக்கு பாலுட்டும் ஒரே கடல் வாழும் உயிரினம். கடலில் வாழும் எந்த உயிரினமும் பாலுட்டுவதில்லை'' என்றார் சித்தப்பா.

சித்தியவை இலண்டன் கிளம்ப ஜீவனின் குடும்பம் வழமையான வேலைகளுக்குள் அழுத்தப்படுகிறது. என்றாலும் இரவுச் சாப்பாட்டு நேரத்தில் எல்லோருமே பேசிக்கொண்டு சாப்பிடுவது வழக்கமென்றதால் பலப்பல விடயங்கள் பேசப்பட்டன. யுகி கேட்டான், ''அம்மா எங்களுக்கு ஔவைப்பாட்டி சொந்தமா? சித்தி சொல்றா சொந்தமென்று''. ''ஏன் சொந்தம் என்று காரணம் சொன்னாவா?'' என்று அப்பா கேட்க, ''ஓம் அப்பா. உங்கடை பாட்டியின் பாட்டி பெயர் தெரியுமா உங்களுக்கு? தெரியாதுதானே. ஆனா ஔவைப்பாட்டியின் பெயர் தெரியும். அவ சொன்ன பாட்டுகள் தெரியும். அவவைப்பற்றி நிறையத் தெரியும். அப்ப அவ சொந்தம்தானே என்று சொன்னா'' என்றான் யுகி. ''ஓம். என்ன அவ சொன்னது சரிதான். ஆனால் புலவர்களாக மூன்று ஔவை இருந்திருக்கினம், வெவ்வேறு காலங்களில். விநாயகர் அகவல் பாடிய ஔவை வேறை, நல்வழி ஆத்திசூடி பாடிய ஔவை வேறை, அதியமானுக்கு நெல்லிக்கனி கொடுத்த ஔவை வேறை'' என்றாள் திவ்யா. ''ஹை நாங்க எல்லாருக்கும் சொல்லுவம் ஔவைப்பாட்டி எங்களுக்கு சொந்தமென்று'' மகிழ்ச்சியுடன் எல்லாப் பிள்ளைகளும் சொன்னார்கள். ''எந்த ஔவைப்பாட்டி சொந்தமென்று சொல்லப்போறீங்க''என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்யா கேட்க "ஒருத்தருக்கும் மூன்று ஒளவைப் பாட்டி இருந்தது தெரியாதே" என்றாள் சிந்து.

"ஒளவைப் பாட்டி பற்றி இன்னொரு கதை தெரியுமா உங்களுக்கு? திருவள்ளுவர் திருக்குறள் 1330 குறளையும் எழுதிவிட்டு அதை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்ற பெரிதும் கஷ்டப்பட்டாராம். அப்பவும் இந்தப் பொறாமைக்காரர் இருந்திருக்கினம். கன புலவர்கள் திருக்குறளை அரங்கேற்றவே விடேல்லையாம். அப்போது ஒளவையார் தான் மதுரைச் சங்கத்தில் அரங்கேற்ற உதவி செய்தாராம்" திவ்யா கூறவும், "எந்த ஒளவையார் அம்மா?" என்றான் யுகி. சுந்தரேஸ் சொன்னார், "மூன்று ஒளவையார் என்று சொல்லீற்றீர். இனி எல்லாத்துக்கும் எந்த ஒளவையார் என்று கேட்கப் போகினம்." இவர்கள் கதையில் இடையில் வந்த



அப்பப்பா "திருவள்ளுவரைப் பற்றிய எல்லா செய்திகளும் அழித்து விட்டார்களென்று நினைக்கிறேன். அதற்கு முந்தியவர்கள் வாழ்க்கை வரலாறு எல்லாம் இருக்கு. பொறாமையால் எல்லாவற்றையும் மறைச்சிட்டினம் போலை" என்றார். திவ்யா சொன்னாள், நான் நினைக்கிறன் மாமா "ஆரியர் வாறதுக்கு முதல் திருக்குறள் எழுதப்பட்டது என்றதுக்கு கன ஆதாரமிருக்கு. ஏனென்றால் ஆரியச்சொல் ஒன்றுமே திருக்குறளில் இல்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆனபடியால் ஆரியர்தான் திட்டமிட்டு அவரைப்பற்றிய விடயங்களை மறைச்சிருக்கவேணும்" இருக்கலாம். அப்பிடித்தான் நினைக்கிறன். அவர் சமணசமயக் கருத்துக்கள் நிறையச் சொல்லியிருக்கிறபடியாலை இந்த ஆரியர் மறைச்சிருக்கவேணும். ஆரியர் என்னதான் மறைச்சாலும் திருக்குறளும் திருவள்ளுவரும் வெளியில் வந்து சேர்ந்தார்கள்தானே. சிங்கப்பூரில் மிகச்சிறந்த பத்து சிந்தனையாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிலையமைத்தனர். அதில் ஆறாவதாக திருவள்ளுவர் இருக்கிறார். அது எவ்வளவு பெருமை" என்றார் அப்பப்பா. "உண்மையாகவா?" ஜீவன் கேட்டுவிட்டு அப்பாவைப் பார்க்க, சுந்தரேஸ் "இனி மாமாவும் மருமகளும் ஆராய்ச்சி தொடங்கி விட்டினம் என்றால் அவ்வளவுதான்." ஜீவனுக்கு விளங்கீற்றுது. சிந்து யுகி எழும்பீற்றினம். "நாங்களும் ஓடுவம்" என்றார்.

மணி எட்டு அடிக்கவும், "அப்பா மணிக்கூட்டைக் கண்டுபிடிச்சது யார்? எந்த வருஷம் அப்பா?" என்று ஜீவன் கேட்டவாறே மற்றப் பக்கத்துக்குச் சென்றார்கள். அப்பா கூறத்தொடங்கினார், "பழைய காலத்தில் சூரியனின் நிழலை வைத்தே நேரத்தைக் கணக்கிட்டார்கள். இதற்காக சூரிய வட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒன்று அமைத்து ஜினாமான் என்ற முக்கோண வடிவிலுள்ள ஒரு தகடு வைத்து அத்தகட்டில் சூரியஒளி விழும்போது முக்கோணத்தின் நிழல் தெரியும். அதை வைத்துக் கணித்தார்கள். சூரியன் கிழக்கிலிருந்து மேற்குக்கு நகர நகர நேரம் கணிக்கப்படும். இதனை அடிப்படையாக வைத்தே



ஐரோப்பாவில் முதல் கடிகாரம் உருவாக்கப்பட்டது. முட்கள் இடமிருந்து வலமாக சுற்றுகிறது. முதன்முதல் இதைக் கண்டுபிடித்தவர் சுமேரியர். பின் கிரேக்கர். 1510இல் பீற்றர் ஹென்கின் என்ற ஜேர்மனியர் நின்ற நிலையிலான கடிகாரத்தைக் கண்டுபிடித்தார். இலண்டன் வெஸ்மினிஸ்டர் அரண்மனையில் உலகின் மிகப்பெரிய மணிக்கூடு பிக்பென் 1858 ஏப்பிரலில் கட்டிமுடிக்கப்பட்டது. இது 4 மீற்றர் நீளம் 300 கிலோ எடை கொண்டது. இதுக்கு டிசைன் போட்டவர்கள் எட்மண்ட் டெனிசன், ஜோர்ஜ் ஜெரி. செய்தவர் எட்வேட் ஜோர்ண் டென்ற். 2ஆம் உலகப்போரில் ஜேர்மனி இதை குண்டு வீசி அழிக்க முயன்று முடியாமல் போய்விட்டது. சரி, கதைத்தது போதும் நேரமாயிட்டுது. நாளைக்கு கதைப்பம். கை கழுவிவிட்டு பல் மினுக்கிட்டுப் போய் படுங்கோ" என்று கட்டளையிட்டார் அப்பா.

ஆதி ஏதோ எழுதி எழுதிக் கிழித்துக் குப்பைக்கூடையில் வீசிக்கொண்டிருந்தாள். பார்த்த ஜீவன் "ஆதி காகிதங்களை வீணாக்கக்கூடாது. காகிதம் என்னத்திலை செய்கிறது தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரக்கூழிலிருந்து செய்கிறது. நாங்க வீணாக்கினால் மேலதிகமாக ஒரு மரம் வெட்டப்படும். அது நல்லது இல்லையல்லா" என்றான். "எனக்குத் தெரியாதண்ணா. இதுவும் வீடர்வெர்பேர்துங் (மறுசுழற்சி) செய்யப்படுந்தானே" என்றாள். "சரி, ஆனாலும் தேவை இல்லாமல் கிழிக்கிறது வீண்தானே" என்றான். ''சரியண்ணா. முந்தின காலத்திலை ஓலைகளில்தானே எழுதினவை. எப்ப யாரண்ணா காகிதத்தை முதல் பாவிச்சது" என்று ஆதி கேட்க" சீனர்கள்தான் முதல் கண்டுபிடித்தது. 50ஆம் ஆண்டில் பிறந்த சாய்லுன் என்பவர் 105ஆம் ஆண்டில் இதைக் கண்டுபிடித்தார், வீணாய்ப்போகும் மரத்துகள் மூங்கில்துண்டுகள் பழைய மீன்பிடிவலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி காகிதம் செய்தார்கள். சீனர்கள் இதைச் செய்வதை ஏறக்குறைய 1000 வருஷங்களாக இரகசியமாக வைத்திருந்திருக்கிறார்கள். பின்தான் மத்திய கிழக்கு நாடுகளின் வழியாய் ஐரோப்பாவுக்குப் பரவியிருக்கிறது. 1843இல் மரக் கூழிலிருந்து காகிதம் செய்யத் தொடங்கினார்கள்'' என்றான். ''பேப்பர் என்ற சொல் இலத்தீன் சொல்லிலை இருந்து வந்ததுதானே அண்ணா" என்று யுகி அவர்கள் பேச்சில் சேர்ந்து கொண்டான்.

"ஓ பாப்பிரஸ் என்ற இலத்தீன் சொல்தான் பேப்பர் ஆனது. அரேபியர் காகத் என்றும் தமிழர் காகிதம் என்றும் போர்த்துக்கீசிலை கடுதாசி என்றும் சொல்கிறார்கள்" என்றான் ஜீவன். "எங்கடை ரீச்சர் சொல்றா பிளாஸ்ரிக் பைகளுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக காகிதப்பைகள் உபயோகிப்பது நல்லது. அவை மறுசுழற்சிக்கும் பயன்படுத்தலாம். சூழலுக்கும் கேடு செய்யாதென்று” என்று சொன்னான் யுகி.

“ஓமோம். அது மிச்சம் நல்லது. 1799இல்தான் நிக்கோலஸ் லுயிஸ் ராபேர்ட் இப்ப செய்கிறமாதிரி மரக்கூழில் செய்யக் கண்டுபிடிச்சார். முந்தின காலத்திலை தாழம்பூ மடலில் எழுதுவார்களாம்” என்று ஜீவன் சொல்லவே “ஓ அதுதான் காகிதத்தை தாள் என்று சொல்றது. நான் கண்டுபிடிச்சிட்டனே நான் கெட்டிக்காரிதானே அண்ணா” என்றாள் ஆதி.

ஆதி நிறைய பிங்குவின் பறவைகளின் படங்கள் சேகரிச்சு வைத்திருந்தாள்.



யுகி “ஏன் இவ்வளவு பிங்குவின் படங்கள்?” என்று கேட்க, ஆதி சொன்னாள் “எனக்குப் பிடித்த பறவை பிங்குவின்தான். போனவருஷம் அப்பா பிங்குவின் படம் பார்க்க கூட்டிப் போனாரெல்லோ. அதுக்குப்பிறகு எனக்கு பிங்குவின் தான் பிடிக்கும். அவையின் வாழ்க்கை எவ்வளவு கஷ்டமானது. இதுடை சிறகுகள் பறப்பதற்கு உதவாது. ஆனால் நீரில் விரைவாய் நீந்த உதவும். தங்கடை நீந்தும் உறுப்புகளைப் படகுத்துடுப்புகளாகப் பயன்படுத்தி ஒரு மணிநேரத்தில் 15 மைல் நீந்துமாம். இவற்றின் இறகுகளுக்கிடையே ஒரு படைக்காற்று இருப்பதால் நீரில் மிதக்க இலகுவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிக்கட்டிகளின்மேல் வயிற்றால் வழுக்கிக்கொண்டு போகும். அது பார்க்க என்ன வடிவாயிருக்கும். இவைக்கு காது மிக நல்லாய் கேட்குமாம். கண்களாலை கீழைதான் வடிவாய் பார்க்க முடியும். தொலைவை அதுக்குப் பார்க்க முடியாதாம். பிங்குவின் தன்னுடைய வாழ்நாளில் ஒரேயொரு முறைதான் முட்டையிடும். அதோடு நின்றுகொண்டுதான் அடைகாக்கும். அப்பாவும் அம்மாவுமாய் மாறி மாறி முட்டையை அடை காக்கும். குஞ்சுகளுக்கு அப்பாவும் அம்மாவும் மாறி மாறி சாப்பாடு ஊட்டுவினம். சாப்பாடு தேடிக்கொண்டு வரேக்கை எல்லாப் பிங்குவினும் ஒரேயிடத்திலை நிற்கினம். எப்படித் தங்கடை பிள்ளையளைக் கண்டு பிடிப்பினம்?" ஒரே மூச்சாய் சொல்லிவிட்டு ஓய்ந்தாள் ஆதி. "தெரியேல்லை. கடவுள் ஏதோ கண்டுபிடிக்கிற அறிவை வைச்சிருக்கிறாராக்கும்" என்றான் யுகி. "பிங்குவின் தென்துருவத்தில்தான் வாழ்கின்றன என்ன அண்ணா? அங்கு மட்டுமில்லை. நியூசிலாந்து, சில்லி, ஆர்ஜன்ரீனா இந்த இடங்களிலும்தான் வாழ்கின்றன" என்றான்.

❖❖❖

## 24

ஒருநாள் ஆதி கேட்டாள். "இலங்கையில் இருக்கிறபோல மின்மினிப்பூச்சி இங்கில்லையா? நல்ல அழகான பூச்சி. லைற் அடிச்சுக்கொண்டு பறக்கும். அதன் இறகுகளுக்குள் பல்ப் பற்றரி எல்லாம் வைச்சிருக்கா?" "சீ அப்படியொன்றுமில்லை. பெரியப்பா சொன்னார் பூச்சியின் வாலில் ஔஅர்ஸ்ரொஃவ் மக்னீசியம் சேரும்போது வெளிச்சம் வருமாம். அதனுடைய நரம்புகளுக்குள் போகும்போதுதான் விட்டுவிட்டு வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறதாம். இப்ப விளங்குதா? இங்கை இருக்கிறதோ தெரியேல்லை. ஆனால் முந்தி சித்தி வீட்டை போயிருந்தபோது அதைப்பற்றி கார்டூன் பார்த்தனான். ஆனபடியால் இருக்க வேண்டும்." விளக்கினான் ஜீவன்.



"இந்தமுறை இலங்கை போனபோது ஏதோ ஒரு தீவுக்குப் போனோம் எல்லோ. அப்ப மீன்கொத்தி என்று ஒரு அழகான பறவை பார்த்தம்தானே" என்றாள் சிந்து. பெரியப்பா சொன்னார், மரங்கொத்தி போலத்தான் இந்த மீன்கொத்தியும். குளங்களுக்குப் பக்கத்திலிருக்கும் மரங்களில் அமர்ந்திருந்து மீன்களைக் கண்டதும் டக்கென்று பாய்ந்து கௌவிச் சாப்பிடுமாம். தவளை, பல்லி, பூச்சிகளையும் கூட இது உண்ணுமாம். அது மீன்களைக் கௌவிச் சாப்பிடுவது அழகாயிருந்தது. என்னம்மா"? "அதன் சிவப்பு சொண்டும், செம்பழுப்பு கழுத்தும், சிறகுகள் நீலமும், மார்புப்பக்கம் வெள்ளையும் மிச்சம் அழகென்ன" என்றாள் அம்மாள். "கால்களும் சிவப்பாயிருக்கும் என்னம்மா?" என்றாள் ஆதி. "கிளியை விட இது நல்ல அழகென்ன" என்று சிந்து சொன்னாள்.


"அண்ணா அப்பா நோபல்பரிசு பற்றி எங்களைத்தேடி அறியச் சொன்னாரே. நீங்க தேடிற்றீங்களா" என்று கேட்க "ஆ எடுத்திட்டன். வாங்க சேர்ந்து வாசிப்பம்" என்றான். முதல் யுகி வாசித்தான்," உலகிற்கு பெரும் பயன் விளைவிக்கும் கருவிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் ஒப்பற்ற ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர்களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டு செய்தவர்களுக்கும் நோபல் பரிசு வழங்கப்படும். வேதியலாளர் அல்ஃபிரட் நோபலால் 1895இல் தொடங்கப்பட்டது. ஆனாலும் 1901இல்தான் முதல் பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெறுபவருக்கு 1 தங்கப்பதக்கமும் ஒரு பட்டயமும், பரிசுப்பணமும் கிடைக்கும். நோபல் 1833இல் சுவீடனிலுள்ள ஸ்டொக்ஹோம் நகரில் பிறந்தார். அவர் 355




கண்டுபிடிப்புகளினால் பெரும் பணக்காரனார்". "ஆ அப்பாடா எவ்வளவு கெட்டிக்காரன்! 355. ஐயோ எங்களாலை நினைக்கவே முடியாதே" வாசிப்பதை நிறுத்திவிட்டு ஆச்சரியப்பட்டான் யுகி.





சிந்து தொடர்ந்து வாசித்தாள். "டைனமற்றைக் கண்டுபிடித்தவரும் இவரே. ஒரு பிரெஞ்ச் பத்திரிகையில் இவரின் சகோதரரின் இறப்புச் செய்தியைப் பார்த்தவுடன் அதிர்ந்துபோனார். தான் இறந்த பிறகு தான் நினைவில் வைக்கப்பட வேண்டுமென்று தீவிரமாக யோசித்து மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு பெரும் பங்காற்றியவர்களுக்கு இயற்பியல், வேதியியல், அமைதி, மருத்துவம், இலக்கியம் ஆகியவற்றுக்கு பரிசு வழங்கத் தன்னுடைய மில்லியன் கணக்கான சொத்துக்களைக் கொடுக்குமாறு உயில் எழுதி வைத்தார். தன் 63ஆவது வயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்துவிட்டார். 3 தமிழர் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள். சி. வி. இராமன் - இயற்பியல்துறையில் 1930இல் நோபல்பரிசு பெற்றார். வானம் ஏன் நீலநிறமாகத் தெரிகிறது என்று கண்டுபிடித்தவர் இவரே. ஒளி ஒரு பொருளின் உள்ளே செல்லும்போது சிதறும் ஒளியலைகளில் ஏற்படும் நீள மாற்றத்தைக் கண்டுபிடித்தார். அடுத்தது சுப்ரமணியம் சந்திரசேகர் - இயற்பியலுக்கான நோபல் பரிசு 1983இல் பெற்றார். இவர் சி. வி. இராமனின் சகோதரனின் மகன். மற்றவர்



வெங்கடரமணன் இராமகிருஷ்ணன் - உயிர்வேதியலுக்கான நோபல் பரிசு அனைத்து உயிரணுக்களிலுமுள்ள புரதங்களின் ரைபோசோம் என்ற செல்களுக்குள் புரதம் உற்பத்தியாவது பற்றி.'' "எனக்கு ஒன்றுமே விளங்கேல்லை" என்று ஆதியும் "எனக்கு கொஞ்சம் விளங்குது" என்று யுகியும் சொன்னார்கள். "மதர் திரேசாவுக்கும் கிடைச்சது என்ன?" என்றான் யுகி. அதைத் தொடர்ந்து "அப்துல்கலாமுக்கு கிடைச்சதா?" என்றும் கேட்டான். ''தெரியேல்லை. அப்பாவைக் கேட்பம்'' என்று சொல்ல "இரவீந்திரநாத்தாகூருக்கு கிடைத்ததெல்லா? சிந்து கேட்டாள். "ஓ அவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது. 1940இல் ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகம் சாந்திநிகேதனுக்கே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அவருக்கு டாக்டர் ஒஃவ் லிட்ரெச்சர் பட்டம் கொடுத்தார்களாம். அவர் எட்டு வயதில் கவிதை எழுதத் தொடங்கினாராம். 2000க்கு மேல் பாடல்கள் எழுதி சிலவற்றுக்கு இசையும் அமைத்தாராம்" ஜீவன் சொன்னான். "அவருடைய பாட்டுத்தானே அண்ணா இந்தியாவின் ஜனகணமன என்ற தேசியகீதம்?" என்றாள் சிந்து. ''ஓமோம். அதோடு பங்களாதேஷின் தேசியகீதமும் அவர் எழுதினதுதான்" என்றான் ஜீவன். "நோபல் பரிசு நோர்வேயில் ஒஸ்லோவில் தானே அண்ணா கொடுக்கிறது" யுகி கேட்கவும், "ஓமோம். ஒஸ்லோவில் இருக்கிற நோபல் ஹவுஸில்தான்" என்றான் ஜீவன்.

❖❖❖

# 25

விடுமுறை முடிந்து பள்ளி ஆரம்பிக்கவும் எல்லோருமே அவசர உலகுக்குள் தள்ளப்படுகிறார்கள். ஜீவன் நேரத்துக்கு எழுந்து குளிப்பு, படிப்பு, மூச்சுப்பயிற்சி எல்லாவற்றிலும் கவனம் செலுத்தினான். ஆதியும் யுகியும் நேரத்துக்கு எழும்பாமலும் எழும்பினாலும் தேவையற்ற எதிலும் நேரத்தை வீணாக்கிவிட்டு காலை உணவைத் தவிர்த்துவிட்டு ஓடத்தொடங்கினார்கள். குளிப்பு, படித்தல், மூச்சுப்பயிற்சி இவற்றை செய்யாமல் விட அப்பா அனுமதிக்காததால் நேரம் போயிட்டுதென்று பாலை மட்டும் குடித்துவிட்டு பள்ளி போகத் தொடங்கினார்கள். இரண்டு மூன்று நாள் பார்த்துவிட்டு திவ்யா "இரவு 7.30 மணிக்கு சாப்பிட்டு கிட்டத்தட்ட 10 மணிநேரம் இரைப்பை வெறுமையாய் இருந்தால் வயிற்றுப்புண், வாந்தி, பசி வராது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவலி போன்ற பல வியாதிகளைக் கொண்டுவரும். இனி இதை நான் அனுமதிக்க மாட்டன். நீங்க ஸ்கூல் போனபிறகு போகக்கூடியதான வேலையை நான் தேர்ந்தெடுத்ததே உங்களைச் சரியாகக் கவனிக்க வேணுமென்று. காலையில் நான் போறதென்றால் எவ்வளவு பெரிய வேலை எடுத்திருக்க முடியும். நீங்க இப்படிக் காலையில் சாப்பிடாமல் போனால் என்ன பிரயோசனம் நான் வீட்டிலை நின்று. உங்கடை லேசுக்காக நான் பழங்களை மிக்சியில் அடித்து அதற்குள் நட்ஸைப் போட்டு வைக்கிறன். இதுக்கு ஒரு 5 நிமிடம் ஒதுக்கேலாட்டி" என்று வருத்தப்பட்டாள். "ஒவ்வொரு நாளும் பழங்கள் ஏலாதம்மா. மாறி மாறிச் செய்யுங்கோ." யுகி கூற "ஓகே. பயறு கடலை சாப்பிட நேரமெடுக்கும். சத்துமா, கஞ்சி, களி செய்கிறன்" என்ற திவ்யாவுக்கு "ஐயோ களியா நான் மாட்டனப்பா "என்றாள் ஆதி. மற்றப் பிள்ளைகள் எல்லாம் சீரியல், சான்ட்விச், கேக், பேர்கர் சாப்பிடினம். நீங்கள் அதுகள் கூடாதென்று தரமாட்டீங்க" என்று சிந்து சொன்னாள். "எங்கடை சாப்பாடுகள் எவ்வளவு நல்லதிருக்க சத்து இல்லாத வெள்ளைமா சாப்பாட்டுக்கு ஆசைப்படுறீங்களே" என்று அலுத்துக் கொண்டாள் திவ்யா.

ஆதியின் பிறந்தநாள் நெருங்கியது. ஜீவன் சிந்து யுகி மூவருக்குமே இப்போது வீட்டோடு பிறந்தநாள் கொண்டாடிவிடுவினம். ஆதிக்கு மட்டும் 2 வருடங்களுக்கொரு முறை நெருங்கிய நண்பர்கள் உறவினர்களுடன் கொண்டாடி மகிழ்வர். நால்வரின் பிறந்த நாட்களுக்குமே தாயகத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகள் இல்லத்துக்கு பணம் அனுப்பி சிறு மனநிறைவடைவர். அப்பா கேக் கொண்டுவரவும் ஓடிச்சென்று நால்வரும் பார்த்து "நல்லாயிருக்கு. ஏனப்பா நாங்க மட்டும் கேக்கிலை ஒருநாளும் பெயர் வயது போடுறேல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் பெயர் எத்தனையாவது பிறந்தநாள் என்று போடுவினம்" என்று யுகி கேட்கவே

"அம்மாடை ஓடர். பிள்ளைகளின் பெயர் வயதை எழுதி அதை வெட்டக் கூடாதுதானே. பிள்ளைகள் கனகாலம் வாழவேண்டுமென்று ஆசியுடன் வெட்டுற கேக் எல்லோ. அதுதான் அப்பிடிப் போடுறேல்லை. கன்டிலையும் அணைக்க முதல் கேக் வெட்டச் சொல்றதும் அதுக்குத்தான்" என்றார். "ஓம் அதுதான் நல்லது. மற்றவையும் எங்களைப் பார்த்து அப்படிச் செய்யட்டும்" என்றாள் சிந்து. கொஞ்சப்பேர் இப்ப அப்பிடிச் செய்யத் தொடங்கீற்றினம். எங்களைக் காரணம் கேட்டபோது நாங்க சொல்லவும் அது சரிதானென்று ஏற்றுக்கொண்டு செய்யினம். இனிக் கெதியிலை கொஞ்சப்பேர் கன பேராயிடும். என்றாள் திவ்யா. "உங்கடை கல்யாணத்துக்கும் அப்பிடியா செய்தீங்க அம்மா" என்று கேட்க, "ஓம் எங்கடை பேரை எழுதிப்போட்டு நாங்களே வெட்டித் துண்டாக்கிறது நல்லாவாயிருக்கும். கனகாலம் சேர்ந்து வாழவேண்டிச் சந்தோஷத்துடன் செய்கிறது. நாங்க இதயம் செய்தும் வெட்டேல்லை. கேக்கிலை ஒரு சின்ன அகல் விளக்கு வைத்து அதில் இரண்டு பேரும் சேர்ந்து தீபம் ஏற்றினம். வெட்டி வைச்சிருந்த கேக்கைத்தான் எல்லாருக்கும் குடுத்தது. மூன்று நாள் போனபிறகுதான் அந்த கேக்கை வெட்டிச் சாப்பிட்டது. அதுவும் நாங்க வெட்டேல்லை" என்றாள் திவ்யா. ஜீவன் சொன்னான், "எங்களுக்கு எவ்வளவு பெருமை இப்பிடி ஒரு அறிவாளி அப்பா அம்மா கிடைச்சது" என்று கூறி மூவருமே பெற்றோரைக் கட்டி முத்தம் கொடுத்தார்கள். அவர்களும் முத்தம் கொடுத்தபடியே, "பிறந்தநாள் கொண்டாடத் தொடங்கின நாடு எது தெரியுமோ? ஜேர்மனிதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தொடங்கியது'' என்று கேள்வியும் கேட்டுத் தானே பதிலும் சொன்னார் அப்பா. ''முஸ்லீம்களும் ஜெகோவா விற்னெஸ்காரரும் பிறந்தநாள் கொண்டாடுறேலை என்னப்பா'' என்று திவ்யா கேட்க, "அப்பிடித்தான் கேள்விப்பட்டனன். சரியாய்த் தெரியாது" என்று அப்பா கூறினார்.


யுகி "அம்மா எனக்கு விக்கல் வருகுது. நிற்குதேயில்லை" என்று ஹிக் ஹிக் என்று விக்கினான். "முதல் கொஞ்சம் தண்ணியை மடமடவென்று குடிச்சிட்டு மூச்சை நன்றாக உள்ளே இழுத்து அடக்கிக் கொள்ளுங்கோ" என்றாள் திவ்யா. கொஞ்ச நேரத்தில் விக்கல் சரியாக "ஏனம்மா விக்கல் வாறது?" என்று கேட்டான். திவ்யா சொன்னாள், "வயிற்றுக்கும் மார்புப் பகுதிக்கும் இடையிலுள்ள தசைப்பகுதிதான் நாங்கள் காற்றை சுவாசிக்க உதவுகிறது. மூச்சை உள்ளிழுக்கும்போது இந்தப் பகுதி கீழிறங்கி நுரையீரலுக்குள் காற்றை நிரப்பும்." "நுரையீரலென்றால்?" என்று யுகி கேட்கவும் "லுங்ஙே" என்றாள். "காற்றை வெளிவிடும்போது நுரையீரலை அழுத்திக் காற்றை வெளியேற்றும். சில நேரங்களில் மார்புப் பகுதியிலுள்ள நரம்புகள் வயிற்றுப்பகுதியை எரிச்சல்படுத்தினால் திடீரென்று சுருங்க ஆரம்பித்துவிடும். அப்போது குரல்நாண்கள் திறக்காது. அந்த நேரத்தில் நாம் சுவாசிக்கும் காற்று குரல்நாண்களின் குறுகிய இடைவெளி வழியாக நுரையீரலுக்குள் சென்று திரும்ப வேண்டும். அப்போது அந்தக் காற்று தடைப்பட்டு தொண்டையில் ஹிக் ஹிக் என்ற சத்தம் வரும். அதுதான் விக்கல்" என்று கூறி முடித்தாள்.

யுகி கேட்டான், "அம்மா தர்ஷனாக்கா சொல்றா முந்தி தமிழர் சுவிசில் இருந்திருக்கலாம் என்று". "ஏன்?" கேட்ட அம்மாக்கு "இங்கை அடில்ஸ்வில், றாப்பஸ்வில், தால்வில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹின்வில், வடன்ஸ்வில், வொல்கற்ஸ்வில் மாதிரி இலங்கையில் கொக்குவில், கோண்டாவில், உடுவில், சுருவில், இணுவில், மட்டுவில் என்று இருக்காம். இப்பிடி ஒற்றுமை எப்பிடி வரும் அந்தப்பெயர் மாதிரி". "ஓ தர்ஷனாவும் கெட்டிக்காரி. எங்களுக்கு இவ்வளவு நாளும் இது தெரியேல்லையே. நீங்க உங்கடை மாஸ்ரறிட்டை கேளுங்கோ. இப்படி வில் என்று இலங்கையில் இருக்கிறது. அது எப்படி என்று கேளுங்கோ" என்றாள் திவ்யா.

"ஏனம்மா இந்தியாவில் துளசிச்செடியைக் கும்பிடுறது?" சிந்து கேட்டாள். "அது நான் சொல்லவேணுமென்று நினைத்தனான். துளசிச்செடி, அரசமரம் வேப்பமரம், வில்வமரம் இதெல்லாம் நிறைய ஒக்சியினை வெளிவிடும். இவற்றைப் பாதுகாக்கத்தான் இவற்றை வணங்கச் செய்தார்கள்.



அப்படியென்றால் அவற்றை வெட்டவோ, அழிக்கவோ மாட்டினம். அதோடை துளசிச் செடியின் மணத்துக்கு பாம்புகளும் வராது. முந்தினகாலத்தில் பாம்புகளும் நிறையத்தானே. இவை மருத்துவ குணமும் கொண்டவை. துளசி சளி, இருமல், அஸ்மா போன்றவற்றுக்கு நல்லது. வேம்பு சொல்லவே தேவையில்லை. பூ, பழம், தோல், இலை, மரம் என்று முழுவதுமே மருந்துதான். எத்தனையோ நோய்களுக்கு மருந்து. வில்வமரமும் அப்பிடித்தான். நீரழிவு நோய்க்கு நல்லது. பூக்காத காய்க்காத கனி தராத ஒரே மரம் இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமரம்". "எவ்வளவு அறிவாளிகள் முந்தைய தமிழர். எல்லோருக்கும் விளங்காத விஷயத்தை கடவுள் பெயரால் சாதிச்சிட்டினம். கிறேற்தான்" ஜீவன் சொன்னான். அப்பா சொன்னார், "நான் எங்கேயோ வாசித்தனான் யப்பானில் ஏதும் தேவைகளுக்கு மரத்தை வெட்டும்போது வெட்டுபவன் மரத்தினடியில் நின்று பிரார்த்தித்து வெட்டட்டுமா என்று மரத்தைக்கேட்டு மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டுதான் வெட்டுவார்களாம். எவ்வளவு மனிதநேயம். எல்லாமே உயிரினம்தானே. சக உயிரினத்தை மதிக்கும் பண்பு. நாங்களும் பார்த்துப் பழக வேண்டிய ஒரு நல்ல பண்பு". "நாங்களும் இனி அப்படிச் செய்வம் என்னப்பா" என்றனர் எல்லாப் பிள்ளைகளும். ''மனித இனம் தோன்றுவதற்கு முதலே மரங்கள் தோன்றிவிட்டன. எங்களுக்கு மூத்தவர்கள் மரங்கள். நாங்க அவற்றை மதிக்க வேண்டும்தானே."

❖❖❖

## 26

பள்ளியால் வந்தவுடனே யுகி கேட்டான் "ஆதி அன்றைக்கு கேட்டீரெல்லோ ஏன் வானமும் கடலும் நீலமாயிருக்கென்று. நான் மாஸ்ரறிட்டை கேட்டன். அவர் நல்ல கேள்வி. இப்படி உங்களுக்கு சுவீவெல் (சந்தேகம்) இருந்தால் கேளுங்கோ என்று சொன்னார். முகில் இல்லாத வானத்தில் காற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மொலிக்கியூல் (மூலக்கூறுகள்) பரந்திருப்பதால் சூரியனிலிருந்து



கதிர்வீச்சு மோதி மற்ற நிறங்கள் மறைந்து நீலநிறம் மட்டுமே தெரிகிறது. இந்த நீலம் நீளமாக இருப்பதால் அது தெரிகிறது. சூரியக் கதிர்களில் நீலவண்ணக்கதிர் அதிக ஆற்றல் கொண்டது. அதுதான் வானம், கடல் நீலமாகத் தெரிகிறது. வானம் நீலநிறமில்லை. நீலம்போல் தெரியுது. விளங்குதா ஆதி? இதைக் கூடி கண்டுபிடித்தவர் சி. வி. இராமன் என்ற தமிழர் தெரியுமா?" என்று யுகி சொல்ல, "ஓம். முந்தி அண்ணா சொன்னவராக்கும். அப்படித்தான் சூரியன் மறையும்போது வானம் சிவப்பாகிறதா?" என்று ஆதி கேட்டாள். "ஓம். சூரியன் மறைகிறபோது பூமிக்கும், சூரியனுக்கும் தூரம் கூடவாய்ப் போயிடும். நீலமும், மஞ்சளும் மூலக்கூறுகளில் மோதி தூரத்திலுள்ள பூமியைத் தொடமுதலே சிவப்பு பூமியைத்தொட்டுவிடும்". "மொலிக்கியூல் என்றால் என்னண்ணா?" ஆதி கேட்க, ஜீவன் "நைட்ரஜின், ஒக்ஸிஜின் சேர்ந்த கலவை'' என்றான். "பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் எவ்வளவண்ணா?" சிந்து கேட்க, "156 கோடி கிலோமீற்றர்" என்றான்". "ஆ எவ்வளவு தூரம்? 1000 தரம் உலகத்தை சுற்றினால் இவ்வளவு வருமா, தெரியேல்லை. அப்பாட்டைக் கேட்பம்"? "கதைத்துக்கொண்டிருக்கும்போது அப்பா வரவே "இந்தப் பூமி எப்படியப்பா வந்தது?" யுகி கேட்டான். "சூரியனிலிருந்து தெறித்து விழுந்த நெருப்புத்துண்டு. கொதித்துக் கொண்டிருந்த இக்கோள் குளிர்ந்தபின்தான் இங்கு உயிரினங்கள் தோன்றத் தொடங்கின. பூமி சூரியனை நடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஒரு நீளவட்டப் பாதையில் சுற்றத் தொடங்கியது. அப்படிச் சுழலும்போது விண்வெளியிலில் இருந்த பலவகையான தூசு, அழுக்கு, சிலவகை வாயுக்கள் தம்மை நோக்கி இழுத்தன. இவை படியப்படிய அதன் பரப்பளவு கூடிக்கொண்டு வந்தது. வெங்காயம் லேயர் லேயராய் இருப்பதுபோல இந்தத் துசு தும்பு அழுக்கு எல்லாம் படிந்து படிந்துதான் இந்தப் பூமி உருவாயிற்று. இவை சுழற்சி என்ற சக்தி காரணமாகவும் ஈர்ப்பு என்கிற சக்தி காரணமாகவும் இணைந்து லேயர் லேயராய் படிந்து பூமி உருவாயிற்று. இதைத்தான் சுகிசிவம் பிள்ளையாரின் கதையோடு தொடர்புபடுத்துகிறார். பார்வதி தேவி ஊத்தையை உருட்டிவைத்திட்டு குளிக்கப்போன கதை இருக்கெல்லோ. இந்தப் பூமிக்கதையைத்தான் பழைய காலத்தில் இப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று. அதுவும் பொருத்தமாய்த்தான் இருக்கிறது. சீனாவிலிருந்து கிரேக்கம் வரை தென்னாபிரிக்கா, இந்தியா, ஒஸ்ரேலியா, எகிப்து உள்ளடங்கிய நீண்ட நிலப்பரப்புதான் முதலில் குளிர்ந்து உயிரினங்கள் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாகிய பகுதி. இப்பகுதியில்தான் ஓரறிவு உயிரினங்கள் தொடங்கி ஆறறிவு மனிதர்கள் வரை தோன்றியுள்ளன" கூறி முடித்தார் அப்பா.



அப்பப்பா சொன்னார், "பூமியின் சுழற்சியில் கேட்கும் ஓசை ஓம் என்ற பேரொலி. அதுதான் ஓம் என்ற சொல்லை தியான மந்திரமாக வைத்திருக்கிறார்கள்." "அப்படியா? எங்களுக்கே இப்பதான் தெரியுது" என்று சுந்தரேசும் திவ்யாவும் ஒருசேரச் சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

திவ்யா சிந்துவுடனும் ஆதியுடனும் ஒரு பரிசுப்பொருள் வாங்குவதற்காக நகைக்கடைக்குச் சென்றாள். அங்கு ஒரு முத்துமாலையைப் பார்த்து வாங்கித்தரும்படி அடம் பிடித்தாள் ஆதி. எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அழுதழுது வரும்போது காரிலேயே நித்திரையாகி விட்டாள். சிந்து கேட்டாள் "ஏனம்மா முத்து சரியான விலையா? தங்கத்தை விட விலையானதா?" திவ்யா சொன்னாள் "ஒரிஜினல் முத்து



தங்கத்தை விட விலை. தரத்துக்கேற்ற விலையிலிருக்கும். அது கடலில் விளைவதுதானே". "ஓ அப்படியோ. எல்லாக் கடலிலும் இருக்குமா?" சிந்து கேட்டாள். "எல்லாக் கடலிலும் விளையாது. அரேபியா, இந்தியா, சீனா, யப்பான், ஒஸ்ரேலியா, வெனிசூலா கடல்களில் கிடைக்கும். முன்பு வெள்ளைக்காரன் இந்தியா இலங்கையைப் பிடிச்சதுக்கு இந்த முத்தும் ஒரு காரணம்தான். முத்து கடலில் வாழும் முஷெல் என்ற சிப்பிக்குள் உருவாகும். அந்தச் சிப்பிக்குள் நுண்துகள்கள் புகுந்து கொண்டால் அந்த உறுத்தலைக் குறைக்க ஒருவகைப் பொருளை சுரக்குமாம். அது பசைபோன்று அத்துகள்களின்மீது பூசப்படும். இதுதான் முத்தாக உருவாகும். சுவாதி நட்சத்திரத்தில் சிப்பிக்குள் ஒரு துகளோ அன்றில் மழைத்துளியோ விழுந்தால் சிப்பி அதை உள்வாங்கி மூடிக்கொள்ளுமாம். அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலேயே விலை உயர்ந்த முத்து. அந்த முத்து உருவாக 15 அல்லது 16 வருடங்களாகுமாம்." "வாவ். அவ்வளவு வருடமா? அப்பாடி" என்றாள் சிந்து. 1804ஆம் ஆண்டு யப்பானைச் சேர்ந்த கொக்கிச்சி மிக்கிமோட்டோ என்பவர் செயற்கை முத்தைக் கண்டுபிடித்தார். முஷெல் ஓட்டிலிருந்து செய்யப்பட்ட பளபளப்பான நுண்துகளை இன்னொரு முத்துச்சிப்பியின் ரிசுயுவால் சுற்றி முத்துச்சிப்பியின் உடலுக்குள் செலுத்துவார்கள். இந்தச் சிப்பிகள் ஒரு கூட்டினுள் இடப்பட்டு நீருக்குள் இறக்கி விடப்படும். 3 தொடங்கி 6 வருடங்களுக்குப் பிறகு முத்து உருவாகிவிடும். இந்த முத்துகள் கொஞ்சம் விலை குறைவு. என்றாலும் சில முத்துகள் நாளடைவில் பழுப்பு நிறமாகிவிடும். எனக்கு அம்மா நல்ல விலை கொடுத்து ஒரு முத்து செயின் வாங்கித் தந்தவ. கனகாலம் நல்லாய்த்தான் இருந்திச்சு. இப்ப கிட்டடியில் ஒருநாள் பார்த்தன் கொஞ்சம் பழுப்பாயிட்டுது." திவ்யா கூறி முடித்தாள். "நாங்க கடைகளில் வாங்குகின்ற மாலைகளில் இருக்குமே முத்து அதென்னம்மா?" சிந்து கேட்டாள். "ஓ அதுவா. அது சும்மா மலிவான பிளாஸ்ரிக் முத்து. கெதியில் மேலே இருக்கிற பளபளப்பான பகுதி உரிந்துவிடும். இந்தக் கடையில் ஒருக்கா இறங்கி ஒரு பிளாஸ்ரிக் முத்துமாலை வாங்கி வாறன். நீங்க காருக்குள் இருங்கோ" கூறி ஒரு மாலை வாங்கிவந்தாள் திவ்யா. "இதுவும் வடிவாய்த்தானே இருக்கு. இது போதும்தானே ஆதிக்கு" என்றாள் சிந்து.

ஜீவன் கேட்டான், "உங்களுக்கு யாருக்குத் தெரியும் HOME என்றதன் மீனிங்

H - Health
O - Offspring
M - Mercy
E - Energy.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவும் உள்ள இடந்தான் ஹோம்". "அதென்ன ஒஃவ்சிபிறிங்." யுகி கேட்க,

"அதுவா? அப்படியென்றால் பிள்ளைகள்" என்றான். "ஆரோக்கியம், பிள்ளைகள், அன்பு, சக்தி இவ்வளவும் ஒரு வீட்டிலிருக்க வேண்டும். நல்லாயிருக்கு என்ன?" என்றார்கள் எல்லாருமே.




ஒருநாள் பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த அப்பா "இப்ப எங்கை பார்த்தாலும் நிலநடுக்கம் அல்லது கடல்கோள் இப்படி ஏதாவது வந்து கொண்டிருக்குது" என்று ஆரம்பித்தார். "கடல்கோள் என்றால் என்னப்பா?" எனக் கேட்டுக்கொண்டு ஒவ்வொருத்தராய் வந்து கூடினர். "அப்படியென்றால் ஆழிப்பேரலை. அதாவது சுனாமி" என்றாள் திவ்யா. அப்பப்பா வேடிக்கையாகச் சொன்னார் "நாங்கள் கடலுக்குப் போனால் அதற்குப் பெயர் வோக்கிங் அல்லது பொழுதுபோக்கு. கடல் எங்களிட்டை வந்தால் அதுதான் சுனாமி." "கடல்கோள், ஆழிப்பேரலை என்றது தமிழ்ச்சொல். சுனாமி என்றது யப்பானியச் சொல். யப்பானில் அடிக்கடி நடப்பதால் சுனாமி என்ற சொல்லே பாவனையில் வந்திட்டுது. கடலில் வாற நிலநடுக்கமே இந்த சுனாமி" என்று விளங்கப்படுத்தினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்யா. "நிலத்தில் ஏற்பட்டால் நிலத்திலுள்ளவை, உதாரணத்துக்கு கட்டிடங்கள் அதிர்ந்து விழுந்து சேதம் உண்டாகும். கடலில் வந்தால் கடல் ஆழத்திலுள்ள நிலத்தட்டுகளின் அசைவு பெரிய அலைகளை உருவாக்கும். முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. அதன் மீதுதான் பூமி இருந்தது. பின் நிலநடுக்கங்களால் கண்டங்களாகப் பிரியப் பிரிய பல நிலத்தட்டுகள் உருவாகி ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு கண்டம் இருக்கத் தொடங்கியது. முதல் சுனாமி கி. மு. 365 யூலையில் எகிப்தில் அலெக்சாண்டிரியாவில் ஏற்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். யப்பான், இந்தோனேஷியாவில் அடிக்கடி வரும். 2004இல் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியாவில் வந்து பெரிய அழிவு ஏற்பட்டது" கூறினார் அப்பா. ''கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை பார்க்கச் சென்ற ஒரு புகைப்படக் கலைஞர் அந்தநேரத்தில் ஒரு படம் எடுத்திருந்தார். பாறைக்கு கொஞ்சம் தள்ளி திருவள்ளுவருக்கு பாறைமேல் 133அடி உயர சிலை இருந்தது. அந்தச் சிலையை மூடி அலைகள் உயரே எழுந்ததைப் படம் எடுத்திருந்தார். என்னப்பா" என்றாள் திவ்யா. "ஏன் கன காலத்துக்கு முதல் மாமல்லபுரத்தில் கடலில் மூழ்கின சிற்பக்கோயில்கள் அந்தநேரம் தெரிந்ததாக பக்கத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த தொல்பொருள் துறையினர் கண்டதாகவும் அதுகூட படமெடுக்கப்பட்டு பத்திரிகையில் வந்ததே" என்றார் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த சுனாமியிலை ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் அநாதைகளாகவும் ஆக்கப்பட்டிருந்தார்கள். உலகத்தில் இயற்கை அழிவு ஒருபக்கம், செயற்கையாய் போர் ஒரு பக்கம். எவ்வளவு குழந்தைகள் ஒரேநாளில் எல்லாவற்றையுமே இழந்து நிராதரவாய் நிற்கின்றார்கள். நீங்க எல்லாம் அப்படி ஆதரவற்றவர்களுக்கு உதவத் தயாராயிருக்க வேணும். ஆதரவற்றவர்களுக்கு உதவி கல்வி கொடுப்பது ஒரு கோயில் கட்டுவதை விட விசேஷமானது. நீங்க மூன்று பேருமே அப்படி உதவுகிற பிள்ளைகளாக இருக்கவேணும். நீங்க படிச்சு நல்லாய் வந்தால் போதும் என்று சுயநலக்காரர்களாக வளரக்கூடாது. இலங்கைக் குழந்தைகளுக்கு என்றில்லை. உலகில் எந்தக் குழந்தைகளுக்கு என்றாலும் கல்விக்கு உதவ வேணும். கல்வி இருந்தால் அவர்கள் எல்லாவற்றையுமே தேடிக்கொள்ள முடியும். இரக்கமுள்ளவர்களாக வாழ்க்கையை ஒரு அர்த்தமானதாக அமைத்துக்கொள்ள வேண்டும். சாப்பிடுறதும் எங்களுக்கான பொருட்கள் வாங்குறதும் வெட்டிப்பேச்சு பேசுறதும் எங்களுக்காகவே வாழுறதும் அல்ல வாழ்க்கை. மற்றவர்களுக்கு எங்களாலை முடிந்த உதவிகளைச் செய்து அவர்களுக்கு வாழ வழிகாட்டுறதும்தான் உண்மையான நிறைவான வாழ்க்கை" என்று அப்பா கூறி முடித்தார்.

"அப்பா நீங்களும் அம்மாவும் எங்களுக்கு வாழ்ந்து காட்டுகிறீங்க. அதுதான் எங்களுக்கு வழிகாட்டி. நாங்க நான்கு பேரும் உங்கள் வழியிலை அர்த்தமுள்ள வாழ்க்கை வாழுவமப்பா" தம்பி தங்கைகளின் சார்பாக ஜீவன் உறுதி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகளுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப்பற்றி...



கமலினி கதிர்

இலங்கை யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் படித்து, திருமணத்துக்குப்பின் கொழும்பில் வாழ்க்கையைத் தொடர்ந்தேன். நாட்டின் இனக்கலவரம் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் தமிழ் ஆங்கிலத் தட்டெழுத் தாளராக எழுதுவினைஞராக காசாளராக ஆசிரியை யாக என்று பலதரப்பட்ட பணிகள் ஆற்றி கடந்த பதினைந்து ஆண்டுகளாக சூரிச் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருகிறேன். சூரிச்சில் பன்னிரண்டு வருடங்களாக தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றும் நான் சிறுவயதிலிருந்தே எழுத்துத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு தாயகத்தில் வெளிவரும் வீரகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் எழுதியவையெல்லாம் காற்றோடு கரைந்துபோக புலம்பெயர் தேசத்தில் மீண்டும் எழுத்துத்துறையில் ஈடுபட்டேன். இலங்கை வானொலி 'வாலிப வட்டம்', 'இசையும் கதையும்' போன்றவற்றில் நான் இளம் வயதில் எழுதியவற்றை ஒலிபரப்பி என்னை ஊக்குவித்தார்கள்.

சுவிஸில் பல சஞ்சிகைகளில் சிறுகதைகள் கவிதைகள், கட்டுரைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுப் பலராலும் பாராட்டப்பட்டன. முருகனைப்பற்றிய எனது பாடல்கள் இறுவட்டும் 'ஒரு வீணை அழுகின்றதே' என்ற சிறுகதைத் தொகுப்பும் 'எந்தன் குரல் கேட்கிறதா' என்ற கவிதைத் தொகுப்பும் சுவிஸில் வெளியிடப்பட்டு அவற்றால் கிடைக்கப்பெற்ற பணம் தாயகத்தில் வாழ்வாதாரம் இழந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சிறுவர்களுக்கான பாடல்கள் நூல் வெளியிடும் நிலையில் உள்ளது.

எத்தனையோ பெண்களின் திறமை குடும்பப் பொறுப்பு என்ற சுமையால் அவர்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறது. எந்த வயதிலும் எம் திறமையை நாம் வெளிக்கொணரலாம் என்பதற்கு நான் ஓர் உதாரணமாக இருக்கிறேன் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

கமலினி கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org